# உதயன்

www.onlineuthayan.com


32 பக்கங்கள் சுடர் 28 கதிர் 040 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 21 சனிக்கிழமை (05/01/2013) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00



## பிரதம நீதியரசர் மீதான குற்றப் பிரேரணை விவகாரம்

# மூவரடங்கிய சுயாதீனக் குழுவை அமைப்பதற்கு மஹிந்த தீர்மானம்

### ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர், சிரேஷ்ட வங்கியாளர், அரச அதிகாரி உள்ளடக்கம்; விசேட அறிவிப்பு விரைவில்



கொழும்பு, ஜனவரி 5

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் விசாரணை அறிக்கையை ஆராய்ந்து தமக்கு ஆலோசனை வழங்குவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்படவுள்ள சுயாதீனக் குழுவில் மூன்று நிபுணர்கள் உள்ளடங்குவர் என மிகவும் நம்பகரமாகத் தெரியவருகின்றது.

ஓய்வுபெற்றவர்களான உயர்நீதிமன்ற நீதியரசரொருவரும், சிரேஷ்ட வங்கியாளர் ஒருவரும், நிர்வாகச் சேவை மட்டத்திலான சிரேஷ்ட அதிகாரியொருவருமே மூவரடங்கிய இந்த சுயாதீனக் குழுவில் இடம்பெறுவர் எனத் தெரியவருகின்றது.

நீதிமன்றச் செயற்பாடுகள் தொடர்பில் பிரதம நீதியரசருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து மேற்படி குழுவில் இடம்பெறும் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் ஆராய்வார் என்றும், வங்கி நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுகளை சிரேஷ்ட வங்கியாளர் மேற்கொள்வார் என்றும் அறியமுடிகின்றது.

பார்க்க பக்கம் 4

## எலிக்காய்ச்சல் அபாய எச்சரிக்கை

கொழும்பு, ஜன.5

நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக 'லெப்டொஸ் பைரோஸிஸ்' எனும் எலிக்காய்ச்சல் அபாயம் தோன்றியுள்ளதாகவும் ஆகையால் பொதுமக்களை மருத்துவ ஆலோசனைகளின்படி நடந்துகொள்ளுமாறும் தொற்றுநோய் மருத்துவப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

பார்க்க பக்கம் 4

## கதிர்காமத்தில் மஞ்சள், சிவப்பு மழை

கொழும்பு,ஜன 5

கதிர்காமம், கந்தபார மற்றும் நாகஹ ஆகிய கிராமங்களில் நேற்று வெள்ளிக்கிழமை மஞ்சள் மற்றும் சிவப்பு மழை பெய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மழையின் போது சேகரிக்கப்பட்ட நீர், பரிசோதனைக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது என்று கதிர்காமம் சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் அஜித் டி சில்வா தெரிவித்தார். (த)

## கலைப்பீட பரீட்சைகள் 16 இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.5

யாழ்.பல்கலைக்கழகக் கலைப்பீட முதலாம் வருட மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள் எதிர்வரும் 16 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக யாழ். பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி பேராசிரியர் வி.பி. சிவநாதன் தெரிவித்தார்.

முதலாம் வருட மாணவர்களுக்கே இந்தப் பரீட்சைகள் ஆரம்பமாகின்றன. தொடர்ந்து ஏனைய வருடங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் பரீட்சைகள் ஆரம்பமாகும்.

பரீட்சைகளைத் தொடர்ந்து பல்கலைக்கழகத்தின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவர்களும் விரைவில் விடுவிக்கப்படுவார்கள்

பார்க்க பக்கம் 4

## நடுக்கடலில் இலங்கையர் 46 பேர் மீட்பு

கொழும்பு, ஜன.5

இந்தோனேஷியாவின் சுமத்திரா தீவுக்கு அப்பால் 330 கடல் மைல் தொலைவில் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்ததாகக் கூறப்படும் இலங்கைக்குச் சொந்தமான கப்பலில் இருந்து 46 புகலிடக் கோரிக்கையாளர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

ஆஸ்திரேலியாவுக்குச் செல்லும் முயற்சி தோல்வியடைந்த நிலையில் சுமத்திராவுக்கு அப்பால் 330 கடல் மைல் தொலைவில் இவர்கள் தத்தளித்துக் கொண்டிருந்த நிலையிலேயே காப்பாற்றப்பட்டுள்ளனர்.

அண்மையில் ஆஸ்திரேலியா போய்ச் சேர்ந்த புகலிடக் கோரிக்கையாளர் ஒருவர் வழங்கிய தகவலின்

பார்க்க பக்கம் 4

## சபையில் விவாதம் நடத்தினால் சபாநாயகர் மீது நடவடிக்கை

### அரசமைப்பில் இடமுண்டு என்கிறார் சிரேஷ்ட சட்டத்தரணி

கொழும்பு, ஜன.5

''சட்டவலுவற்றது என மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள தெரிவுக்குழு அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தினால், நீதிமன்றத்தின் தீர்ப்பை அவமதித்தார் என்று சபாநாயகருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அரசமைப்பு சாசனத்தில் இடமுண்டு.''

இவ்வாறு சட்டத்தரணிகள் கூட்டமைப்பின் பிரதிநிதியும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான கருணாரத்ன ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பு நிப்பொன் ஹோட்டலில் நேற்று இடம்பெற்ற ஜனநாயகத்திற்கான மக்கள் இயக்கத்தின் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:-

''திவிநெகும' (வாழ்வின் எழுச்சி) சட்ட வரைவு தொடர்பான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு கடந்த நவம்பர் மாதம் 31ஆம் திகதி வழங்கப்பட்டது. டிசெம்பர் மாதம் முதலாம் திகதியே

பார்க்க பக்கம் 4

## நேற்று மட்டும் 6 பேருக்கு டெங்கு

யாழ்ப்பாணம், ஜன.5

நேற்று வெள்ளிக்கிழமை மட்டும் 6 பேர் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த வருடம் முதல் நான்கு நாள்களில் மாத்திரம் 11 பேர் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பார்க்க பக்கம் 4

## மேன்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்புக்கு ஆதரவாக திங்களன்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜன.5

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை மதித்து, அதனை ஏற்று அரசு உடனடியாகச் செயற்படவேண்டும் என்பதற்காக அதற்கு உச்சக்கட்ட அழுத்தங்களைக் கொடுக்கும் நோக்கில் ஜனநாயகத்துக்கான மக்கள் இயக்கம், கொழும்பில் மாபெரும் பேரணியொன்றை நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடத்தவுள்ளது.

இந்தப் போராட்டப் பேரணியில் பங்குகொள்ள நாட்டிலுள்ள அனைவரும் அரசியல் கட்சிபேதம், இன, மத பேதமின்றி ஒன்றுதிரள வேண்டும் என்று அந்த இயக்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் கொழும்பு நிப்பொன் ஹோட்டலில் நேற்று இடம்பெற்ற ஜனநாயகத்துக்கான மக்கள் இயக்கத்தின் ஊடகவியலாளர் சந்திப்பின்போது நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்ததாவது:-

பார்க்க பக்கம் 4

## ஆள்கடத்தல் தடுப்புக் குறித்து கனடா இலங்கையுடன் பேச்சு

கொழும்பு,ஜன 5

ஆள்கடத்தல் சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இலங்கை மற்றும் கனேடிய அதிகாரிகளுக்கு இடையில் முக்கிய கலந்துரையாடலொன்று இடம்பெறவுள்ளது.

இவ்வார இறுதியில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறும் என இலங்கையில் உள்ள கனேடிய தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளவென கனடாவின் குடியுரிமை, குடிவரவு மற்றும் பல்லினப் பண்பாடு அமைச்

பார்க்க பக்கம் 4

## சுதந்திரக் கட்சி ஏற்பாடு செய்யும் மாநாட்டுக்கு யாழ். பட்டதாரிகள்

யாழ்ப்பாணம், ஜன.5

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இலங்கை சுதந்திரப் பட்டதாரிகள் மாநாட்டில், யாழ்.மாவட்டத்தில் உள்ள பட்டதாரிப் பயிலுநர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அழைப்புக் கடிதங்கள் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இலங்கைச் சுதந்திர பட்டதாரிகள் மாநாடு எதிர்வரும்

பார்க்க பக்கம் 4

## சம்பந்தனுக்கு எதிராக அரசு சட்ட நடவடிக்கை

### பிரதி சபாநாயகர் கூறுகிறார்

கொழும்பு,ஜன 5

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் ஆகியோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் அனுமதியின்றி மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் சாட்சியம் அளிக்கச் சென்றமையால் அவர்கள் நாடாளுமன்றச் சிறப்புரிமையை மீறி நாடாளுமன்றத்தை அவமதித்துள்ளார்கள் என்ற குற்றச்சாட்டு முன்வைப்பதற்கான சாத்தியம் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் நாடாளுமன்றத்தின் நிலையியற் கட்டளையின் 17ஆவது சரத்தின்படி நாடாளுமன்றத்தை அசௌகரியங்களுக்கு உள்ளாக்கினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இந்த இருவருக்கும் எதிராக நாடாளுமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டு கொண்டுவர முடியுமெனவும் அவர் கூறினார்.

பார்க்க பக்கம் 4

## அகதிகள் விடயத்தில் இலங்கை அரசின் செயற்பாடு போதாது

ஜெனிவா,ஜன 5

இந்தியாவிலிருந்து நாடு திரும்புவதை இலங்கை அகதிகள் சாதகமாகப் பரிசீலிக்கும் நிலைமையை உருவாக்குவதற்கு இலங்கை அரசு முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் நிறைய இருப்பதாக ஐக்கிய நாடுகள்

பார்க்க பக்கம் 4

## வடக்கில் உயரதிகாரிகளுக்கு ஜனவரி 15 முதல் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜன.5

வடக்கு மாகாணத்தில் இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் முக்கிய உயர் அதிகாரிகளுக்கான நியமனங்களும், இடமாற்றங்களும் எதிர்வரும் ஜனவரி 15ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

இதற்கான அனுமதி வடக்கு மாகாண ஆளுநரிடம் இருந்து கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

புதிய பட்டியலின் பிரகாரம் ஆறுமுகம் இராஜேந்திரன் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் நிர்வாகத்துக்கான மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகவும், குலவீரசிங்கம் பிறேமகாந்தன் வடக்கு மாகாண கல்வித்

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்புணர்வு, துஷ்பிரயோகம் குறித்து 6 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், ஜன.5

சிறுமிகள் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டமை, பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பில் கடந்தவாரம் 6 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதென யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் 5 முறைப்பாடுகளும் கிளிநொச்சியில் ஒரு முறைப்பாடும் பதிவாகியுள்ளன.

மண்டைதீவில் 4வயதுச் சிறுமி வன்புணர்வு செய்யப்பட்டுப் பின்னர் கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. சம்பவ இடத்தில் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் எனக் கூறி நடமாடியவர் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார். விசாரணைகளின் மூலமாக அவர் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர் இல்லையென்பதும், குற்றச் செயலுடன்தொடர்பு படவில்லை என்பதும் தெரியவந்தது. பொலிஸார்சம்பவம் தொடர்பில் விசாரணை செய்து வருகின்றனர்.

யாழ். பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பதின்ம வயதுச் சிறுமி அவரது தந்தையால் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார் என்றும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சந்தேக நபர் தற்போது வெளிமாவட்டத்தில் உள்ளார். விரைவில் அவர் கைது செய்யப்படுவார்.

யாழ். பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மற்றொரு பதின்மவயதுச் சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் சிறுமியின் தந்தை கடந்த 29ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். நகரில் வைத்து 15 வயதுச் சிறுமியை அவரது பாது காவலர்களிடமிருந்து கடத்திச் சென்ற சம்பவம் கடந்தவாரம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. விசாரணைகளின் மூலம் கடத்திச் சென்ற நபர் இனங்காணப்பட்டார். யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்குச் சென்ற பொலிஸார் அங்கு வீடு ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறுமியை மீட்டனர்.

சிறுமியைக் கடத்திய நபரும் அந்த வீட்டு உரிமையாளரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கிடையே காதல் தொடர்பு இருந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும் பெண் பதின்ம வயதுச் சிறுமி என்பதால் அது சட்டத்துக்கு முரணானது என்ற அடிப்படையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பதின்மவயதுச் சிறுமி ஒருவர் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். கடந்த 27ஆம் திகதி சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியில் கடந்த ஏப்ரல் மாதம் பதின்மவயதுச் சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் கடந்தவாரம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டதன் அடிப்படையில் 3பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்--என்றார். (த-4)

## கட்சித் தலைவர்களின் அவசர கூட்டம் 8 ஆம் திகதி

இந்த வருடத்துக்கான நாடாளுமன்ற அமர்வுகள் எதிர்வரும் 8ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு முதல் தடவையாக இடம்பெறவுள்ளநிலையில், அன்று காலை கட்சித் தலைவர்களின் முக்கிய கூட்டமும் நடைபெறவுள்ளது.

குற்றப் பிரேரணை விசாரணை அறிக்கை மீதான விவாதத் திகதி உட்பட முக்கிய சில விடயங்கள் தொடர்பில் இதன்போது ஆராயப்படவுள்ளன. அத்துடன், நாடாளுமன்றத் தெரிவுக் குழு குறித்தான உயர்நீதிமன்றத்தின் பொருட்கோடல் தொடர்பிலும் கலந்துரையாடல் இடம்பெறும் எனத் தெரியவருகின்றது.

அதேவேளை, நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பிலான உயர்நீதிமன்றத்தின் சட்ட வியாக்கியானத்திற்கு அன்றைய தினம் நாடாளுமன்றில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ விசேட அறிவிப்பொன்றை விடுக்கவுள்ளார்.

இதற்கிடையில் 'திவி நெகும' திணைக்கள சட்ட வரைவும் திருத்தங்களுடன் நாடாளுமன்றத்துக்கு அரசால் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

## தேரரை மச்சான் என்றவர் கைது!

கொழும்பு, ஜன.5

பஸ்ஸுக்காகக் காத்திருந்த தேரர் ஒருவரின் தோளில் கையை போட்டு "எப்படி மச்சான்" என்று அழைத்தவரை பொலிஸார் கைதுசெய்த சம்பவமொன்று இரத்தினபுரி பஸ் நிலையத்தில் இடம் பெற்றுள்ளது.

பஸ்ஸுக்காகக் காத்திருந்த தேரர் ஒருவரின் தோளில் கையைபோட்ட பஸ்ஸின் சாரதியே "எப்படி மச்சான்" என்று அழைத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் தேரர் பொலிஸாரின் கவனத்திற்குக் கொண்டு வந்ததையடுத்தே பஸ்ஸின் சாரதி சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தின்போது மேற்படி பஸ் சாரதி மது போதையில் இருந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (த-சி)

## கடந்த வாரம் மட்டும் 61 பேர் யாழ்ப்பாணத்தில் கைது

யாழ்ப்பாணம், ஜன.05

நீதிமன்றங்களினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 22பேர் உட்பட 61பேர் யாழ். மாவட்டத்தில் கடந்த வாரம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ். பிராந்தியப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நீதிமன்றங்களினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 22பேரும், சட்டவிரோதமாக மது விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 19 பேரும், சட்டவிரோத கசிப்பு உற்பத்தி செய்த குற்றச்சாட்டில் ஒருவரும் மதுபோதையில் வாகனம் செலுத்திய 4பேரும் சூழல் மாசடையும் வகையில் செயற்பட்ட 2 பேரும் பொது இடத்தில் மதுபோதையில் இடையூறு விளைவிக்கும் வகையில் நடந்து கொண்ட 15 பேரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாகக் கசிப்பு உற்பத்தி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபர் வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்தவர்.

அவரிடமிருந்து 176 லீற்றர் கோடாவும், 4.5 லீற்றர் கசிப்பும், கசிப்பு உற்பத்தி செய்வதற்கான உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன- என்றார். (த-4)

## ஆட்கடத்தல் தடுப்புக் குறித்து கனடா இலங்கையுடன் பேச்சு

கொழும்பு,ஜன 5

ஆட்கடத்தல் சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இலங்கை மற்றும் கனேடிய அதிகாரிகளுக்கு இடையில் முக்கிய கலந்துரையாடலொன்று இடம்பெறவுள்ளது.

இவ்வார இறுதியில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறும் என இலங்கையில் உள்ள கனேடிய தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்தப் பேச்சில் கலந்துகொள்ளவென கனடாவின் குடியுரிமை, குடிவரவு மற்றும் பல்லினப்பண்பாடு அமைச்சர் ஜேசன் கென்னி இலங்கை வரவுள்ளதாக கனேடிய தூதரகப் பேச்சாளர் குறிப்பட்டார்.

கனடாவில் புகலிடக் கோரிக்கையாளர்கள் சட்டத்தில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் இலங்கை - கனடாவுக்கு இடையில் பேச்சு இடம் பெறவுள்ளது.

2010ஆம் ஆண்டு 500 இலங்கை அகதிகளை ஏற்றிய படகு கனடா சென்றது. அதில் 340 பேரின் புகலிடக் கோரிக்கை ஏற்கப்பட்டுள்ளது. 13 சதவீதமானோரின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

போர் காரணமாக இலங்கையைக் கைவிட்டுச் சென்ற பல தமிழர்கள் கனடாவில் வசித்து வருகின்றனர்.

இந்த நிலையில் இலங்கை வரும் கனேடிய அமைச்சர் ஜேசன் கென்னி, ஆட்கடத்தல் மற்றும் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் கனடாவின் பங்கு என்பவை குறித்து இலங்கை அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளார்.(த)

## உடுவில், சுதுமலை பகுதியில் அதிகரிக்கும் திருட்டுகள்

யாழ்ப்பாணம் ஜன.5

உடுவில், சுதுமலை தெற்குப் பகுதிகளில் இடம் பெற்ற கொள்ளை, திருட்டுச் சம்பவங்களில் 15 ஆயிரம் ரூபா பணமும் ; உடைமைகளும் பறி போய் உள்ளன.

உடுவில் அம்பலவாணர் வீதியில் கடந்த முதலாம் திகதி வீதியால் சென்று கொண்டிருந்த யுவதியிடம் இருந்து சங்கிலி கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பி ஓட முற்பட்டுள்ளார். எனினும் யுவதி அவருடன் சண்டையிட்டு சங்கிலியை மீட்க முற்பட்டுள்ளார். இதனால் சங்கிலியின் ஒரு பகுதியை மட்டும் திருடன் அறுத்துக் கொண்டு தப்பி ஓடிவிட்டான். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுதுமலை தெற்கு ஐங்கரன் வீதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் 15 ஆயிரம் ருபா பணம், பெறுமதியான இரண்டு கைத்தொலைபேசிகள் என்பவற்றை திருடிச்சென்றுள்ளனர். என்று தெரிவிக்கப்படடுள்ளது. (த-4)

## 21 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள், உடைமைகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஜன.05

யாழ். குடாநாட்டில் கடந்த வாரம் இடம்பெற்ற திருட்டு, கொள்ளைச் சம்பவங்களில் சுமார் 20 லட்சம் ரூபா, நகைகள் உட்பட 21 லட்சத்து 11 ஆயிரத்து 810 ரூபா பெறுமதியான உடைமைகள் திருடப்பட்டுள்ளன என்று யாழ். பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்தவாரம் யாழ். குடாநாட்டில் இடம்பெற்ற பாரிய குற்றச் செயல்களில் திருட்டு, கொள்ளை என 9 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அவற்றில் 4 முறைப்பாடுகள் 19 லட்சத்து 65ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் தொடர்பானவை.

அதிக அளவில் மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 10 லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளன. வீடு உடைத்து இந்தத் திருட்டுகள் இடம் பெற்றுள்ளன.

யாழ். கஸ்தூரியார் வீதியில் கடந்த 20ஆம் திகதி வீடு உடைத்து 6 லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான நகை மற்றும் உடைமைகள் திருடப்பட்டுள்ளன.

காரைநகர் மடத்தடி வீதியில் கடந்த 20ஆம் திகதி 2 லட்சத்து 25ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளன.

யாழ். முனீஸ்வரன் வீதியில் கடந்த திங்கட்கிழமை வீதியால் சென்றுகொண்டிருந்த பெண் அணிந்திருந்த ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலி கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டில் தெஹியந்தக்கண்டியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் தொழில் நிமித்தம் யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ளார். அவரிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட சங்கிலி மீட்கப்பட்டது. அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

யாழ். நாவலர் வீதியில் வீடு உடைத்து 24ஆயிரத்து 130ரூபா பெறுமதியான உடைமைகள் திருடப்பட்டுள்ளன. சங்கானையில் கடந்த 27ஆம் திகதி 8ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

கரம்பன் சண்முகநாதன் பாடசாலையில் இருந்து டி.வி.டி. பிளேயர், வயர்கள் உட்பட 53ஆயிரத்து 680 ரூபா பெறுமதியான உடைமைகள் திருடப்பட்டுள்ளன.

அளவெட்டி மேற்கில் கடந்த 28ஆம் திகதி தேவாலாயம் ஒன்றிலிருந்து 28 ஆயிரம் ரூபா பெறுமதியான உடைமைகள் திருடப்பட்டுள்ளன.

இளவாலை பண்டத்தரிப்பில் கடந்த திங்கட்கிழமை 23ஆயிரம் ரூபா பெறுமதியான தொலைக்காட்சி திருடப்பட்டுள்ளது. சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் - என்றார். (த-4)

## சத்துணவுகளை களவாடிய திருடர்கள்

சாவகச்சேரி, ஜன. 5

வரணிப் பொதுநோக்கு மண்டபத்தை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த போஷாக்கு உணவுகளை எடுத்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு வரணி கரம்பைக்குறிச்சியில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி பொதுநோக்கு மண்டபக் கட்டடத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகின்றது.

சிறுவர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மாருக்கு இங்கு வைத்துப் போஷாக்கு உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் நேற்று முன்தினம் மண்டபத்துக்குள் புகுந்த திருடர்களால் மண்டபக் கதவுகள் உடைத்துச் சேதப்படுத்தப்பட்டுள்ளதுடன் பெருமளவு போஷாக்கு உணவுகள் களவாடப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (-16-9)

## உருக்குலைந்த நிலையில் இளம் பெண்ணின் சடலம்

சண்டிலிப்பாயைச் சேர்ந்த 27 வயதுடைய இளம்பெண் ஒருவரின் சடலம் உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது. காரைநகரில் பாழடைந்த கிணறு ஒன்றிலிருந்து நேற்று முன்தினம் இந்தப் பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் 6ம் திகதி காணாமல்போன மனநலம் பாதிக்கப்பட்ட இராசதுரை கஜேந்தினி (வயது -27) என்ற பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தப் பெண் கடந்த மாதம் 7ஆம் திகதி காரைநகர் கலையடிச்சந்தியில் உள்ள கோயில் ஒன்றில் இரவு 9 மணியளவில் இருந்துள்ளார். குறித்த பெண்ணை விசாரித்த மக்கள் அவர் தெரிவித்த முரண்பாடான தகவல்களையடுத்து அப்பகுதிக் கிராம சேவகருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

கிராம சேவகர் ஊடாக வட்டுக்கோட்டை பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. வட்டுக்கோட்டைப் பொலி ஸாரும் கிராம சேவகரும் குறித்த பெண்ணை ஓட்டோவில் ஏற்றிக் காரைநகர் வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றுள்ளனர்.

இரவு 9 மணியளில் காரைநகர் வைத்தியசாலையிலிருந்த வைத்தியர் குறித்த பெண்ணை வைத்தியசாலையில் ஏற்க மறுப்புத் தெரிவித்ததாகவும் இதனால் பொலிஸார் இரவு 12 மணிவரை இந்தப் பெண்ணை ஓட்டோவில் கொண்டு திரிந்ததாகவும், இறுதியில் அதிகாலை ஒரு மணியளவில் குறித்த பெண் காரைநகர் வலந்தலைச் சந்தியில் இறக்கி விடப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. இதன்பின்னர் அவர் காணாமல்போயுள்ளார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை, மக்கள் நடமாட்டமற்ற காட்டுப் பகுதியில் உள்ள கிணற்றிலிருந்து சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலம் மிக மோசமாக உருக்குலைந்த நிலையில் காணப்படுகிறது.

இந்தப் பெண் வன்புணர்வுக்குப் பின்னர் கொலை செய்யப்பட்டமைக்கான சாத்தியக் கூறுகள் காணப்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.(த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதாந்த கட்டணம் செலுத்தாவிடின் உடனடியாகவே மின்சாரம் துண்டிப்பு

## நடைமுறைகளை இறுக்கமாக்குகிறது மின்சார சபை

யாழ்ப்பாணம்,ஜன.5

*மின் பாவனையாளர்களுக்கான மின் கட்டண நடவடிக்கைகள் இந்த வருடம் தொடக்கம் மேலும் இறுக்கமடைகிறது. சுன்னாகம் மின் பொறியியலாளர் ஞானகணேசன் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-*

மின் பாவனையாளர் மின் கட்டணத்தை மாதாந்தம் செலுத்தத் தவறின் உடனடியாக மின்துண்டிப்பு மேற்கொள்ளப்படும். அதற்கான நடவடிக்கைகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

இந்த நடவடிக்கையை இந்த வருடம் ஆரம்பத்திலிருந்து நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

கடந்த காலங்களில் மின் கட்டணம் செலுத்தத் தவறினால் மின்சாரசபையால் சிவப்பு எச்சரிக்கை இறுதி அறிவித்தல் அனுப்பப்படுவது வழமை.

அதன் பின்னர் கட்டணம் செலுத்தத் தவறினால் மட்டுமே மின்துண்டிப்பை மேற்கொண்டு வந்தோம்.

இந்த வருடம் மின்கட்டணத்துக்கான நடைமுறைகள் மிகவும் இறுக்கமடையவுள்ளது.

இதற்காகப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் பத்திரிகைகளிலும் விளம்பரங்களை வெளியிடவுள்ளோம்.

அத்துடன் வீடுகளில் மீற்றரில் மின்வாசிப்பு வாசிக்க செல்லும் மின் ஊழியர்களாலும் விழிப்புணர்வை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் 3 மாதமாக நிலுவையிலிருக்கும் மின்கட்டணத்தை இந்த வருடம் வசூலிக்கவுள்ளோம். இதற்கான நடவடிக்கைகளை மின்சாரசபை ஊழியர்கள் மேற்கொண்டு வருகின்றார்கள். என்று மேலும் தெரிவித்தார். (ம-13)

யாழ்.போதனா வைத்தியசாலையில்

## நோயாளர் அதிகரிப்புக்கு ஏற்ப புதிய தொண்டர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், ஜன.5

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள நோயாளர் அதிகரிப்புக்கு ஏற்ப அவர்களின் வைத்திய தேவைகளுக்காக சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவால் புதிய தொண்டர்கள் 20 பேர் இணைக்கப்பட்டுள்ளார்கள்.

யர்ழ்.போதனா வைத்தியசாலையில் அண்மைக்காலமாக விபத்து மற்றும் திடீர் நோய்கள் போன்றவற்றால் நாளாந்தம் அதிக எண்ணிக்கையான நோயாளர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் ஏற்கனவே 150 இற்கும் மேற்பட்ட தொண்டர்கள் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவின் ஊடக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

எனினும் நோயாளர் நெருக்கடிக்கு ஏற்ப தொண்டர்களுக்கு ஏற்பட்ட பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் நோக்குடன் கடந்த மாதம் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவால் நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வுக்கு ஏற்ப புதிதாக 20 தொண்டர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவால் வைத்தியசாலைத் தொண்டர்களாக 125 பேரும் பராமரிப்புத் தொண்டர்களாக 50 பேரும் என்று 175 தொண்டர்கள் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்தத் தொண்டர்கள் வைத்தியசாலையின் விடுதிகள் ஏனைய சிகிச்சை நிலையங்கள் போன்றவற்றுக்கு தொண்டர்களாகப் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

நோயாளர்களின் தேவைக்கு ஏற்ப காலை 7 மணி தொடக்கம் மாலை 5 மணிவரையும் இரவு நேரக் கடமை செய்யும் தொண்டர்களாகவும் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-14)

## சுன்னாகம் சங்கப் பணியாளர் போராட்டம் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜன.5

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் தலையீட்டை அடுத்து நேற்று வெள்ளிக்கிழமை கைவிடப்பட்டது.

நேற்றுக்காலை சங்கத்தின் தலைமை அலுவலகத்துக்குச் சென்ற கூட்டுறவு உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் சங்கப் பணியாளர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில் பணியாளர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை ஏற்றுக் கொண்ட ஆணையாளர் இந்தக் கோரிக்கைகள் யாவும் இரண்டு மாதங்களுக்குள் நிறைவேற்றித் தரப்படும் என்றும் உறுதியளித்தார்.

பணியாளர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு, பணியாளர்களின் ஆளணி அங்கீகாரத்தைப் பெற்றுத் தருதல், கிளை விற்பனை நிலையங்களில் விற்பனைக்காகப் பொருள்களை வழங்குதல் உட்படப் பல கோரிக்கைகளை முன்வைத்துப் பணியாளர்கள் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தைக் கடந்த ஐந்து நாள்களாக மேற்கொண்டு வந்தனர்.

நேற்றுக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் தலையீட்டால் அவர்களின் போராட்டம் முடிவுக்கு வந்தது.

இதனை அடுத்து சங்கத்தின் கிளை விற்பனை நிலையங்கள் நேற்று வழமைபோல் திறக்கப்பட்டன. (த-17)

## றொக்க வியாபாரத்தில் ஈடுபட்ட பணியாளர்கள் கௌரவிப்பு



யாழ்ப்பாணம், ஜன.5

அளவெட்டி - மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கடந்த 2012 இல் கூடுதலான றொக்க வியாபாரத்தில் ஈடுபட்ட பணியாளர்களைப் பாராட்டிக் கௌரவித்துள்ளது.

இதில் 11 கிளை முகாமையாளர்களும் விற்பனையாளர்களும் பாராட்டப்பட்டுள்ளனர்.

அவர்கள் பரிசில்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.

சங்கத்தின் தலைவர் எஸ்.சிவயோகநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பணியாளர்களுக்கான பரிசுகளை வழங்கினார்.

சங்கத்தின் வளர்ச்சி மற்றும் அதன் எதிர்காலத்தைக் கவனத்தில் எடுத்து சங்கப் பணியாளர்கள் தமது றொக்க வியாபார நடவடிக்கைகளை மேலும் அதிகரிக்க வேண்டும் என்றும் உதவி ஆணையாளர் அருந்தவநாதன் தனது உரையில் கூறினார்.

இந்த றொக்க வியாபாரத்தின் அதிகரிப்பு மூலம் பணியாளர்களுக்கான ஊக்குவிப்புத் தொகையும் அதிகரித்து வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-17)

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் அரை நிரந்தர வீடுகள் அமைப்பு

யாழ்ப்பாணம், ஜன.5

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் கீழ் செயற்படும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் கடந்த வருட செயற் திட்டத்தில் 30 லட்சம் ரூபா நிதியுதவியில் 20 பேருக்கு அரை நிரந்தர வீடுகளும், மலசல கூடங்களும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை அடிப்படையிலும், பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் உட்பட 20 பயனாளிகள் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஜே/89 உதயபுரம் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்தக் குடும்பங்களின் வாழ்வாதார அடிப்படைத் தேவைகளுக்காக ஒவ்வொரு பயனாளிகளுக்கும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பெறுமதியான அரை நிரந்தர வீடுகள், மலசல கூடங்கள் என்பன அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

**20 பயனாளிகளுக்கான அரை நிரந்தர வீடுகளையும், மலசல கூடங்களையும் வழங்கியுள்ளது.**

கடந்த 32 வருடங்களாக நிவாரணச் செயற்திட்டங்களை மேற்கொண்டு வரும் இந்த நிறுவனம் 2009 ஆம் ஆண்டு முதல் மீள்குடியர்ந்த மக்களுக்கான வாழ்வாதார செயற்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதற்கமைவாகக் கடந்த வருடம் நல்லூர் பிரதேச செயலர் பிரிவு ஊடாக பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் உரிய பயனாளிகளைத் தெரிவு செய்து 20 பயனாளிகளுக்கான அரை நிரந்தர வீடுகளையும், மலசல கூடங்களையும் வழங்கியுள்ளது. (ம-14)

யாழ்.மாவட்டத்தில்

## ஐந்து வருட காலப் பகுதியில் 1, 821 பேருக்குக் காசநோய்

*யாழ்.மாவட்டத்தில் கடந்த 5 வருட (2008-2012) காலப்பகுதிக்குள் ஆயிரத்து 821 பேர் காச நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.*

*யாழ். மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி சி.யமுனானந்தா இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.*

*இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-*

*யாழ்.மாவட்டத்தில் கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான 5 வருட காலப் பகுதிக்குள் ஆயிரத்து 821 பேர் காச நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.*

*இவர்களில் ஆயிரத்து 662 பேர் பூரணகுணமடைந்துள்ளனர். அத்துடன் 72 பேர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளனர். இதேவேளை 40 பேர் சிகிச்சை பெறாமல் இடைநிறுத்தியுள்ளார்.*

*இந்த 5 வருட காலப்பகுதிக்குள் சிகிச்சை பெற்றவர்களில் 2008 ஆம் ஆண்டு சிகிச்சை பெற்ற380 பேரில் 358 பேர் குணமடைந்துள்ளனர். இத்துடன் 15 பேர் இறந்துள்ளனர். ஒருவர் தொடர்ந்து சிகிச்சை பெறாமல் இடைநிறுத்தியுள்ளார்.*

*2009 ஆம் ஆண்டு சிகிச்சை பெற்ற 348 பேரில் 316 பேர் குணமடைந்துள்ளதுடன் 15 பேர் இறந்தும் 10 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெறாமல் இடைநிறுத்தியுள்ளனர். 2010 ஆம் ஆண்டு சிகிச்சை பெற்ற 420 பேரில் 391 பேர் குணமடைந்துள்ளனர். அத்துடன் 16 பேர் இறந்தும் 10 பேர் தொடர்ந்து சிகிச்சை பெறாமல் இடைநிறுத்தியுள்ளனர்.*

*2011 ஆம் ஆண்டு சிகிச்சை பெற்ற 319 பேரில் 285 பேர் குணமடைந்துள்ளனர். அத்துடன் 13 பேர் இறந்தும் 8 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெறாமல் இடைநிறுத்தியும் உள்ளனர்.-எனவும் தெரிவித்துள்ளார். (ம-14)*

## திருநகர் வீட்டுத்திட்ட வீடுகளைத் திருத்தக்கடன்

யாழ்ப்பாணம், ஜன.05

யாழ் மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையால் திருநகரில் அமைத்துக் கொடுக்கப்பட்ட வீடுகளின் திருத்த வேலைகளுக்காக முதற்கட்ட காசோலைகள் புதுவருட தினத்தன்று வழங்கி வைக்கப்பட்டன.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் நோயல் ஜெயச்சந்திரன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திருநகரில் தேசிய வீடமைப்பு அதிகார சபையால் அமைத்துக் கொடுக்கப்பட்ட 38 வீடுகளில் 10 வீடுகள் திருத்த வேலைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளன.

இந்தத் திருத்த வேலைகளுக்காக வீடமைப்பு அதிகார சபையால் 32 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 10 வீடுகளுக்கும் முதற்கட்டமாக அனுமதிக்கப்பட்ட தொகையில் 10 வீதம் வழங்கப்பட்டது. வீடமைப்பு அதிகார சபையால் 1989 ஆம் ஆண்டு திருநகரில் 38 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. அதன் பின்னர் தற்போது திருத்த வேலைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளன.

இந்தக்கடன் தொகையைத் திருநகரில் உள்ள வீட்டுத் தொகுதியில் வைத்து மாவட்ட முகாமையாளர் நோயல் ஜெயச்சந்திரன் வழங்கினார்.

அதே வேளை நல்லூர் பிரதேசத்தில் மானிய அடிப்படையில் ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபா வீதம் வீட்டுக்கடன் வழங்கப்பட்டது. அனுமதிக்கப்பட்ட தொகையில் கடந்த வருடம் கடன் தொகை வழங்கப்பட்டது. தற்போது வீடு கட்டி முடிக்கப்பட்ட வேளையில் கடைசிக் கொடுப்பனவாக 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. வீடமைப்பு அதிகார சபையால் கடந்த வருடம் 186 மில்லியன் ரூபா யாழ் மாவட்டத்துக்கு மாத்திரம் ஒதுக்கப்பட்டது.

இவற்றில் கிராமத்துக்கு ஒரு புதிய வீடு நிரந்தர வருமானம் பெறுவோர், நிரந்தர வருமானம் அற்றோர் ஆகியோருக்காகப் புதிய வீட்டுதிட்ட கடனும் வீடு திருத்தலுக்காக கடன் தொகை என்ற வகையில் வழங்கப்பட்டது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-13)

## வேலணை பிரதேசத்தில் 'கமநெகும' அபிவிருத்தி முன்மொழிவுகள் தெரிவு

யாழ்ப்பாணம், ஜன.5

கமநெகும அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் ஒதுக்கப்பட்ட நிதிக்கு ஏற்ப அபிவிருத்தி முன்மொழிவுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட 30 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியதாக 18 முக்கிய அபிவிருத்தித் தெரிவுகள் சபையின் அங்கீகாரத்துடன் மக்களின் இலக்கை மையமாகக் கொண்டே தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரையின் பேரில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஊடாக வேலணைப் பிரதேச சபைக்கு 100 மில்லியன் ரூபா நிதி வடக்கின் வசந்தம் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டது. இந்த நிதி ஒதுக்கீட்டுக்கு அமையவே 18 அபிவிருத்தித் முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டு வேலணை பிரதேச செயலர் ஊடாக யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று சபைத் தலைவர் கூறினார். (ம-50)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குற்றப்பிரேரணையைத் தொடர புதிய சட்டம் தேவை என்கிறது ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, ஜன.5

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணையைத் தொடர்வதற்கு முன்னர் நீதிபதிகளைப் பதவி நீக்கம் செய்வது தொடர்பாக பொது நலவாய ''லற்றிமர் ஹவுஸ் தத்துவத்தை'' போன்ற சட்டங்களை இங்கும் கொண்டுவர வேண்டும்- என்று வலியுறுத்தியுள்ளது ஐக்கிய தேசிய கட்சி.

இதுகுறித்து ஐ.தே.க.வின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகள் சட்டங்களல்ல என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்த நிலையில் அரசுக்கு உள்ள அதிசிறந்த தெரிவு புதிய சட்டம் ஒன்றைக் கொண்டு வருவதுதான்.

குற்றப்பிரேரணை என்பது நாடாளுமன்றத்தினால் கையாளப்பட வேண்டிய விடயம். இதனால் தான் தெரிவுக்குழுவிலிருந்த ஐக்கிய தேசிய கட்சி அங்கத்தவர்கவர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குப் போகவில்லை.- என்றார். (ந)

## கலைப்பீட...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று பீடாதிபதி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை-

பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ள மாணவர்களில் ஆங்கில பாடம் சித்தியடையத் தவறியவர்களுக்கான ஆங்கில பாடப் பரீட்சை எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ளது என்று யாழ்.பல்கலைக் கழகப் பரீட்சைகளுக்குப் பொறுப்பான பிரதிப் பதிவாளர் அறிவித்துள்ளார். (த-4)

## நேற்றுமட்டும்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...
ஓரிரு இடம் என்றில்லாமல் அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இருந்தும் டெங்கு நோயாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (த-4)

## அகதிகள்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...
சபையின் அகதிகளுக்கான தூதுவர் அன்ரோனியோ குட்டெ றஸ் கூறியுள்ளார்.

'வாழ்க்கை நிலைமை, வேலை, கல்வி, சுகாதாரம், சொத்து, பாதுகாப்பு என்பவற்றுடன் தொடர்புபட்ட நடவடிக்கைகளை இலங்கை அரசு முன்னெடுக்க வேண்டும். மக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்ப இயலுமான சகலவற்றையும் இலங்கை அரசு செய்ய வேண்டும்' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா மற்றும் இலங்கை அரசுகள் இணைந்து அகதிகள் தாமாக இலங்கைக்குத் திரும்பிவர வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் இவ்விரு அரசுகளும் ஆராய வேண்டும். இங்கு 'தாமாக திரும்புதல்' என்பது முக்கியமான விடயமாகக் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்' என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (த)

## சுதந்திரக் கட்சி...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...
12ஆம் திகதி சனிக்கிழமை சுகததாஸ விளையாட்டரங்கில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த மாநாடு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெறவுள்ளது.

மேற்படி மாநாட்டுக்கான ஆள்களைத் திரட்டும் பணியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்டக் கிளையினர் ஈடுபட்டிருந்தனர்.

இந்தநிலையில் யாழ்.மாவட்டத்தில் பட்டதாரிப் பயிலுநர் நியமனம் பெற்ற 2 ஆயிரத்து 39 பேரையும் குறித்த மாநாட்டுக்குக் கட்டாயம் வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினாலேயே இந்தக் அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. (த-5)

## நடுக்கடலில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
அடிப்படையில் ஆஸ்திரேலிய அதிகாரிகள் டிசெம்பர் மாதம் 23ஆம் திகதி பழுதடைந்துபோன கப்பல் பற்றி முதலில் இந்தோனேஷிய தேடுதல் மற்றும் காப்பாற்றுதல் முகவரகமான பஸானஸுக்கு தகவல் வழங்கியிருந்தனர்.

இதனடிப் படையில் இவர்கள் காப்பாற்றப்பட்டனர். (த)

## ஆள்கடத்தல்..

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...
சர் ஜேசன் கென்னி இலங்கை வரவுள்ளதாக கனேடிய தூதரகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

கனடாவில் புகலிடக் கோரிக்கையாளர்கள் சட்டத்தில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் இலங்கை - கனடாவுக்கு இடையில் பேச்சு இடம்பெறவுள்ளது.

2010ஆம் ஆண்டு 500 இலங்கை அகதிகளை ஏற்றிய படகு கனடா சென்றது. அதில் 340 பேரின் புகலிடக் கோரிக்கை ஏற்கப்பட்டுள்ளது. 13 சதவீதமானோரின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

போர் காரணமாக இலங்கையைக் கைவிட்டுச் சென்ற பல தமிழர்கள் கனடாவில் வசித்து வருகின்றனர்.

இந்த நிலையில் இலங்கை வரும் கனேடிய அமைச்சர் ஜேசன் கென்னி, ஆள்கடத்தல் மற்றும் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் கனடாவின் பங்கு என்பவை குறித்து இலங்கை அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளார். (த)

## வடக்கில்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...
திணைக்களத்தில் அபிவிருத்திக்கான மேலதிக மாகாண கல் விப் பணிப்பாளராகவும், முத்துக்குமாரு இராதாகிருஸ்ணன் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் பொது நிர்வாகத்துக்கான மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகவும்-

செல்வரத்தினம் சந்திரராஜா வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளராகவும், சுப்பிரமணியம் கிருஸ்ணகுமார் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராகவும், கோவிந்தபிள்ளை வரதராஜமூர்த்தி யாழ்.வலய நிர்வாகத்துக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும், யோகசாமி இரவீந்திரன் வடமராட்சி வலய நிர்வாகத்துக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும்-

பொன்னம்பலம் அருண கிரிநாதன் யாழ்.வலய முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும், எஸ்.அகிலதாஸ் தீவக வலயத் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும், திருமதி சுகந்தி செபஸ்தியன் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் உதவிச் செயலாளராகவும்-

இரட்ணம் தமிழ்மாறன் வடக்கு மாகாண கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளராக வும், தம்பையா இராசலிங்கம் வடக்கு மாகாண கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளராகவும், சிற்றம்பலம் புஸ்பலிங்கம் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும், ஆறுப்பிள்ளை இளங்கோ வடக்கு மாகாண கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளராகவும்-

திருமதி சிவந்திரை சிவநாதன் தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும், இராமநாதன் குணநாதன் தீவக வலய அபிவிருத்திக்கான கடமை நிறைவேற்று பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும், சொர்ணலிங்கம் பகீரதன் உடுவில் கோட்ட கடமை நிறைவேற்றுக் கோட்டக் கல்விப் பணிப்பாளராகவும், பொன்னம்பலம் சிவானந்தராஜா வேலணைக் கோட்ட, கடமை நிறைவேற்று கோட்டக் கல்விப் பணிப்பாளராகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (த-5)

## மேன்முறையீட்டு...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...
பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணையை விசாரணை செய்த தெரிவுக்குழுவும், அதன் அறிக்கையும் சட்டவலுவற்றவை என்ற மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்று அரசு செயற்பட வேண்டும்.

குற்றப் பிரேரணை நடவடிக்கையை உடனடியாக அரசு நிறுத்த வேண்டும். அதனை விடுத்து தமது எதேச்சதிகாரத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த அரசு முயற்சிக்குமெனில் அதற்கு எதிராக மக்கள் விரோதம் உக்கிரமடையும்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்காது தன்னிச்சையாக செயற்பட அரசு எண்ணியிருப்பதாக ஊடகங்களினூடாக அறிய முடிகிறது.

எனவே, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்று அரசு செயற்படவேண்டுமென்பதற்காக அதற்கு உச்சக்கட்ட அழுத்தங்களைக் கொடுப்பதற்கென எதிர்வரும் திங்கட்கிழமை கொழும்பு பொரளை கெம்பல் பார்க்கில் எதிர்ப்புப் போராட்டப் பேரணியொன்றை மாலை 2 மணிக்கு நடத்தவுள்ளோம்.

பொரளை கம்பல் பார்க்கில் ஆரம்பிக்கும் இந்தப் போராட்டப் பேரணி ஹைட்பார்க் மைதானம் வரை சென்று அந்த இடத்தில் பெரும் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளது.

குற்றப் பிரேரணை நடவடிக்கையை அரசு உடனடியாகக் கைவிட்டு நாட்டில் ஜனநாயகத்தை நிலை நாட்ட வேண்டும் என்பதே, இந்த எதிர்ப்புப் போராட்டப் பேரணியின் முக்கிய நோக்கம்.

எனவே, இந்தப் பேரணியில் ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட அனைத்து அரசியல் கட்சிகளும் பேதங்களை மறந்து பங்குபற்றுவதுடன் நாட்டு மக்கள் அனைவரும் இன,மத பேதங்களைக் கடந்து கலந்துகொள்ள வேண்டும் - என்றார். (த-சி)

## எலிக்காய்ச்சல்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...
கம்பஹா, கொழும்பு, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி, மாத்தறை, காலி போன்ற மாவட்டங்களில் இந்தக் காய்ச்சல் பரவி வருவதாகத் தெரிவித்துள்ள மேற்படி தொற்று நோய் மருத்துவப் பிரிவு, ஆரம்பத்திலேயே உரிய மருத்துவ சிகிச்சைகளைப் பெறும் பட்சத்தில் இதனைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் கூறியுள்ளது.

எலிகள் மற்றும் மாடுகள் உள்ளிட்ட சில விலங்குகளின் சிறுநீரிலிருந்து வெளியாகும் கிருமிகள் நீருடன் கலந்துவிடுவதால் பொது மக்களுக்கு இந்த நோய் பரவுகின்றது எனவும் உடலில் ஏற்பட்டுள்ள காயங்களினூடாக மேற்படி கிருமிகள் மனித உடலுக்குள் இலகுவாக உட்புகுவதாகக் கண்டறியப்பட்டுள்ளதாக தொற்றுநோய் மருத்துவப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (த)

## சபையில்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...
பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை கொண்டுவரப்பட்டது.

எனவே, மேற்படி குற்றப் பிரேரணையானது பிரதம நீதியரசருக்கு எதிரான பழிவாங்கல் நடவடிக்கை என்பது தெளிவாகத் தெரிகிறது.

குற்றப் பிரேரணையை விசாரணை செய்த நாடாளுமன்றத் தெரிவுக் குழு சட்டவலுவற்றது என்றும் அதன் அறிக்கை சட்டவலுவற்றது என்றும் உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானத்துக்கு அமைய மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இந்தத் தீர்ப்புக்கு நாட்டிலுள்ள அனைவரும் கட்டுப்படவேண்டும். இந்நிலையில், எதிர்வரும் 8ஆம், 9ஆம் திகதிகளில் மேற்படி தெரிவுக்குழு அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் தற்போது 10 ஆம், 11ஆம் திகதிகளில் விவாதம் இடம்பெறவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தெரிவுக்குழு அறிக்கை சட்டவலுவற்றது என மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள நிலையில், நாடாளுமன்றில் அது தொடர்பில் விவாதம் நடத்தமுடியாது. அவ்வாறு செய்தால் இலங்கையின் சட்டத்தின்படி அது தண்டனைக்குரிய குற்றமாகும்.

நீதிமன்றத்தின் தீர்ப்பை அவமதித்தார் என்று சபாநாயகருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க நாட்டின் அரசமைப்பு சாசனத்தில் இடமுண்டு.

பாகிஸ்தான் பிரதமர், அந்நாட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராகச் செயற்பட்டமைக்காகப் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

நீதிமன்ற தீர்ப்பை ஏற்றுச் சபாநாயகர் செயற்படாவிட்டால், நாட்டில் நீதிமன்றம் இருப்பதில் பயனில்லை. சட்ட ஆட்சி நாட்டில் முழுமையாக வீழ்ந்துவிடும். மக்கள் சட்டத்தைத் தமது கையில் எடுத்துச் செயற்படுவர்'' - என்றார்.(த-சி)

## சம்பந்தனுக்கு...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...
நாடாளுமன்ற விவகாரங்கள் தொடர்பில் ஏதேனும் நடவடிக்கை எடுப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் விசேட அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்றில் முன்னிலையாகுவதற்கு முன்னதாக இந்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் எந்தவிதமான அனுமதியையும் பெற்றுக்கொள்ளவில்லை எனவும் அவர் கூறினார்.

மேன்முறையீட்டு நீதிமன்றில் குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சாட்சியமளித்திருந்தால் நாடாளுமன்ற விசேட சிறப்புரிமைச் சட்டத்தின் அடிப்படையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சந்திம வீரக்கொடி கூறினார். (த)

## மூவரடங்கிய...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...
அத்துடன், ஏனைய விவகாரங்களை நிர்வாக மட்டத்திலான சிரேஷ்ட அதிகாரி கையாளவுள்ளார். மூவரடங்கிய இந்த நிபுணர் குழு நீதியரசருக்கு எதிரான விசாரணை அறிக்கையை ஆராய்ந்த பின்னர் அதுகுறித்து ஜனாதிபதியிடம் அறிக்கையொன்றையும் கையளிக்கவுள்ளது. பெரும்பாலும் குற்றப்பிரேரணை மீதான நாடாளுமன்ற விவாதம் முடிவடைந்த கையோடு சுயாதீனக் குழு நியமிக்கப்படுமெனத் தெரிகிறது.

அதன் பின்னரே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதம நீதியரசர் விவகாரம் தொடர்பில் இறுதி முடிவொன்றை எடுப்பார். அதேவேளை, உயர்நீதிமன்றத்தின் சட்டவியாக்கியானம் நாடாளுமன்றத்துக்குச் சவால் விடுக்கும் வகையில் அமைந்துள்ளது என அரச தரப்பு கருதுவதால் ஜனாதிபதி தனது நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவார் என நம்பப்படுகின்றது.

பிரதம நீதியரசரொருவருக்கு எதிராக குற்றப்பிரேரணையொன்றைக் கொண்டுவருவதற்கு நாடாளுமன்றில் மூன்றிலொரு பங்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதில் கையொப்பமிடவேண்டும். அவ்வாறு கையொப்பமிடப்பட்ட பின்னர் அது சபாநாயகரிடம் கையளிக்கப்படும். அதன் பின்னர் அரசமைப்பில் (107ஆம்) பிரிவில் தமக்குள்ள அதிகாரங்களுக்கமைய நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின் 78 (ஏ) பிரிவுக்கமைய சபாநாயகர் விசாரணைக்குழுவொன்றை நியமிப்பார்.

அந்தக் குழுவில் ஆளும், எதிர்த்தரப்பு எம்.பிக்கள் உள்ளடங்குவர். சபாநாயகரால் நியமிக்கப்படும் மேற்படி தெரிவுக்குழு குறித்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்தி அந்த விசாரணை அறிக்கையை சபாநாயகரிடம் கையளிக்கும். பின்னர் அதை சபாநாயகர் ஜனாதிபதிக்கு அனுப்புவார். ஜனாதிபதி அதை ஆராய்ந்த பின்னர் பிரதம நீதியரசரைப் பதவி நீக்கம் செய்வதற்குத் தீர்மானிப்பாரானால் அதுகுறித்து நாடாளுமன்றத்துக்கு அறிவிப்பார். அதன் பின்னர் குறித்த விவகாரம் நாடாளுமன்றில் விவாதத்துக்கு உட்படுத்தப்படும். மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் பதவிநீக்கும் பிரேரணை நிறைவேற்றினால் நீதியரசரைப் பதவி நீக்கம் செய்யமுடியும்.

ஆனால், சுயாதீனக் குழுவொன்றை அமைத்து நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் விசாரணை அறிக்கையை ஆராய்வதற்கு அரசமைப்பிலோ அல்லது எந்தவொரு சட்டத்திலுமோ இடமில்லை. இதனை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

கொழும்பில் பட்டயக்கணக்காளர் நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் அவர் உரையாற்றும்போது-

''குற்றப்பிரேரணை அறிக்கையை ஆராய்வதற்கு சுயாதீன குழுவொன்று நியமிக்கப்படும். ஏனெனில், நான் ஒரு செயற்பாட்டைச் செய்தால் அதில் பூரண திருப்தியிருக்கவேண்டும். அத்துடன், எனது மனச்சாட்சிக்கு நான் கட்டுப்படவேண்டும். அந்த அடிப்படையில்தான் இந்தக் குழுவை நியமிக்கவுள்ளேன். இதற்கு எந்தவொரு சட்டப்புத்தகத்திலும் இடமில்லை. எனினும், எனது மனச்சாட்சியின் நிமித்தம் நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது'' - என அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, நீதியரசரைக் குற்றவாளியென அறிவித்து அவரைக் கண்டிக்கும் அதிகாரம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு இல்லை என்றும், அதன் விசாரணைகள் வலுவற்றது என்றும் உயர்நீதிமன்றம் சட்டவியாக்கியானம் அளித்துள்ளது.

எனினும், முன்னர் குறிப்பிடப்பட்ட நடைமுறைக்கு அமைய ஜனாதிபதி செயற்படுவார் என அறியமுடிகின்றது. (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

கடைக்குகந்த குளிர்சாதனப் பெட்டி மொடல் SC-380A எக்ஸ்பிறீஸ் மொடல் BD- 19 உடன் விற்பனைக்குண்டு.
தொ.பே: 0778332800, 0752897807


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### சுந்தரம் பரந்தாமன் (சமாதான நீதவான்)




உடுப்பிட்டி வடக்கு, கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும், ஒலுமடு மாங்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட திரு.சுந்தரம் பரந்தாமன் துணுக்காய் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி சமகாலங்களில் மாங்குளம் ஒலுமடு கிராமோதய சபைத் தலைவராகவும், வவுனியா வடக்கு ப.நோ.கூ. சங்க ஆளுனர் சபை உறுப்பினராகவும், ஒலுமடுக் கிராமத்தில் மக்களுக்கு பல்வேறு நலன்புரி சேவைகளுக்காக சமூக சேவை செய்தமையால் 31.12.2012 திங்கட் கிழமை வவுனியா மேல் நீதிமன்ற நீதவான் திரு A.G. அலெக்ஸ்ராசா முன்னிலையில் சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவரது பணி மேன்மேலும் சிறக்க இறைவனை வேண்டுவதோடு வாழ்த்துகின்றோம்.

பொ.அருமைச்சந்திரன் குடும்பம், பருத்தித்துறை.

## HOUSE / BUILDING NEEDED FOR RENT

*A House / Building urgently needed for Rent or Lease to a reputed computer Training institute.*

* Minimum 1500 Sq Ft
* Location - Jaffna Town / within Municipal Council Area

contact :
P.O. Box No : 2129
Colombo

## வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் இயங்கிக் கொண்டிருக்கும் பிரபல மொத்த வியாபார நிறுவனத்துக்கு
* விற்பனையாளர்
* விற்பனை உதவியாளர்
* எழுதுவினைஞர்

தேவை. உடன் தொடர்பு கொள்க:
0775731318

## அனுமதி பெறாத கல்வி நிலையத்துக்கு சீல்

சாவகச்சேரி, ஜன. 5

அனுமதி பெறாது இயங்கிவந்த தனியார் கல்வி நிலையத்தை சாவகச்சேரி நகரசபை நேற்று மாலை மூடி சீல் வைத்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது :-

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் மேற்படி கல்விநிலையம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு இயங்கிவந்துள்ளது.

சாவகச்சேரி நகரசபையிடம் உரிய அனுமதி பெறப்படாததால் அனுமதி பெற்று இயக்குமாறு நகரசபையால் நிர்வாகிக்கு அறிவிக்கப்பட்டதாகவும், அதுதொடர்பில் அவர் அலட்சியப் போக்கைக் கடைப்பிடித்து வந்ததையடுத்துத் தாம் இந்தத் திடீர் நடவடிக்கையில் இறங்கியதாக சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை உதயனிடம் தெரிவித்தார்.

உரிய அனுமதி பெறாது இயங்கும் நிறுவனங்கள் தொடர்பில் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் எச்சரித்துள்ளார். (-16-9)

## கலாசார மண்டபத்துக்கு இந்திய நிதி கிடைத்தது

யாழ்ப்பாணம், ஜன. 5

இந்திய அரசின் உதவியில் யாழ். நகரில் நிர்மாணிக்கப்படவுள்ள கலாசார மண்டபத்துக்கான நிதி தற்போது கிடைத்துள்ளதாக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

ஐந்து மாடிக் கட்டடமாக அமைக்கப்படவுள்ள இந்தக் கலாசார மண்டபத்தில் 5 ஆவது மாடியைத் தமக்குத் தரும்படி இந்திய அரசு கோரியதால் சிறிது சிக்கல்கள் ஏற்பட்டதாகவும், எனினும் இந்திய, இலங்கை அரசுகள் மேற்கொண்ட பேச்சுக்களை அடுத்து உடன்பாடு காணப்பட்டதாகவும், ஐந்தாவது மாடி இந்திய அரசுக்கு வழங்கப்பட மாட்டாது எனவும் முதல்வர் மேலும் கூறினார்.

பேச்சுக்களைத் தொடர்ந்து எதிர்வரும் மார்ச் மாதமளவில் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படலாம் எனவும் ஆயிரத்து 200 மில்லியன் ரூபா செலவில் கலாசார மண்டபம் அமையவுள்ளதாகவும் முதல்வர் கூறினார். (த-7)

## வேலைக்கு ஆள்கள் தேவை

லைடன் புடவை நிலையம் 410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள புடவைக் கடைக்கு இரு பெண்பிள்ளைகளும் (பழக விரும்புவர்களும் விரும்பத்தக்கது) நேரில் சமுகமளிக்கவும்.


## சதுரஅடி 30/= 35/= 40/=



மிகத் துல்லியமான, உயர் தரத்திலான
6 கலர்ஸ்
டிஜிற்றல் பனர் பிரின்டிங்

டிஜிற்றல் பனர், டிஜிற்றல ஸ்ரிக்கர்கள்
விளம்பரப் பெயர்ப் பலகைகள்
மற்றும்
பந்தல் தட்டிகள், முகப்புகள்,
ஆலய திரை அலங்காரங்கள்
என்பன உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்.

ஜனா டிஜிற்றல் பிரின்டிங்
JANA DIGITAL PRINTING

இல.04, மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம் (பொதுநூலக கல்லூரி அருகாமையில்)
மானிப்பாய் வீதி, ஆருகால் மடம் ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.
T.P077 0731654


## மரண அறிவித்தல்

### வேலன் சுந்தரம் (சாரதி)



ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் சுந்தரம் நேற்று (04.01.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும், குணராசா, சுயாத்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2013) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆவரங்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆவரங்கால். (27975)(5-6-7) தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து சிவலிங்கம்

(முன்னாள் உத்தியோகத்தர், கமநலசேவை, உரிமையாளர்- DARVIN LANKA, கல்யாணமாலை திருமணசேவை, கொழும்பு)



புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சிவலிங்கம் நேற்று முன்தினம் (03.01. 2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை -அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்ப காந்தியின் பாசமிகு கணவரும், மகிழ்நங்கை (லண்டன்), எழில் வேந்தன், இளநங்கை (டென்மார்க்), தமிழ்வேங்கை (லண்டன்), டார்வின் நங்கை (லண் டன்), கேதாரநங்கை, யாழ்நங்கை ஆகியோரின் அன்புத் தந்தையும், அருள்மொழிவர்மன் (லண்டன்), வனஜா, சிறீரங்கன் (டென்மார்க்), குபேசன் (லண்டன்), ஜெகதீபன் (லண்டன்) ஆகியோரின் மாமனும், இயல்நிலா, அகிலவேங்கை, அய்ந்ரா, அய்சிசன், குசீரன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற நல்லையாவின் அன்புச் சகோதரனும், இராஜேஸ்வரி, புஸ்பவதி, குணபாலசிங்கம், குகனேசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், அண்ணாதாசன், இளஞ்செழியன்(G.S), குமுதா, கவிதா, நெடுஞ்சேரன், ஆகியோரின் சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(06.01.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஹினுப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

46/8E, Siddartha mawatha, welikadamula lane,
mabola, wattala,
colombo.
0777932262, 0772417952

தகவல்: குடும்பத்தினர்.

## அபிவிருத்திச் சங்கத்துக்கு நிதி ஒதுக்கீடு

வலி.வடக்கு, ஜன.5

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விடத்தற்பளை கிராம அபி விருத்திச் சங்கத் துக்குப் பன்முகப்படுத்திய வரவு- செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா பன்முகப்படுத்திய வரவு- செலவுத் திட்ட நிதியில் இருந்து ஒரு லட்சம் ரூபாவை வழங்கியுள்ளார்.


விடத்தற்பளை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கீழ் இயங்கும் முன்பள்ளிச் சிறார்களின் குடி தண்ணீர் பிரச்சினையை தீர்க்கும் வகையில் கிணறு நிர்மாணிப் பதற்காக இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் நூற்றுக்கு மேற்பட்ட சிறார்கள் நன்மை அடைவதுடன், அயல் பகுதிகளில் வாழும் மக்களும் நன்மையடைவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-86)

ஓம் சிவாய் விஸ்வப் பிரமனே நமஹ

## ஓராண்டு நினைவஞ்சலி

| அன்னையின் மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 10 | 05 |
| 01 | 01 |
| 1947 | 2012 |



அமரர்
### சாந்தலிங்கம் (பத்தர்) சித்திரவேல்

(ஓய்வுபெற்ற மின்சார சபை ஊழியர்)

திதி – 24.12.2012 வைகுண்ட ஏகாதசி

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்."

புன்சிரிப்பில் புலவனாய் கண்ணசைவில் கண்டித்து– எம்
வாழ்வை வளமாக்க–நீங்கள்
புரிந்த தியாகம் எல்லாம் நெஞ்சில்
பசு மரத்தாணியாய் இருந்து வலிக்கிறது.
காலங்கள் கனிந்த வேளை–நாம் கதவோரம்
காத்திருப்போம்–மீண்டும்
எங்களுடன் வாழ வருவீர்கள் என்ற நம்பிக்கையுடன்

மான் பாடசாலை வீதி,
டச்றோட், உடுவில். (27966)(5-6-7)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுஜித் என்ர பிறைசஸ்
டச்சு வீதி, சாவகச்சேரி.

## தேவை

**விற்பனைப் பிரதி நிதி:**

க.பொ.த சாதாரண தரம் வரை கற்ற
18 வயதுக்கு மேற்பட்டவர்கள் நேரில் வரவும்.

நேர்முகப் பரீட்சை: 06.01.2013 - ஞாயிறு } காலை 8.00 தொடக்கம் 9.30 வரை நடைபெறும்
07.01.2013 - திங்கள் }

(C/2870) (6.711)

தொடர்பு :021 227 0586


# வீட்டுக்கிருத்திய அழைப்பு



## வேலுப்பிள்ளை சோதிப்பிள்ளை

மலர்வு 08.02.1937 | உதிர்வு 06.12.2012

கடந்த 06.12.2012 வியாழக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குலவிளக்கின் வீட்டுக்கிருத்தியம் இன்று (05.01.2013) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். ஆத்மசாந்தி நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இராஜவீதி,
சிறுப்பிட்டி மேற்கு. நீர்வேலி. (27964)(2.6.7)
குடும்பத்தினர்.

# ஏழாம் ஆண்டு நினைவில்



## வே.க.பாலசிங்கம்

(ஆசிரியர், கலாபூஷணம், கலை மகிழ்நன்)

பூவுலகில் 05.08.1931
பொன்னுலகில் 05.01.2006

திதி: பூர்வபட்ச சஷ்டி

தினம் நடப்பதைக் கணமும் உரைக்கிறோம்
கேட்கிறதா? உங்களுக்கு
கனம் பண்ணியே கடமை புரிகின்றோம்
புரிகின்றதா? உங்களுக்கு
வானும் மண்ணும் மறைந்திடலாம்
நீரும் காற்றும் மாறிடலாம்
கடல் அலை கூட ஓய்ந்திடலாம்
உங்கள் நினைவு என்றும் மறந்திடுமா?

"செந்தில்பதி",
பொலிகண்டி, வல்வெட்டித்துறை.
பவளக்கொடி (மனைவி).
குடும்பத்தினர். (27951)(2.6.7)

# இதய அஞ்சலி



அமரர்
## தோமஸ் போல் இராஜநாயகம்

விசுவாச வாழ்வில் ஆழ வேரூன்றி
சாட்சியம் பகர்ந்து கிறிஸ்துவில் வாழ்ந்து
நாம் வாழும் வழிகளை எமக்குத் தந்து
இறைபதம் அடைந்தீர் அஞ்சலி தந்தோம்

அன்பு மகனை இறைபணிக்கு அளித்தீர்
அவரின் பணிகளில் நீரும் மகிழ்ந்தீர்
நாமும் நிறைவாய் பலன்களைக் கண்டோம்
யேசுவின் பாதத்தில் அமைதி கொள் தந்தாய்!
சீரிய பந்தயம் ஓடி முடித்தீர்,
வெற்றிப் பரிசு உமது கரங்களில்....
இறை தரிசனமும் புனிதர்களின் உறவும்
நிறைவாய் கிடைக்க தினமும் செபிப்போம்

எமது அன்பிற்குரிய யாழ். தூய மரியன்னை பேராலயப் பங்குத்தந்தை அருட்பணி R.H. சகாயநாயகம் அடிகளாரின் தந்தை திரு தோமஸ் போல் இராஜநாயகம் அவர்கள் இறைபதம் அடைந்த செய்திகேட்டு துயருறுகின்றோம். இவரின் இழப்பால் வருந்தும் அனைவருக்கும் ஆறுதல் கூறுவதோடு, எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

தூய மரியன்னை பேராலயம்,
யாழ்ப்பாணம்.
பேராலய பங்குத் திருச்சபை. (27904)(45.6.7)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு செஞ்சிலுவையால் உதவிகள்

வேப்பங்குளம்,ஜன.5

வவுனியாவில் கடும் மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியாக் கிளையினரால் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன.

இதன் ஒரு கட்டமாக கடந்த 31 ஆம் திகதி ஆச்சிபுரம் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சுகாதாரப் பணியாளர்களும், வீதிச் சுத்திகரிப்பாளர்களும் இங்குள்ள வீதியோரங்களில் காணப்படும் புல், பூண்டு செடிகளை அழிப்பதுடன் கால்வாய்களையும் துப்புரவு செய்து வருகின்றனர்.

தொடர் மழை காரணமாக நுளம்புகளின் பெருக்கம் ஏற்பட்டு நோய்கள் பரவும் ஆபத்து உள்ளதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிய வருகின்றது. (க-421)

# பலவீனமான நிலையில் வன்னேரிக்குள தடுப்பணை

அக்கராயன், ஜன.5

வன்னேரிக் குளத்தின் வான் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நீர்த்தடுப்பணை பலவீனமான நிலையிலுள்ளதாக கிராம மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி வன்னேரிக்குளத்தின் வான் வெள்ளம் மண்டைக்கல்லாறினை இலகுவாகச் சென்றடையக் கூடிய வகையில் வான் பகுதியிலிருந்து நான்கு கிலோ மீற்றர் தூரத்துக்கு அமைக்கப்பட்டுள்ள நீர் தடுப்பணையே பலவீனமான நிலையில் உள்ளதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

வேறு இடத்தில் இருந்து மண்ணை எடுத்துவந்து இந்தத் தடுப்பணையை உருவாக்காமல் அந்தப் பகுதியிலிருந்தே இயந்திரத்தின் உதவியுடன் மண் எடுக்கப்பட்டு நீர்த்தடுப்பணை அமைக்கப்பட்டதால் பல இடங்களில் நீர்க்கசிவு ஏற்பட்டு தடுப்பணை உடைப்பெடுக்கும் அபாயம் உருவாகியுள்ளதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

அந்தத் தடுப்பணை உடைப்பெடுக்கும் நிலை உருவானால் வன்னேரிக் குளம் மற்றும் ஜெயபுரம் கிராமங்களுக்கிடையிலான போக்குவரத்து பாதிக்கப்பட்டு விடும் எனவும் மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (க-18)

# மனுக்கள் கையளிப்பு

அக்கராயன்,ஜன.5

கிளிநொச்சி ஜெயபுரத்தின் உள் வீதிகள் புனரமைக்கப்படாமை தொடர்பாக மனுக்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த மனுக்கள் கிளிநொச்சி அரச அதிபர் உள்ளிட்ட பலரிடம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் கையளிக்கப்பட்டுள்ளன.

இங்குள்ள இரு உள் வீதிகள் பிரதானமாகப் புனரமைக்கப்பட வேண்டியுள்ளன.

இவ்விரு வீதிகளையும், மக்கள் அதிகமாகப் பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் வீதிகளின் நிலை மோசமாக உள்ளது. ஜெயபுரம் கிராம வீதிகள் 1984 ஆம் ஆண்டுக்குப் பின்னர் புனரமைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-18)

# மரண அறிவித்தல்கள்

## ராசதுரை லூத்தம்மா



குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற செபதேயு ராசதுரையின் அன்பு மனைவி லூத்தம்மா 03.01.2013 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் 07.01.2013 திங்கட்கிழமை கிழமை பி.ப.3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு பூதவுல் நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.சில்வைதாஸ்(J.P)
(மகன்)
071 482 1728

இல.11,மத்திய மேற்கு வீதி,
குருநகர். (27956)(5-6-7)

## தம்பிராசா தேவராசா

(ஓய்வூதியர் மின்சாரசபை)



கோண்டாவில் வடக்கைப் பிறப் பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா தேவராசா 03.01.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (27957)(6.7.4)

தகவல்:
தே.யோகராணி (மனைவி)

# நினைவஞ்சலி

3ஆம் ஆண்டு நினைவு | 38ஆம் ஆண்டு நினைவு



அமரர்
**கணபதிப்பிள்ளை சபாரத்தினம்**
மண்ணில் : 03.05.1922
விண்ணில் : 05.01.2010



திருமதி
**கனகாம்பிகை சபாரத்தினம்**
மண்ணில் : 16.03.1927
விண்ணில் : 22.12.1974

உலகிற்கு எமைத்தந்து உத்தமராய் வளர்த்தெடுத்து
ஊர்போற்ற வாழ்வளித்த எங்கள் அன்பு தெய்வங்களே!
அக்கா உங்கள் அருகில்,அரவணைப்பில் நல்ல சுகந்தானா?
அம்மா என்றால் கண்டிப்பும் கனிவும் கலந்து வரும்!
பப்பா என்றால் அறிவுரையும் ஆதரவும் சேர்ந்து வரும்!
எத்தனை ஆண்டுகள்? உமைப்பிரிந்து எம் உள்ளம் - ஏங்கினாலும்
உங்கள் நினைவுகள், எம் மனதில் நிரந்தரமாய்,
நித்தமும் பசுமையாய், நிறைவோடு வீற்றிருக்கும்!
நிழல் போல் தொடர்ந்து வரும்!!
இறைவன் அருகிருந்து எம்மை வழிநடத்தும்!

குடும்பத்தினர்.
இல.05,கல்லடி வீதி,
சாவகச்சேரி.

'திலக வாசம்'
தபாலக வீதி, சாவகச்சேரி. (S/2869)(5.6.7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பிடுங்குப்பாடு இல்லாத பாதை ஒன்றை திறக்க மனம் கொண்டால் என்ன...?

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு, தனக்கு மட்டும் கட்டுப்படும் கடப்பாட்டைக் கொண்டது எனவும், அதன் செயற்பாடுகளில் எந்தவொரு வெளி நிறுவனமும் தலையீடு செய்யமுடியாது என்றும் சபாநாயகர் திட்டவட்டமாக அறிவித்திருந்த நிலையில்-

நாடாளுமன்றத் தெரிவுக்குழு சட்ட வலுவற்றது; பிரதம நீதியரசரைக் குற்றவாளியாக அறிவிக்கும் அதிகாரம் அதற்குக் கிடையாது என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பது, நீதித்துறைக்கும் சட்டவாக்கம் எனப்படும் நாடாளுமன்றத்துக்கும் இடையிலான மோதலின் உச்சக்கட்டமாகக் கருதப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. தவிர்ந்த தெரிவுக்குழுவின் ஏனைய உறுப்பினர்கள், சபாநாயகர் மற்றும் நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் ஆகியோர் நேற்று முன்தினம் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவை ஏற்க அவர்கள் மறுத்து விட்டனர்.

ஷிராணி பண்டாரநாயக்கவின் றிட் மனு மீதான விசாரணையை மேன்முறையீட்டு நீதிமன்றம் இம்மாதம் 15ஆம் திகதிக்கு ஒத்திவைத்திருப்பதும், எதிர்வரும் 8ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது பிரதம நீதியரசர் மீதான குற்றவியல் பிரேரணையை விவாதிக்கப் போவதாக அரசு அறிவித்திருப்பதும், முழு நாட்டையும் குழப்பத்தில் ஆழ்த்திவிட்டுள்ளது.

சரியாகச் சொல்லப்புகின், பிரச்சினைக்குள் புதிதாகப் பிரச்சினைகள், நெருக்கடிக்குள் புதிதாக நெருக்கடிகள், முரண்பாடுகளுக்குள் புதிதாக முரண்பாடுகள் நாளுக்குநாள் உருவாகிப் பெருகுகின்றன.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை நாட்டில் இந்த அளவுக்குப் பெரும் அரசமைப்பு நெருக்கடியை ஏற்படுத்தும் என்று இதனை முன்னெடுத்தவர்கள் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். எதிர்வரும் மார்ச் மாதம் ஆரம்பமாக உள்ள ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை முறியடிப்பதில் தீவிரமாகக் கவனம் செலுத்தவேண்டிய வேளையில், அரசு பிரதம நீதியரசர் பிரச்சினைக்குள் அகப்பட்டுச் சிக்கித் தடுமாறிக்கொண்டிருக்கிறது.

225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மைப் பலத்துடன் பிரதம நீதியரசரைப் பதவிநீக்கம் செய்ய முடியும். எனினும் இந்தப் பிரச்சினையில் அரசுடன் முழு அளவில் முரண்பட்டு நிற்கும் சட்டத்தரணிகள் சங்கம் புதிய பிரதம நீதியரசருடன் ஒத்துழைக்கும் என்பது சந்தேகமே.

நாட்டின் பெரும்பாலான பொதுமக்களும், சுயாதீன ஆய்வாளர்களும் இப்பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றனர். நாடு எதிர்நோக்கியுள்ள இன்றைய மோசமான அரசமைப்பு நெருக்கடியில் விட்டுக்கொடுப்புகளை எவரும் பலவீனமாக எடுத்துக்கொள்ள முடியாது.

பிரச்சினைக்குத் தீர்வாக நாடாளுமன்றக் கூட்டத்தொடரை ஒத்திவைக்கும் யோசனையை அரசு நிராகரித்துவிட்டது. அரசின் மூத்த அமைச்சர்களில் ஒருவரான ரட்ணசிறி விக்கிரமநாயக்க கூறியதை அடியொட்டி சில விட்டுக்கொடுப்புகள் மூலம் நாட்டை நெருக்கடியில் இருந்து மீட்டெடுக்க முடியும்.

ஜனநாயக விழுமியங்களின் பிரகாரம் பொதுமக்களே இந்த நாட்டு மன்னர்கள். நிறைவேற்று அதிகாரமும், சட்டவாக்கமும், நீதித்துறையும் நாட்டு மக்களுக்கு சேவைசெய்வதற்காகவே ஏற்படுத்தப்பட்டவை. நாட்டின் அரசமைப்பு இதனைத் தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொல்கிறது. ஏற்கனவே அரசுக்கெதிராக மனித உரிமை மீறல்கள், இன,மத,குரோத நடவடிக்கைகள், ஜனநாயக சுதந்திரத்தை நசுக்குதல் போன்ற பல குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. இறுதியில் தோல்வி அடையப்போகிறவர் ஜனாதிபதியோ, அமைச்சர்களோ, நீதிபதிகளோ அல்லர். தோல்வியடையப்போவது, இந்த நாட்டின் ஜனநாயகமும், நாட்டு மக்களின் உரிமைகளும், சுதந்திரமும், நாட்டின் எதிர்காலமும்தான்.

எந்த ஒரு நாட்டின் ஜனநாயகத்துக்கும் சுதந்திரமான நீதித்துறை அவசியம். அரசியல் தலையீடுகளும், நிறைவேற்று அதிகார மேலாதிக்கமும் நாட்டின் ஜனநாயகத்துக்கும், சட்டம் - ஒழுங்குக்கும் ஆப்பு வைக்கக்கூடியவை. ஊழல்களுக்கும் சுரண்டல்களுக்கும் அநியாயங்களுக்கும் தாராள இடம் கொடுப்பவை.

பிரதம நீதியரசர் விவகாரத்தில் அரச தரப்பினரதும், எதிர்த் தரப்பினரதும் நிலைப்பாடுகள் நாளுக்கு நாள் கடினமாகி வருவது ஒரு நல்ல அறிகுறி அல்ல. மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் முன்னிலையான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. உறுப்பினர்களுக்கு எதிராக சபாநாயகர் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பாரானால் பிரச்சினை மேலும் சிக்கல் அடையக்கூடும்.

எதிர்வரும் மார்ச் ஜெனிவாக் கூட்டத்தில் இந்த விவகாரம் கிளப்பப்படும் போது, இலங்கையின் அரசமைப்பின் பிரகாரம் செயற்பட்டதாக அரசு காரணம் கூறமுடியாது. பிரதம நீதியரசரை விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட தெரிவுக்குழு சர்வதேச தரம் வாய்ந்தது அல்ல என்பதில் மாறுபட்ட கருத்துக் கிடையாது.

ஷிராணி பண்டாரநாயக்கவை தாமாக முன்வந்து பதவி விலகும்படி கொழும்பு கோட்டையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் மற்றும் பதில் பிரதம நீதியரசர் ஒருவரை நியமிக்கும்படி அமைச்சர் விமல் வீரவன்ஸ விடுத்துள்ள கோரிக்கை என்பன தற்போதைய அரசியல் களநிலைமை மேன் மேலும் மோசமாவதற்கே வழிவகுக்கும். ஆகவே உருவாகியுள்ள முரண்பாட்டைத் தளர்த்தக்கூடிய தெரிவுகளைப் பரிசீலனை செய்து சர்வதேசத்துக்கு ஏற்புடைய முறையில் இப்பிரச்சினையைக் கையாள அரசு முன்வந்தால் மட்டுமே இந்தப் பிரச்சினைக்குப் பிடுங்குப்பாடு இல்லாத தீர்வு ஒன்றுக்குப் பாதையைத் திறக்க வழிபிறக்கும், வாய்ப்பு உண்டாகும்...

சாவகச்சேரி நகரில் இயங்கும்

# தனியார் கல்வி நிலையங்கள் இனி புதிய நடைமுறையில் செயற்படும்

தென்மராட்சி,ஜன.5

சாவகச்சேரி நகரசபை எல்லைக் குட்பட்ட தனியார் கல்வி நிலையங்கள் பின்வரும் புதிய நடைமுறைகளின் கீழ் செயற்படவுள்ளன.

கடந்த முதலாம் திகதி சாவகச்சேரி நகர மண்டபத்தில் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் இடம்பெற்ற தனியார் கல்வி நிறுவனப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போது இந்த நடைமுறைகளைப் பின்பற்ற முடிவு செய்யப்பட்டது.

* சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக தனியார் கல்வி நிறுவனங்கள் ஆரம்பிக்க தனியார் கல்வி நிலையங்களின் சம்மேளனத்தின் அனுமதியைப் பெறுவதுடன் நகரசபையின் விதிமுறைகளுக்கேற்ப பதிவு செய்யப்படல் வேண்டும்.
* இயங்கிவரும் ஒரு கல்வி நிறுவனத்திலிருந்து 500 மீற்றர் தூரத்துக்குள் வேறொரு கல்வி நிறுவனம் அமைக்கப்படக் கூடாது.
* நகரசபையின் அனுமதியின்றி விளம்பரங்கள் காட்சிப் படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
* மாலை 6 மணிக்கு முன்னர் வகுப்புகள் யாவும் நிறுத்தப்படல் வேண்டும்.
* மாணவர்களுக்கான குடிதண்ணீர்வசதி, மலசலகூட வசதி ஆகியவற்றை ஒவ்வொரு நிறுவனமும் கொண்டிருத்தல் வேண்டும்.
* ஒவ்வொரு நிறுவனமும் வாரத்தில் ஒரு நாளை விடுமுறை தினமாக்குவதுடன் மாணவர்களின் சமய வழிபாட்டு நேரங்களை கருத்தில் கொண்டு நேர அட்டவணை தயாரிக்க வேண்டும்.
* மாணவர்களின் ஒழுக்கம், கல்வி என்பனவற்றை கருத்திற் கொள்ள வேண்டியதுடன் அனைத்து நிறுவனங்களும் மாணவர் நலன் சார்ந்த கண்ணோட்டத்துடன் ஒரே தன்மையான கட்டண வசூலையும் மேற்கொள்ள வேண்டும்.
* நிறுவனங்களின் சுத்தம், சுகாதாரம் என்பன பேணப்படல் வேண்டும்.
* காலத்துக்குக் காலம் சபையின் விசேட குழுவினரும் சுகாதார பரிசோதகரும் நிறுவனங்களின் நடைமுறைகளைக் கண்காணிப்பர்.

இந்தப் புதிய நடைமுறைகள் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்கு வருவதாக நகரசபை எல்லைக்குட்பட்ட அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களும் விதிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# அரச ஊழியருக்கு அனுப்பப்படும் கடிதங்கள் சிங்கள மொழியில்

## மொழிபுரியாது திண்டாடும் தமிழர்

வரணி,ஜன.5

அக்ரஹரா திட்டத்தின் கீழ் அரச ஊழியர்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் சிங்கள மொழியில் அனுப்பப்படுவதாக தமிழ் அரச சேவையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அரச ஊழியர்கள் தாம் அல்லது குடும்ப அங்கத்தவர்களுக்கு தனிப்பட்ட வைத்தியசாலையில் நோய்க்கு சிகிச்சை பெறும் சந்தர்ப்பத்தில் அவர் குறிப்பிட்ட நோய் சார்பில் செலவு செய்த பணத்துக்கான கோரிக்கையை அக்ரஹரா நிறுவனத்துக்கு அனுப்ப முடியும்.

இவ்வாறான கோரிக்கைகள் தொடர்பில் விண்ணப்பங்கள் பூரணமற்றதாக இருக்கும் நிலையில் அது தொடர்பாக அக்ரஹரா நிறுவனம் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பும் கடிதங்களை இவ்வாறு சிங்கள மொழியில் அனுப்புகின்றது.

தமிழ் மொழியைத் தாய் மொழியாக கொண்டவர்களுக்கு சிங்கள மொழியுடன் தமிழ் மொழி மூலமும் கடிதங்கள் அனுப்பப்படல் வேண்டும் என்ற சட்டவிதிகள் அரசியல் அமைப்பில் உள்ள போதும் பெரும்பாலான நிறுவனங்கள் சிங்கள மொழியிலேயே கடிதங்களை அனுப்பும் வழக்கத்தைக் கொண்டிருக்கின்றன.

அண்மையில் தமிழ் அரச ஊழியர் ஒருவருக்கு இவ்வாறான கடிதம் ஒன்று சிங்கள மொழியில் கிடைத்தது.

அந்தக் கடிதத்தில் மேலதிகமாக தெளிவற்ற கையெழுத்துடன் கூடிய விளக்கமும் அடக்கப்பட்டிருந்தது. அந்தப் பகுதியில் உள்ள கூற்றின் விளக்கத்தை சிங்கள மொழியை தாய் மொழியாகக் கொண்ட ஒருவரிடம் காட்டி விளக்கம் கேட்ட போது அவரால் கூட அதனை சரியாக வாசித்து விளங்க முடியாத நிலை ஏற்பட்டது.

ஜனாதிபதி கடந்த வருடம் மும்மொழி அமுலாக்கம் தொடர்பில் செயலகம் ஒன்றை நிறுவி இது தொடர்பில் நடவடிக்கை எடுத்து இருந்ததுடன், மும்மொழிப் புலமையாளர்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோரியிருந்தார். இருந்தும் தொடர்ந்து கூடுதலான நிறுவனங்கள் சிங்கள மொழியிலேயே தமிழ் மக்களுடன் தொடர்பு கொண்டு வருகின்றமை விசனத்தை ஏற்படுத்துகின்றது என்று கூறப்பட்டது. (ம-122)

### திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்,ஜன.5

நவாலி அட்டகிரி சிவன் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை திருவாசக முற்றோதல் இடம்பெறும் என்று ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ கா.துரைச்சாமிக்குருக்கள் தெரிவித்துள்ளார்.

நாளை காலை 7 மணிக்கு திருவாசக முற்றோதல் நிகழ்வு ஆரம்பமாகும் என்று அவர் கூறினார். (ம-50)

* * *

யாழ்ப்பாணம்,ஜன.5

திருவாசக முற்றோதல் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் ஆலயத்திலும் , நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு நல்லூர் வடக்கு சந்திர சேகரப் பிள்ளையார் ஆலயத்திலும் நடைபெறவுள்ளது. (ம-14)

### வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி வழங்கக் கோரும் றோட்டறக் கழகம்

முல்லைத்தீவுப் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்காக பொதுமக்களிடம் இருந்து உதவிகளை யாழ்.நகர் மைய றோட்டறக் கழகம் கோரியுள்ளது.

அண்மைக் காலமாக தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழையால் முல்லைத்தீவுப் பிரதேச மக்களின் வாழ்விடங்கள் பாவனைக்கு அற்றதாகி உள்ளன. அத்துடன் உணவு மற்றும் உடை போன்ற அடிப்படைத் தேவைகளுக்காக பல்வேறு இடர்களைச் சந்தித்து வருகின்றனர்.

இந்த நிலையில் இவர்களின் வாழ்வாதாரத் தேவைகளுக்கான உதவிகளை யாழ்.நகர் மைய றோட்டறக் கழகம் வழங்க முன்வந்துள்ளது. இதற்காக நன்கொடைகளை வழங்க ஆர்வமுடையவர்கள் றோட்டறக் கழகத்துடன் இணைந்து சமூக சேவைக்கான உதவிகளை வழங்கலாம்.

யாழ்.நகர் மைய றோட்டறக் கழகத்தின் கைலாசபிள்ளையார் கோயிலடி உதயன் விருந்தினர் விடுதி, நாவலர் வீதி , யாழ்ப்பாணம் எனும் முகவரியிலோ அல்லது பா.சிறிபவன், கச்சாய் வீதி, கொடிகாமம் எனும் முகவரியிலோ நிதி மற்றும் பொருள் உதவிகளை வழங்கி உதவலாம்.

கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் சமூக சேவைகளில் ஒன்றாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்க இருப்பதால் ஏனைய சமூகசேவையாளர்களும் இணைந்து தமது அர்ப்பணிப்பை வழங்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

வெளிமாவட்ட ஆசிரியர் நலன்கருதி

# 768 மார்க்க சேவையின் நேரம் மாற்றப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,ஜன.5

வெளிமாவட்டங்களுக்கு செல்லும் ஆசிரியர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக 768 இலக்க சேவை மார்க்கத்தில் ஈடுபடும் தனியார் பஸ்களின் ஆரம்ப நேரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

768 இலக்க சேவை மார்க்கத்தில் சுன்னாகம் ஊடாக அளவெட்டி வரையில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் இதுவரை காலமும் காலை 5.35 மணிக்கே தமது முதல் சேவையை ஆரம்பித்தன.

இதனால் வெளி மாவட்டங்களுக்கு செல்லும் ஆசிரியர்கள் தம்மால் குறித்த நேரத்திற்கு வெளிமாவட்ட பஸ்களைப் பிடித்து பாடசாலைக்குச் செல்ல முடியாதிருப்பதாக குறிப்பிட்டனர்.

இதனை அடுத்து சேவை நேரத்தை முன்வைத்த தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் புதிய போக்குவரத்து அட்டவணையை நடைமுறைப்படுத்த யாழ் மாவட்ட அரச அதிபரால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

768 ஆம் இலக்க சேவை மார்க்க பஸ் கீரிமலை ஆரம்ப நிலையத்தில் இருந்து காலை 5.15 மணிக்கு புறப்படவுள்ளது. அடுத்த பஸ் 5.45 மணிக்கு புறப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே போன்று யாழ் நகரிலிருந்து 768 ஆம் இலக்க மார்க்க சேவையில் ஈடுபடும் பஸ்கள் இதுவரை காலமும் காலை 6.45 மணிக்கே புறப்பட்டன. எதிர்வரும் திங்கட்கிழமையிலிருந்து 6.25 மணிக்கு புறப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச அதிபரால் விடுவிக்கப்பட்டுள்ள அறிவித்தலின் பிரகாரம் 768 ஆம் இலக்க சேவைகள் கீரிமலையிலிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மந்த கதியில்....


முல்லைத்தீவு,ஜன.5

கடும் மழை மற்றும் வெள்ளத்தைத் தொடர்ந்து புனரமைப்புப் பணிகள் மந்த கதியில் செல்வதாக முல்லைத்தீவிலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதிப் புனரமைப்பு வேலைகள் மற்றும் பாடசாலைக் கட்டட வேலைகளே மந்த கதியில் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்காலிகக் கொட்டகைகள் யாவும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலையில் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் வீதிப் புனரமைப்பிலும் தாமதம் ஏற்படுவதால் போக்குவரத்துச் சிரமங்களும் தோன்றியுள்ளன. (க-500)



இயற்கை இடர்களால் பாதிக்கப்பட்ட வன்னி வாழ் மக்களுக்கு ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசனின் வழிகாட்டலின் கீழ் மொறட்டுவ பல்கலைக் கழகத் தமிழ் மாணவர்களுடன் ஜனநாயக மக்கள் முன்னணி இடர் அனர்த்தக் குழுவும் இணைந்து சேகரிக்கப்பட்ட பொருள்கள் வன்னி மக்களுக்கு வழங்கப்படுகின்றன. (ம)

# இரவு பஸ் சேவை நேரத்தை நீடிக்குமாறு வேண்டுகோள்

வவுனியாவில் இருந்து இயக்கப்படும் பஸ் சேவைகளை இரவு 10 மணிவரை நீடிக்குமாறு பொதுமக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழலில் வெவ்வேறு மாவட்டங்களில் இருந்தும் பயணிகள் வவுனியாவுக்கு வந்து செல்கின்றனர். ஆனால் மாலை 6.30 மணியுடன் உள்ளூர் சேவைகள் நிறுத்தப்படுகின்றன. வெளியிடங்களுக்கான பஸ் சேவைகளும் மட்டுப்படுத்தப்பட்ட வகையிலேயே இடம்பெறுகின்றன.

கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கண்டி, திருகோணமலை உட்பட பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் வருகைதரும் பயணிகள் இரவில் பஸ் சேவை குறிப்பிட்ட நேரத்துடன் நிறுத்தப்படுவதனால் பிரயாண நெருக்கடியை எதிர்கொள்கின்றனர்.

மேலும் இரவு வேளைகளில் ஓட்டோ போன்ற வாகனங்களில் செல்வதற்கு பெண்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

எனவே உள்ளூர் பஸ் சேவைகள் இரவு 9.30 மணி வரைக்கும் வெளிமாவட்டங்களுக்கான சேவையை இரவு 10 மணி வரைக்கும் நீடிக்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-402)

# கிளிநொச்சியில் சிறந்த உணவகம்

கிளிநொச்சி,ஜன.5

கிளிநொச்சி மாவட்டத்தில் 'ஏ' தரமுடைய சிறந்த உணவகமாக கண்டாவளைச் சந்தியிலுள்ள நிலா உணவகம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட வைத்திய அதிகாரி ப.கார்த்திகேயன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கி வரும் உணவு கையாளும் நிலையங்கள் உணவகங்கள் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி சுகாதார நடைமுறைகளைச் சரியாகப் பின்பற்றுவதுடன் ஒரு 'ஏ' தர உணவகத்தின் தன்மைகளைக் கொண்டு மாவட்டத்தின் 'ஏ' தர உணவகமாக கண்டாவளைப் பிரதேசசுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கீழ் உள்ள கண்டாவளைச் சந்தியில் உள்ள நிலா உணவகம் முதல் தர உணவகமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார். (த-6)

# முதிரைப் பலகை கடத்திய இருவர் நேற்றுக் கைது

கிளிநொச்சி, ஜன.5

கிளிநொச்சி கோணாவில் பகுதியில் சட்டவிரோதமான முறையில் ஹைஏஸ் வாகனம் ஒன்றில் முதிரை மரப்பலகைகளை ஏற்றிச் சென்ற இருவரை நேற்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கிளிநொச்சி கோணாவில் பகுதியில் சுமார் 30 வரையான முதிரை மரப் பலகைகள் வெள்ளைநிற ஹைஏஸ் வாகனம் ஒன்றில் அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் ஏற்றிச் செல்லப்பட்டன.

கோணாவில் பகுதிக்கு பொறுப்பாக இருக்கின்ற இராணுவப் பொறுப்பதிகாரி லெப்டினன்ட் தசநாயக்க கிளிநொச்சி பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த வாகனத்தையும் அதில் ஏற்றிச் சென்ற முதிரை மரப் பலகைகளையும் மீட்டுள்ளதுடன் சம்பவத்துடன் தொடர்புபட்ட இருவரையும் கைது செய்துள்ளனர். (த-6)

# மின்சாரம் இதுவரை இல்லை இருளில் மூழ்கும் கிராமங்கள்

கிளிநொச்சி, ஜன.5

கிளிநொச்சி மாவட்டத்தில் மின்சாரம் கிடைக்காததால் பல கிராமங்கள் தற்போதும் இருளில் மூழ்கிக் காணப்படுகின்றன.

இந்தக் கிராமங்களில் வசிக்கும் மக்கள் மின்சாரத்துடன் தொடர்புடைய தமது அவசிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக மின்சாரம் உள்ள பகுதிகளுக்குச் செல்ல வேண்டிய அவல நிலையிலுள்ளனர்.

இதன் போது பிறரின் வெறுப்புக்கு இவர்கள் உள்ளாவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சியில் சில பின்தங்கிய கிராமங்களினூடாக மின்சார வயர்கள் செல்கின்ற போதிலும் நீண்ட காலமாகியும் அந்தக் கிராமங்களுக்கு இன்னமும் மின்சாரம் வழங்கப்படவில்லை.

கிளிநொச்சியில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் சலுகைகளுடன் சில பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்ட போதிலும் தற்போதும் பல கிராமங்கள் மின்சாரம் வழங்கப்படாமலும், வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் ஏதுமற்ற நிலையிலும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-426)

# படையினர் வாழ்த்து மடல்

கிளிநொச்சி, ஜன.5

கிளிநொச்சியில் படையினர் புதுவருட வாழ்த்துமடல்களை வீடு வீடாக வழங்கி வருகின்றனர்.

அந்த வாழ்த்துமடலில் 'உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் பிரகாசமான ஆரோக்கியம் நிறைந்த மகிழ்ச்சி பொங்கும் ஆண்டாக புலரும் புத்தாண்டு அமைய இதய பூர்வமாக வாழ்த்துகின்றோம்'. என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (த-6)

# விதிகளை மீறிய பயணம் வேண்டாமே...

வவுனியா, ஜன.5


பிரயாணிகளின் நன்மை கருதிப் பல போக்குவரத்து விதிகளை நடைமுறைப்படுத்துகின்றபோதும் பிரயாணிகள் அவற்றை அலட்சியம் செய்வதால் விபத்துக்கள் நிகழ்கின்றன.

அண்மைக் காலங்களில் வவுனியா பகுதியில் ரயிலில் மோதுண்டு பலர் உயிரிழந்துள்ளனர். ஆயினும் பிரயாணிகள் வீதி விதிகளை மீறி செல்வதையே அதிகம் காணமுடிகிறது.

வவுனியாவில் உள்ள பல பிரதான வீதிகளைக் குறுக்கிட்டு ரயில் பாதை காணப்படுவதால் ரயில் செல்லும் வேளையில் பிரதான வீதி மூடப்படுவது வழக்கம்.

மூடப்பட்ட வேளையில் கூட பயணிகள் ரயில் கடவைக்கு ஊடாகச் செல்வதை அவதானிக்க முடிகின்றது.

சிறிது பொறுமை காத்து பிரயாணம் செய்வது அனைவருக்கும் பாதுகாப்பானது என்பதைப் பயணிகள் புரிந்து கொள்ள வேண்டும். (த-421)



# இந்த ஆண்டிலாவது நெருக்கடி நீங்குமா?

## துணுக்காய் கிராம மக்கள் வினா எழுப்புகின்றனர்

கிளிநொச்சி, ஜன.5

இந்த ஆண்டிலாவது தமது போக்குவரத்து நெருக்கடி நீங்குமா என துணுக்காய் கிராம மக்கள் வினா எழுப்பியுள்ளனர். துணுக்காயிலுள்ள கிராமங்கள் ஒன்றுக்கு ஒன்று நீண்ட தொலைவில் அமைந்துள்ளன.

துணுக்காய் - அக்கராயன் பிரதான வீதியில் அமைந்துள்ள அம்பலப்பெருமாள் குளம், கோட்டைகட்டிய குளம், தென்னியங்குளம், உயிலங்குளம், ஆலங்குளம் ஆகிய கிராமங்களில் போக்குவரத்து நெருக்கடி தொடர்ந்து காணப்படுகின்றது.

இதேபோன்று ஐயன்கன் குளம், பழைய முறிகண்டி, புத்துவெட்டுவான் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டு மூன்று வருடங்கள் ஆகியும் ஒரு நாள் கூட பஸ்களைக் காணாத நிலையில் உள்ளனர்.

இவர்கள் தினமும் சுமார் 6 கிலோ மீற்றர் தூரம் செல்லும் அவல நிலையில் உள்ளனர்.

புத்துவெட்டுவான் பழைய முறிகண்டி, ஐயன்கன்குளம், தென்னியங்குளம், உயிலங்குளம், கோட்டைகட்டியகுளம், அம்பலப் பெருமாள்குளம் ஆகிய கிராமங்களிலுள்ள பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களும், கல்வி கற்கும் மாணவர்களும் தொடர் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேலும் இந்தக் கிராமங்களிலுள்ள மக்கள் அக்கராயன், மல்லாவி, கிளிநொச்சி ஆகிய இடங்களிலுள்ள மருத்துவ மனைகளுக்குச் சென்று வருவதில் பெரும் பணச் செலவையும், நேர விரயத்தையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த ஆண்டிலாவது துணுக்காயிலுள்ள கிராமங்களை நோக்கியதாக பஸ் சேவைகள் இடம்பெறுமா என்றும் இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கேள்வி எழுப்புவதையும் காண முடிகின்றது. (க-18)

# கிளிநொச்சி பாரதி வித்தி. தரமுயர்வு

கிளிநொச்சி, ஜன.5

கிளிநொச்சி பாரதிவித்தியாலயம் மகாவித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாரதிபுரம் தமிழ் வித்தியாலயம் மாவட்டத்தின் பின்தங்கிய பாடசாலைகளில் ஒன்றாக காணப்பட்டதுடன் கடந்த காலங்களில் பல்வேறு சாதனைகளையும் படைத்துள்ளது.

இந்த நிலையில் குறித்த பாடசாலை ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு தெரிவு செய்யப்பட்டு அதன் ஆரம்பப் பிரிவு தனியான பாடசாலையாக பிரிக்கப்பட்டது.

கடந்த முதலாம் திகதி முதல் மகாவித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் ஏப்ரல் மாதம் புதிய உயர்தர கலைப்பிரிவையும் ஆரம்பிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (த-6)

# கிளிநொச்சி நகரப் பகுதி வீதிகளில் தொல்லைக்கு ஆளாகும் பெண்கள்

கிளிநொச்சி, ஜன.5

கிளிநொச்சி நகரப் பகுதிக்கு வரும் பெண்கள் அங்கு நிற்கும் சிலரால் தொல்லைகளுக்கு உட்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பஸ் நிலையம், நகர வீதிகள் ஆகிய இடங்களில் காணப்படும் பெண்களிடமே சிலர் தமது சேஷ்டைகளை விடுவதோடு கீழ்த்தரமான வார்த்தைப் பிரயோகங்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மையில் தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்று விட்டு மாலை நேரத்தில் வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவிகள் சிலரைப் பின் தொடர்ந்து சென்ற இளைஞர்கள் அவர்களை கீழ்த்தரமாக நடத்தியுள்ளனர். அவர்கள் சென்ற துவிச்சக்கர வண்டிகள் மறிக்கப்பட்டதுடன் கீழ்த்தரமான வார்த்தைப் பிரயோகங்களும் இடம்பெற்றுள்ளன.

மேலும் அந்த மாணவிகளைத் தம்முடன் வருமாறும் இவர்கள் கேட்டுள்ளனர். அப்போது அந்த வீதி வழியாக யாரோ வருவதை அவதானித்த அந்த இளைஞர்கள் அந்த இடத்தைவிட்டு அகன்று சென்றதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மாணவிகள் வீடு வந்து சேர்ந்ததாகக் கூறிக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இதேபோல கிளிநொச்சி பஸ் நிலையப் பகுதியிலும் இளம் பெண்கள் மற்றும் மாணவிகள் செல்லும் போது பின் தொடர்ந்து செல்லும் சிலர் கீழ்த்தரமான வார்த்தைப் பிரயோகங்களைப் பிரயோகித்து சேஷ்டை புரிந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கிளிநொச்சியில் சட்ட விரோத மதுப் பாவனையும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் மாலையானதும் வயது, உறவு, தகுதி வேறுபாடின்றி பலரும் மது போதையில் தள்ளாடுவதையும், வீதியால் செல்பவர்களிடம் தகராறில் ஈடுபடுவதையும் அசிங்கமான கீழ்த்தரமான வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்துவதனையும் அவதானிக்க முடிவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-426)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரணி வயல்களில் நெற்பயிர்கள் பன்றிகளால் அழிக்கப்படும் நிலை

வரணி,ஜன.5

வரணிப் பிரதேசத்தில் நெற்பயிர்கள் பன்றிகளால் அழிக்ககப்பட்டு சேதமாக் கப்பட்டு வருகின்றன.

கதிர்ப்பருவம் அடைந்த நெற்பயிர்கள் ஏக்கர் கணக்கில் நாசமாக்கப்பட்டு வருவதால் விவசாயிகள் செய்வதறியாது மனக்கவலை கொண்டுள்ளனர். குறிப்பாக பால் பருவம் கொண்ட நெற்கதிர்களை இவை சேதமாக்கி வருகின்றன.

பன்றிகளின் இலக்குக்கு பனம்பாத்திகளும் தவறவில்லை. பன்றிக்கூட்டம் ஓர் இரவில் பல பனம் பாத்திகளை சேதமாக்கி அவற்றை தீனியாக உட்கொள்ளுகின்றன. இதனால் நெற்செய்கை விவசாயிகள், பனம்பாத்தி உரிமையாளர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

விவசாயிகள் இரவில் குழுவாகச் சேர்ந்து காவல் காக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக வரணி வடக்கு, மாசேரி, இடைக்குறிச்சிப் பிரதேசங்களில் பன்றிகளால் பாதிப்பு ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-122)

# பனைசார் பொருள்களில் புதுவிதமான உற்பத்திகள்

### பனை அபிவிருத்திச் சபை தகவல்

யாழ்ப்பாணம்,ஜன. 5

பனைசார் பொருள்களில் இருந்து புதுவிதமான உணவு வகைகள் உற்பத்தி செய்யப்படவுள்ளன.

பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் ப.சிவரத்தினம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கைதடி பனை ஆராய்ச்சி நிலையத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி உணவு உற்பத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளோம்.

இதில் பனை சார்ந்த உற்பத்திகளை ஆராய்வது குறித்தும், தரமான உற் பத்திகளை மேற்கொள்வது பற்றியும் ஆராயப்படவுள் ளது.

இதில் பனை, தென்னை வளக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பேராசிரியர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், உணவு தயாரிப்பு வல்லுநர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள் ளனர்.

இதில் அனைவரதும் அபிப்பிராயங்கள் செய்முறைகள், தொழில் நுட்பங்கள் ஆகியவை உள் வாங்கப்பட்டு உற்பத்திகள் அதிகரிக்கப்படவுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 20 ஆயிரம் லீற்றர்கள் ஒரு நாளுக்கு உற்பத்தியாகிறது.

அதேபோன்று அனைத்து மாவட்டங்களிலும் பனங்கள் போதிய அளவு உற்பத்தியாகின்றது.

போத்தலில் அடைக்கப்படும் பதநீரின் செறிவுத் தன்மையைப் பரிசோதிப்பதற்காக யாழ். பல்கலைக்கழகத்துக்கு பதநீர் அனுப்பப்பட்டுள்ளது.

பரிசோதனைக்காக அனுப்பப்பட்டமைக்குப் பல்கலைக்கழகத்தால் பதில் எதுவும் இல்லை. அதனால் பதநீரின் விற்பனையில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இதனால் உற்பத்தியாகும் பதநீர் வீணாகும் சாத்தியமும் உள்ளது.

பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் அபிவிருத்தி திட்டத்துக்காக இந்த வருடம் 20 மில்லியன் ரூபா ஒதுக் கப்பட்டுள்ளது.

இவற்றில் பனை. வளம் சார் கைத்தொழிலுக்கு வேண்டிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதனூடாக 7 ஆராய்ச்சிகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன- என்று அவர் மேலும் கூறினார். (ம-13)

## நெடுந்தீவு பிரதேச செயலகத்துக்கு விரைவில் கொடி, கீதம், இலச்சினை

யாழ்ப்பாணம்,ஜன.5

நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தின் கொடி, கீதம் மற்றும் இலச்சினை ஆகியவற்றுக்கான ஆக்கங்கள் மாணவர்கள் பொதுமக்கள் மற்றும் ஆர்வலர்களிடம் இருந்து கோரப்பட்டுள்ளன.

ஆர்வமுடையவர்கள் நெடுந்தீவுப் பிரதேசத்தின் புவியியல், வாழ்க்கை முறை, கலை, பண்பாடு, விழுமியங்களை உள்ளடக்கியதாக சொந்தமாகத் தயாரித்த ஆக்கத்தை ஒவ்வொரு விடயங்களுக்கும் தனித்தனியாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஆக்கங்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக பிரதேச செயலர், பிரதேச செயலகம், நெடுந்தீவு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் என்று கேட்கப்பட்டுள்ளது. (ம-7-14)

## மாதாந்த படி பொது அமைப்புகளுக்கு

தென்மராட்சி,ஜன.5

சாவகச்சேரி பிரதேச சபை உபதலைவர் ந.யோகராஜா 2013 ஜனவரி மாதம் தொடக்கம் உபதலைவருக்குரிய மாதாந்த படியை சாவகச்சேரி பிரதேசத்தில் உள்ள பொது அமைப்புகளுக்கு வழங்கவுள்ளதாக தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் இந்த தகவலை வெளியிட்ட உபதலைவர் ஜனவரி மாதத்துக்குரிய கொடுப்பனவை இயற்றாலை கலைவாணி சனசமூக நிலையத்துக்கு வழங்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

ஒவ்வொரு மாதமும் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்கள்,முன் பள்ளிகள் போன்ற பொது அமைப்புகளுக்கு வழங்கவுள் ளதாகவும் தெரிவித்தார். (ம-9)



வல்வெட்டித்துறை பொலிஸாரால் பொலி கண்டி தெற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் கிராம அலுவலர் ரி.ரங்கநாதன் தலைமையில் வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. பொறுப்பதிகாரி குமாரசிங்க கற்றல் உபகரணங்களை வழங்குகிறார். (ம-253)

# பலசரக்குக் கடை உடைத்து திருட்டு

யாழ்ப்பாணம்,ஜன. 5

இருபாலை கற்பகப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள பல்பொருள் விற்பனை நிலையம் உடைக்கப்பட்டு பெறுமதியான பல பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது,

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

நேற்று முன்தினம் வியாபார நடவடிக்கைகளை முடித்துக் கொண்டு குறித்த கடையின் உரிமையாளர் கடையைப் பூட்டி விட்டுச் சென்றுள்ளார். நேற்று அதிகாலை கடையைத் திறப்பதற்காக வந்த போது கடை உடைக்கப்பட்டிருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார்.

கடையின் முன்பக்கக் கதவையும் பூட்டையும் உடைத்த திருடர்கள் கடையிலுள்ள பொருள்களை எடுத்துச் சென்றுள்ளனர்.

பருத்தித்துறை பிரதான வீதியில் அமைந்துள்ள கடையில் இடம்பெற்றுள்ள இந்த துணிகர திருட்டுச் சம்பவம் மக்களிடையே அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது.

கடையில் இருந்து கைத்தொலைபேசிகளுக்கான மீள்நிரப்பு அட்டைகள், ரின் மீன் மற்றும் பணம் என்பன திருட்டுப் போயுள்ளன.

இதுகுறித்து கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

திருட வந்தவர்கள் கடையினுள் தாம் அணிந்து வந்த பாதணியைத் தவற விட்டுச் சென்றுள்ளனர். பொலிஸாரால் மோப்பநாய் மூலம் குறித்த பாதணிகள் சோதனையிடப்பட்டுள்ளன.

மேலும் குறித்த வர்த்தக நிலையம் இதற்கு முன்னரும் சில தடவைகள் உடைக்கபட்டு பொருள்கள் களவாடப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-5)

## கேரதீவு இந்து மயான வளாகத்தில் இளைப்பாற்று மண்டபம் அவசியம்

### வேலணை பிரதேச சபைக்கு மனு

யாழ்ப்பாணம்,ஜன. 5

வேலணைப் பிரதேச சபைக்கு உட்பட்ட ஊரதீவு மக்களுக்கான இந்து மயானம் கேரதீவில் அமைந்துள்ளது.

ஊரதீவில் இருந்து சுமார் மூன்று கிலோமீற்றர் தொலைவிலேயே கேரதீவு அமைந்துள்ளது. எனவே 3 கிலோமீற்றர் நீண்ட தூரம் பயணித்து வரும் பயணிகள் ஆறுவதற்கு கேரதீவில் இளைப்பாற்று மண்டபம் அமைத்து தரப்பட வேண்டும்.

இவ்வாறு ஊரதீவு கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் ந.இராசதுரை, செயலாளர் ச.க.சதீபன் ஆகியோர் இணைந்து கேட்டுள்ளனர்.

கேரதீவு இந்து மயானத்தில் இளைப்பாற்று மண்டபம் அமைத்தல் என்னும்தலைப்பில் வேலணைப் பிரதேச சபைத் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ள மனுவில் இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஊரதீவு மக்களின் பாவனையில் உள்ள ஒரே ஒரு இந்து மயானம் கேரதீவில் அமைந்துள்ளது.

ஊரதீவுப் பகுதியில் இருந்து சுமார் 3 கிலோ மீற்றர் தூரத்திலேயே இந்த மயானம் உள்ளது.

ஊரதீவில் இருந்து இறுதிக் கிரியைகளுக்கு செல்பவர்கள் அங்கு கடமைகளை நிறைவு செய்யும் வரை இளைப்பாறுவதற்கு இடங்கள் எதுவும் அங்கு இல்லை. எனவே பொருத்தமான இடத்தில் இளைப்பாற்று மண்டபம் அமைத்துத் தருமாறு அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான சாதகமான பதில் தரப்படும் என்று குறிப்பிட்டுள்ளார். (ம-50)

## இரு மொழிகளிலும் வழக்குத் தாக்கல்

தென்மராட்சி,ஜன.5

சாவகச்சேரி நீதிமன்றில் பொலிஸாரால் இரு மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட வழக்குகள் (குற்றச்சாட்டு அறிக்கை) தாக்கல் செய்யப்படுகின்றன.

கொடிகாமம், சாவகச்சேரி பொலிஸ் நிலையங்களால் நீதிமன்றத்துக்கு தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளில் தயாரிக்கப்பட்ட அறிக்கைகள் தாக்கல் செய்யப்படுகின்றன.

தாக்கல் செய்யப்படும் குற்றப் பத்திரிகை சந்தேகநபருக்கு வாசித்துக் காட்டப்படுகிறது. (ம-9)

## ஆயுள்வேத மருந்தகம் மீண்டும் இயங்கவுள்ளது

தென்மராட்சி,ஜன.5

சாவகச்சேரி பிரதேச சபையின் எல்லைக் குட்பட்ட எழுதுமட்டுவாழ் ஆயுள் வேத மருந்தகம் மீண்டும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

போர் வேளையில் சேதமடைந்து காணப்பட்ட கட்டடத்தைப் புனரமைத்து ஆயுள்வேத மருந்தகத்தை மீண்டும் ஆரம்பிக்குமாறு பிரதேச சபை உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளை விடுத்த வேண்டுகோளை அடுத்து சேதமடைந்த கட்டடத்தை இந்த வருடம் புனரமைக்க பிரதேச சபையால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

**2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற போர் வேளையில் ஆயுள்வேத மருந்தகக் கட்டடம் சேதமடைந்தது.**

கடந்த 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற போர் வேளையில் எழுதுமட்டுவாழ் சந்தைக் கட்டடம் மற்றும் ஆயுள்வேத மருந்தகக் கட்டடம் ஆகியவை முற்றாகச் சேதமடைந்தன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 50 லட்சம் ரூபா செலவில் சந்தை புனரமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## 347 வலுவிழந்தோருக்கு நடமாடும் உபகரணம்

யாழ்ப்பாணம்,ஜன.5

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் கடந்த வருடம் 347 பேருக்கு நடமாடும் உபகரணங்களைத் தயாரித்து வழங்கியுள்ளது.

மாற்று வலுவுடையவர்களுக்கு கடந்த 25 வருட காலமாக இலவசமாகச் செயற்கை அவயவங்கள் உட்பட நடமாடும் உபகரணங்களையும் தயாரித்து வழங்கி வருகிறது.

இதற்கமைவாக கடந்த வருடம் 12 மாதகாலப் பகுதிக்குள் நடமாடும் உபகரணங்களாக முழங்கை ஊன்றுகோல் 87 பேருக்கும், தோள் மூட்டு ஊன்று கோல் 61 பேருக்கு மூன்று சில்லுச் சைக்கிள் 72 பேருக்கும், சக்கர நாற்காலி(மலசல கூடம்) 13 பேருக்கும் மடிக்கக்கூடிய சக்கர நாற்காலி ஒருவருக்கும், நடைதாங்கி 21 பேருக்கும் வேன்மேட் சக்கர நாற்காலி70 பேருக்கும் நடை உதவி கருவி 6 பேருக்கும், கொமட் ஸ்ராண்ட் 16 பேருக்கும் என 347 பேருக்கு நடமாடும் [illegible] தயாரித்து வழங்கியுள்ளது.

[illegible] உபகரணங்களை 550 பேருக்கு வழங்கியுள்ளது. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய எதிர்ப்புக் குழுக்கள் செயற்பட இடமளியோம்

### மியன்மார் உறுதி

டில்லி, ஜன.5

இந்தியாவுக்கு எதிரான பிரிவினைவாதக் குழுக்கள் மியன்மாரிலிருந்து இந்தியாவுக்கு எதிராகச் செயற்படுவதற்கு அனுமதிக்க மாட்டோம் என்று மியன்மார் உறுதிபடத் தெரிவித்துள்ளது.

இந்தியா - மியன்மார் இடையேயான இரு தரப்பு உறவு குறித்த பேச்சு நேற்று முன்தினம் டில்லியில் நடைபெற்றது. இதில் மியன்மாரின் உள்துறை துணை அமைச்சர் கயாவ் ஜென் மின்ந், இந்தியா சார்பில் உள்துறை அமைச்சகத்தின் எல்லை நிர்வாகச் செயலர், ஏ.கே. மங்கோத்ரா ஆகியோர் பங்கேற்றனர். மேற்படி பேச்சு குறித்து, உள்துறை அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்ததாவது:-

இருநாடுகளுக்கிடையே உறவை வலுப்படுத்துவது குறித்தும், போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஆயுதக் கடத்தலைத் தடுப்பது, பிரிவினைவாத மற்றும் தீவிரவாத நடவடிக்கைகளை ஒழிப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது. இந்தியாவுக்கு எதிராகச் செயற்படும் பிரிவினைவாத குழுக்கள், இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளை மியன்மார் மண்ணிலிருந்து செயற்படுவதற்கு அனுமதிக்க மாட்டோம் என்று மியன்மார் அமைச்சர் உறுதி யளித்தார்.

இந்தியா - மியன்மார் எல்லையில் பாதுகாப்பை மேம்படுத்தவும் கடத்தல் நடவடிக்கைகளை ஒழிக்கவும் இருநாடுகளும் இணைந்தே பணியில் ஈடுபட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது-என்றார்.



மேற்கு வங்க மாநிலம், கொல்கத்தாவில் ஆரம்பித்த 100 ஆவது இந்திய அறிவியல் மாநாட்டில் சிறப்பு தபால் தலையை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி வெளியிட பிரதமர் மன்மோகன் சிங் பெற்றுக்கொண்டார்.

## உலக பணக்காரர் பட்டியலில் 18 ஆவது இடத்தில் அம்பானி



உலகிலேயே மிகப் பணக்காரர்கள் பட்டியலில் இந்திய தொழிலதிபர் முகேஷ் அம்பானி 18 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

ப்ளூம்பெர்க் பில்லியனர்ஸ் இன்டெக்ஸ் வெளியிட்ட 100 பேர் அடங்கிய உலக பணக்காரர் பட்டியலில், அமெரிக்க டொலரில் 24.7 பில்லியன் சொத்துக்களுடன் ரிலையன்ஸ் நிறுவன உரிமையாளர் முகேஷ் அம்பானி (வயது 55) 18வது இடத்தைப் பிடித்துள்ளார்.

அந்தப் பட்டியலில் முதல் இடத்தில் மைக்ரோசொப்ட் நிறுவனர் பில்கேட்ஸ் இடம் பெற்றுள்ளார். ஃபேஷன் ரீடெய்லர் நிறுவனர் ஜாரா, அமான்சியோ ஒர்டேகா அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளனர்.

# அறிவியலில் நோபல் பரிசு பெற வேண்டும்

### 100 ஆவது இந்திய அறிவியல் மாநாட்டில் பிரணாப் கருத்து

கொல்கத்தா, ஜன.5

அறிவியல் துறையில் புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொண்ட இந்தியாவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் நோபல் பரிசு பெற வேண்டும் என்று ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.

100 ஆவது இந்திய அறிவியல் மாநாட்டை மேற்கு வங்க மாநிலம், கொல்கத்தாவில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆரம்பித்து வைத்து அவர் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-



அறிவியல் துறையை வளர்த்தெடுக்கும் விதமான கல்வித் திட்டத்தை நாம் உருவாக்க வேண்டும். அறிவாற்றலை வளர்த்துக் கொள்ள முக்கியத்துவம் தராமல் மாற்றங்களை எதிர் கொள்ள முடியாது. பொருளாதாரத்திலும் முன்னேற்றம் காண முடியாது.

பண்டைய இந்தியாவின் நாளந்தா மற்றும் தட்சசீலம் போன்ற பல்கலைக்கழகங்களில் வாழ்வியல் மதிப்பீடுகள் சார்ந்த முழுமையான கல்வி கற்பிக்கப்பட்டது.

உலகமயமாக்கலால் புதுமையான கண்டுபிடிப்புகளை மேற்கொள்வது அவசியமாகிறது. அப்போது தான் உலக அளவில் எம்மால் போட்டியிட முடியும். அண்மையில் அரசு அறிவித்துள்ள அறிவியல், தொழில்நுட்பம் தொடர்பான கொள்கை, சுற்றுச்சூழல் சார்ந்த வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும்.

இணையத்தள வசதியை அமெரிக்கா, சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியர்கள்தான் அதிகம் பயன்படுத்துகின்றனர்.

தொழில்நுட்ப உதவியுடன் செயற்படுத்தப்படும் ஆதார் அடையாள அட்டை திட்டத்தால், பயனாளிகளுக்கு நேரடியாகப் பணம் செலுத்தும்முறை நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

அறிவியலை சாமானியர்களுக்கும் கொண்டு சேர்க்கும் வகையில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டும். இது இந்தியாவில் அறிவியல் துறையில் வளர்ச்சியை ஏற் படுத்த உதவும்.

2035ஆம் ஆண்டில் மிகப்பெரிய பொருளாதார வலிமைமிக்க நாடாக இந்தியாதிகழும். அதேபோன்று அறிவியல் துறையிலும் சிறந்து விளங்க வேண்டும். இயற்பியலில் சர்.சி.வி.ராமன் நோபல் பரிசு பெற்று 83 ஆண்டுகள் ஆகிவிட்டன. அதற்குப்பின் அறிவியல் துறையில் இந்தியாவைச் சேர்ந்த யாரும் நோபல் பரிசு பெறவில்லை. இத்துறையில் குறிப்பிட்ட காலத்துக்குள் மீண்டும் நோபல் பரிசு பெற இந்திய விஞ்ஞானிகள் முனைப்புடன் செயற்பட வேண்டும்-என்றார். (வ)

## கூடங்குளம் அணுஉலையின் ஒரு பிரிவு 2 வாரங்களில் செயற்படும்

### அணு சக்தி ஆணையகம் தகவல்

கொல்கத்தா, ஜன.5

கூடங்குளம் அணு உலையின் முதலாவது பிரிவு இன்னும் இரண்டு வாரங் களில் செயற்படத் தொடங் கும் என்று அணு சக்தி ஆணையத்தின் நிர்வாகி தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் நடை பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அணு சக்தி ஆணையத்தின் நிர்வாகியான ரத்தன் குமார் சின்ஹா இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தாவது:-

இன்னும் இரண்டே வாரங்களுக்குள் கூடங்குளம் முதலாவது பிரிவு செயற்படத் தொடங்கி விடும்.

அணு உலையின் பாதுகாப்பு மற்றும் உறுதித் தன்மையைப் பரிசோதிக்கும் இறுதிக்கட்டத்தை அடைந்து விட்டோம்.

ரஷ்யாவுடன் இணைந்து இந்தியா கூடங்குளத்தில் தலா 100 மெகாவாற் மின் சாரத்தைத் தயாரிக்கும் இரண்டு அணு உலைகளை உருவாக்கியுள்ளது. முதலாவது பிரிவில் எரிபொருளை நிரப்பும் பணிகள் நிறைவடைந்த நிலையில், தற்போது பாதுகாப்பு உறுதி ஆணையத்தின் அனுமதி கிடைத்ததும், கூடங் குளம் அணு உலையின் முதலாவது பிரிவு செயற் படத்தொடங்கும் - என்றார். (வ)

## காஷ்மீரில் கடும் குளிர் உறைந்தது 'தால்' ஏரி



ஸ்ரீநகர், ஜன.5

காஷ்மீர் மாநிலத்தில் கடும் குளிர்நிலவுவதால் புகழ் பெற்ற 'தால்' ஏரி உறைந்தது.

காஷ்மீர் மாநிலத்தில் கடும் பனிப்பொழிவு நிலவுகிறது. இதனால், மக்களின் இயல்புநிலை பாதிக்கப்பட்டுள்ளது. சுற்றுலா சென்ற பயணிகள் ஆங்காங்கு முடங்கியுள்ளனர். காஷ்மீர் மாநிலத்தின் கோடைகால தலைநகரமாக ஸ்ரீநகரில் நேற்று முன்தினம் இரவு 4 டிகிரி செல்சியசாக வெப்ப நிலை குறைந்தது.

இதேபோல் கடந்த மாதம் 23 ஆம் திகதியும் இங்கு இதே வெப்பநிலை இருந்தது. அதிகப்பட்சமாக கார்கில் பகுதியில் 16.2 டிகிரி செல்சியஸ் குளிர் நிலவியது. இதன் அருகில் உள்ள லே நகரில் 16 டிகிரி செல்சியஸ் குளிர் நிலை நீடித்தது. குல்மார்கில் 9 டிகிரி செல்சியசும், பகல்காமில் 7.8 டிகிரி செல்சியசும் வெப்ப நிலை இருந்தது.

ஸ்ரீநகரில் நிலவும் குளிரின் காரணமாக, புகழ் பெற்ற ஏரி உட்பட அனைத்து நீர் நிலைகளும் உறைந்துள்ளன. இதற்கிடையே, உத்தரப் பிரதேசத்தில் கடும் குளிரால் நேற்று முன்தினம் 9 பேர் உயிரிழந்தனர். இதன்மூலம், கடும் குளிரால் இம்மாநிலத்தில் இறந்தவர்கள் எண்ணிக்கை 116 ஆக உயர்ந்துள்ளது. குறிப்பாக மாநிலத்திலேயே மிகவும் குறைந்த அளவாக நஜி பாபாத்தில் 2.6 டிகிரி வெப்ப நிலை நிலவுகிறது.

## வன்புணர்வால் உயிரிழந்த மாணவிக்கு அசோக சக்கர விருது வழங்கவும்

### பிரதமரிடம் பா.ஜ.க. வலியுறுத்து

டில்லி, ஜன.5

டில்லியில் வன்புணர்வுக் குட்படுத்தப்பட்டு சிகிச்சை பயனின்றி உயிரிழந்த மாணவிக்கு தீரத்துக்கான அசோக சக்கர விருது வழங்க வேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சி வலியுறுத் தியுள்ளது.

இதுதொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங்குக்கு டில்லி மாநில பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் விஜேந்தர் குப்தா ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில் குறிப்பிட்டுள்ளதாவது:-

மாணவியின் துணிச் சலும் வீரமும் இந்த நாட்டை ஈர்த்துள்ளது. எனவே மாணவிக்கு அசோ கச் சக்கர விருது வழங்க வேண்டும்.

1986 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 5 ஆம் திகதி பான் ஆம் விமானம் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டபோது பயணிகளைக் காப்பாற்றுவதற்காக தன்னுயிரை இழந்தார் நீரஜா பனாட். அவருக்கு மிக இளம் வயதில் அசோகச் சக்கர விருது வழங்கப்பட்டது.

இதேபோல் டில்லி மாணவிக்கும் இறப்புக்குப் பிந்திய நிலையில் எதிர்வரும் குடியரசுத் தினத்தன்று அவ் விருதை வழங்கிக் கௌரவிக்க வேண்டும்- என்றுள்ளது. (வ)

## சுற்றுலா வரும் வெளிநாட்டவர் தகவல் சேகரிக்கத் தடை விதிப்பு

டில்லி, ஜன.5

இந்தியாவுக்கு சுற்றுலா வரும் வெளிநாட்டினர் அங்கு நடக்கும் நிகழ்ச்சிகள் குறித்து தகவல் சேகரிக்கக் கூடாது என்று மத்திய அரசு உத்தர விட்டுள்ளது.

இது குறித்து மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

**சுற்றுலாவுக்கு வந்த இடத்தில் செய்தி சேகரிப் பதைத் தடுக்கத்தேவையான நடவடிக்கைகளை மாநில அரசுகள் எடுக்க வேண்டும்.**


இந்தியாவுக்கு சுற்றுலா விசாவில் வரும் வெளிநாட்டவர்கள் அங்கு நடக்கும் நிகழ்ச்சிகள் குறித்து செய்தி சேகரிப்பது எங்கள் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. வெளிநாட்டவர்கள் சுற்றுலா விசாவில் வந்து செய்தியாளர்கள் பணி செய்கின்றனர். சுற்றுலாவுக்கு வந்த இடத்தில் செய்தி சேகரிப் பதைத் தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை மாநில அரசுகள் எடுக்க வேண்டும்.

மேலும் இந்தத் தகவலை வெளிநாடுகளில் இருக்கும் இந்திய அலுவலகங்களுக்கு தெரிவிக்குமாறு வெளியுறவுத்துறை அமைச்சகத்தை கேட்டுக் கொள்கிறோம் - என்றுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரிவடையும் இலக்குகள்

## புரட்சியாளர்கள் சிரிய விமானத் தளங்களை குறிவைத்து தாக்குதலைத் தொடங்கியுள்ளனர்



டமஸ்கஸ், ஜன.5

சிரியப் புரட்சியாளர்கள் சிரியாவின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள விமான நிலையங்களை குறிவைத்து தாக்கத் தொடங்கியுள்ளனர்.

சிரிய அரசை எதிர்த்து, அல்-நுஸ்ரா பிரண்ட் மற்றும் அஹ்ரார் அல்-ஷாம் என்ற முஸ்லிம் குழுக்கள் போராட்டம் நடத்தி வருகின்றன.

இவை தவிர, வேறு சில குழுக்களும் போராடி வருகின்றன. இந்த உள்நாட்டுப் போரில் ஏற்கெனவே 60 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

போரை முடிவுக்குக் கொண்டுவர ஐ.நா. சபை முயன்று வருகிறது.

எனினும், புரட்சியாளர்களின் தாக்குதல் இலக்கு விரிவடைந்து வருகிறது. நாட்டின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள விமான நிலையங்கள் அவர்களின் தாக்குதலுக்கு இலக்காகி உள்ளன. அலிப்போ சர்வதேச விமான நிலையத்துக்குள் போராட்டக்காரர்கள் நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தினர்.

எனினும் விமான நிலையத்துக்குள் நுழையும் அவர்களின் முயற்சியை சிரிய இராணுவத்தினர் முறியடித்துள்ளனர்.

## சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகம்;

## ஆண்மையை நீக்குமாறு நீதிமன்று அதிரடித் தீர்ப்பு

சியோல், ஜன.5

தென் கொரியாவில் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியவரின் ஆண்மையை நீக்குமாறு தென்கொரிய நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தென் கொரியாவில் பியோ என்ற குடும்ப பெயர் கொண்ட 31 வயது மதிக்கத்தக்க ஒருவர் 5 சிறுமிகளுடன் தகாத முறையில் உறவு வைத்துள்ளார். அதன் பின்னர் அந்த சிறுமிகளுடன் எடுத்த காணொலி காட்சிகளை வெளியிடுவேன் என்று மிரட்டியுள்ளார்.

இதுதொடர்பாகக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்துக் கைது செய்யப்பட்ட பியோ மீது சியோல் தெற்கு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கின் விசாரணை முடிந்த நிலையிலேயே நீதிபதி பரபரப்பான தீர்ப்பை வழங்கினார்.

தனது தீர்ப்பில் நீதிபதி குறிப்பிட்டுள்ளதாவது:

''பியோ பல பெண்களை வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார். எனவே அவராகவே பாலியல் ஆசையை துறந்து திருந்துவார் என்பது சாத்தியமில்லை. எனவே, அவருக்கு 15 ஆண்டு சிறைத்தண்டனையும், இரசாயன முறையில் ஆண்மை நீக்கம் செய்யவும் உத்தரவிடப்படுகிறது. சிறையில் இருந்து விடுதலையான பிறகு அவர் 20 ஆண்டுகள் மின்னணு கண்காணிப்பு கருவி அணிந்திருக்க வேண்டும்''- என்று குறிப்பிட்டார்.

தென் கொரியாவில் குழந்தைகள் தொடர்பான பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ஆண்மை நீக்கம் செய்யலாம் என்ற சட்டம் 2011ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. அதன் பின்னர் வழங்கப்பட்ட முதலாவது தீர்ப்பு இதுவாகும்.

## சுவிஸில் துப்பாக்கிச் சூடு; மூவர் சாவு

ஜெனிவா, ஜன.5

சுவிற்ஸர்லாந்தின் கிராமப் பகுதி ஒன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர். இருவர் காயமடைந்தனர்.


ஜெனிவாவில் உள்ள டயலோன் என்ற கிராமத்தில் இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர் என்று ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் இதுகுறித்து மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## சிரியாவில் குண்டுவெடிப்பு

### 11 பேர் உயிரிழப்பு; பலர் படுகாயம்



டமஸ்கஸ், ஜன. 5

சிரியாவில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 11 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

சிரியாவில் இடம்பெறும் உள்நாட்டுப் போர் காரணமாக அங்கு கடும் எரிபொருள் பற்றாக்குறை நிலவுகிறது. சிரியத் தலைநகர் டமஸ்கசில் உள்ள பர்சே அல் பலாத் பகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

அப்போது நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரில் இருந்து குண்டு வெடித்தது. இதில் குறைந்தது 11 பேர் உடல் சிதறி பலியாயினர். இறப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்க கூடும் என்று சொல்லப்படுகிறது.

இதேவேளை, நேற்று முந்தினம் தலைநகரில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் மீது சிரிய விமானப்படை தாக்கியதில் 20இக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ‘கூகுள்’ நிர்வாகத் தலைவர் வடகொரியாவுக்குப் பயணம்

பியோங்யாங், ஜன.5

உலகில் மிகவும் அதிகளவில் இணையக் கட்டுப்பாடுகள் உள்ள வடகொரியாவிற்கு கூகுளின் நிர்வாகத் தலைவர் எரிக் ஸ்மிட் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

அமெரிக்க தொழில்நுட்ப துறையிலுள்ள உயர்மட்ட தலைவர்களில் ஒருவரான ஸ்மிட், இந்த மாத ஆரம்பத்தில் வடகொரியாவுக்கு செல்லலாம் என தெரிவிக் கப்பட்டுள்ளது.

கொரிய நாடுகள் மீள் ஒற்றுமைப்பட வேண்டுமென வடகொரிய தலைவர் கிம் ஜோங் அன் தெரிவித்திருந்த நிலையில், எரிக் ஸ்மிடின் இந்த பயணம் இடம்பெறவுள்ளது.

கூகுளின் பிரதான அரசியல்வாதியும் அரசாங்க உறவுகள் தொடர்பான பிரதிநிதியுமாக செயற்படும் ஸ்மிட், ஜனாதிபதி பராக் ஒபாமாவின் முக்கிய ஆதரவாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வடகொரியாவில் நாட்டுக்கு எதிராக செயற்பட்டதாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள கொரியாவைச் சேர்ந்த அமெரிக்க பிரஜையை விடுவிப்பது குறித்து அவர் கவனம் செலுத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழர் கொலை: சிங்கப்பூரில் நால்வர் கைது

சிங்கப்பூர், ஜன.4

சிங்கப்பூரில் புத்தாண்டு தினத்தன்று இடம்பெற்ற கொலை தொடர்பில் நான்கு தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.


தமிழகத்தைச் சேர்ந்த பழனிகுமார் (வயது-24) என்பரே கொலை செய்யப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

சிங்கப்பூருக்கு தொழில் நிமித்தமாகச் சென்ற தமிழகத்தை சேர்ந்த ராமசாமி ராபின்ஹூட், முருகானந்தம், ராஜா அருள், விஜயகுமார், பழனிகுமார் ஆகியோர் புத்தாண்டு தினத்தன்று ஜுராங் லேக்பார்க் பகுதியில் மது அருந்தியுள்ளனர்.

அப்போது அவர்களுக்குள் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பானது. கைகலப்பில் பலத்த காயமடைந்த பழனிகுமார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

அதையடுத்து மற்றைய நான்கு பேர் மீதும் கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது பொலிஸ் காவலில் உள்ள நால்வரும் எதிர்வரும் 10ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத் தப்படவுள்ளனர்.



வோஷிங்டன், ‘காபிடல் ஹில்’லில் அமெரிக்காவின் 113ஆவது நாடாளுமன்றப் பதவியேற்பு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

## ரூ. 500 கோடி செலவில் அமெரிக்காவில் கோயில்

வோஷிங்டன், ஜன.5

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் 20 ஏக்கர் பரப்பளவில் சுவாமி நாராயண் கோயில் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இந்தக் கோயில் 500 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது.



20 ஏக்கர் பரப்பளவில் அமைந்த இந்த கோயில் பூகம்பத்தால் பாதிக்கப்படாத வகையில் நவீன தொழில் நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. கோயிலின் பெரும்பாலான பகுதிகள் இத்தாலிய பளிங்கு கற்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த கோயிலுக்கு தேவையான மின்சக்தி சூழலுக்கு மாசு ஏற்படாத வகையில் சூரிய சக்தி மூலம் பெறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஈராக்கில் கார்க்குண்டு வெடிப்பு; 20 பேர் சாவு

பக்தாத், ஜன. 5

ஈராக்கில் இடம்பெற்ற கார்க் குண்டுத் தாக்குதலில் குழந்தைகள் உட்பட 20 பேர் உயிரிழந்தனர். 50 பேர் காயமடைந்துள்ளனர்.

ஈராக்கில் சன்னி - ஷியா முஸ்லிம்களிடையே மத சம்பந்தமான சடங்குகள் நடத்துவதில் முரண்பாடுகள் இருந்து வருகிறது. ஷியா முஸ்லிம்களின் அர்பாயின் நினைவு தினம் அவர்களின் புனித நகரமான ஈராக் கர்பாலாவில் கடைபிடிக்கப்பட்டது. அங்கு சென்று விட்டு திரும்பிய ஷியா முஸ்லிம்களை குறிவைத்து முசாயிப் நகரில் கார்க்குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இதில் குழந்தைகள் உள்பட 20 பேர் உயிரிழந்தனர். 50 பேர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்களில் பலரின் நிலை மோசமாக உள்ளதால் உயிரிழப்புகள் அதிகரிக்கக் கூடும் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதலுக்கு எந்த அமைப்பும் இதுவரை உரிமை கோரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சார்வேஸின் உடல் நிலை மோசம்

கராக்கஸ், ஜன.5

வெனிசுலா ஜனாதிபதி ஹியுகோ சார்வேஸின் உடல் நிலை மோசமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கியூபாவில் புற்றுநோய்க்காக சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்ட நிலையில் அவருக்கு நுரையீரலில் தற்போது தொற்று நோய் ஏற்பட்டுள்ளது.

வெனிசுலாவின் தகவல் துறை அமைச்சு இதனைக் குறிப்பிட்டுள்ளதுடன் மேலதிக விவரங்களை வெளியிடவில்லை.

இதுவரை நான்கு தடவைகள் ஹியுகோ சார்வேஸுக்கு புற்று நோய் தொடர்பில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. 58 வயதான ஹியுகோ சார்வேஸ் மீண்டும் வெனிசுலாவின் ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ளார். இந்த நிலையில் அவரின் உடல் நலம் குறித்து மாறுபட்ட தகவல்கள் வெளிவந்தவண்ணமுள்ளன.

## மக்கள் கொல்லப்படுவதை கண்டுகளித்தாராம் முபாரக்

### மனித உரிமை வழக்கறிஞர் தகவல்

கெங்ரோ, ஜன.5

எகிப்தில் மக்கள் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அவற்றைத் தொலைக்காட்சியில் நேரடியாக முபாரக் பார்த்துக் கொண்டிருந்தார் என்ற தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக். இவருக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்தினர். அதைத் தொடர்ந்து முபாரக் பதவி விலகினார். அந்தப் போராட்டங்களின் போது சுமார் 900 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

இதுதொடர்பாக விசாரணைகள் நடைபெற்று முபாரக்குக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. தற்போது அவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.



விசாரணைகளின்போது முபாரக், ''போராட்டங்களின் போது பொதுமக்கள் மீது அரசபடைகள் தாக்குதல் நடத்தியமை பற்றி எதுவும் தெரியாது. உதவியாளர்கள் இதனைத் தெரிவிக்காமல் மறைத்து விட்டனர்''- என்று நீதிமன்றில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே போராட்டம் தீவிரமாக நடைபெற்ற 18 நாள்களாக அங்கு இடம்பெறும் போராட்டங்களை ஹோஸ்னி முபாரக் தனது மாளிகையிலிருந்து செய்மதித் தொலைக்காட்சி மூலம் பார்த்து வந்தார் என்ற தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை மனித உரிமைகள் தொடர்பான வழக்கறிஞர் அகமது ரக்ஹெப் வெளியிட்டுள்ளார்.

## அளவில் குறைகிறது பூமி!

நியூயோர்க், ஜன.5

நாம் வாழும் பூமியின் பெரும் பகுதி சுருங்கி வருகிறது என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்காவின் நாசா விண்வெளி மையத்தால் வடிவமைக்கப்பட்ட லேண்ட்சாட் 5 என்ற விண்கலம் 1984ஆம் ஆண்டு விண்ணில் ஏவப்பட்டது. கடந்த 29 ஆண்டுகளாக இயங்கி வரும் அந்த விண்கலம் பூமியை 1 லட்சத்து 50 ஆயிரம் முறை சுற்றி வந்துள்ளது.

அந்த விண்கலம் இரண்டரை மில்லியன் புகைப்படங்களையும் எடுத்து அனுப்பியுள்ளது. இதில் உலகம் முழுவதும் உள்ள நிலப்பரப்பின் நிலை குறித்த புகைப்படங்களும் அடக்கம்.

அந்தப் புகைப்படங்களை வைத்து நாசா ஆராய்ச்சிகளை மேற்கொண்டது. அதன்போதே உலகில் 4ஆவது மிகப்பெரிய ஏரியான ஏரல் சீ தற்போது மெல்ல சுருங்கி அதனுடைய மொத்த பரப்பளவில் 10 சதவீத அளவே மிஞ்சியுள்ளது.

முன்பு எடுக்கப்பட்ட புகைப்படங்களையும், தற்போது எடுக்கப்பட்ட புகைப்படங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, பூமியின் பெரும் பகுதி சுருங்கி வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

படங்களில் மிஸ்ஸிசிப்பி ஆற்றின் தற்போதைய தோற்றம், பொலிவியா நாட்டில் குறைந்த வனவளம், செர்னோபில் அணு உலையின் 1975ஆம் ஆண்டு தோற்றம், உலகின் 6ஆவது பெரிய ஏரியான சட் பதிவாகியுள்ளன. தற்போது குறிப்பிட்ட மொத்தப் பரப்பளவில் வறட்சி காரணமாக 20இல் ஒரு பங்கு அளவிற்கு சுருங்கிய வடிவம் போன்றவை முக்கியமானவையாகும்.

## அமெரிக்க இராணுவத்துக்கு 70 லட்சம் கோடி

வோஷிங்டன், ஜன. 5

அமெரிக்க நிதி ஒதுக்கீட்டில் பாதுகாப்புக்கு ரூபா 70 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கான தீர்மானம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கையெழுத்திட்டார்.

நிதி ஒதுக்கீட்டில் அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்ரகனுக்கு ரூ.60 லட்சம் கோடியும், ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானில் தீவிரவாதிகளை ஒழிக்க ரூபா 10 லட்சம் கோடியும் பகிரப்பட்டுள்ளது.

இவற்றுக்கு ஒப்புதல் அளித்து கையெழுத்திட்ட ஜனாதிபதி பராக் ஒபாமா ''இராணுவ வீரர்கள், அவர்களின் குடும்பத்தினரின் பாதுகாப்புக்காகவும், நாட்டின் பாதுகாப்புக்காகவும், உலகிலேயே அமெரிக்க ராணுவம் பலம் வாய்ந்தது என்பதை நிரூபிக்கவும் இந்தத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது''- என்று தெரிவித்துள்ளார்.

## இந்தோனேஷியாவில் பெண்களுக்கு கட்டுப்பாடு

ஜகார்த்தா, ஜன.5

இந்தோனேஷியாவில் பெண்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்தோனேஷியாவில் ஷரியத் சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தநிலையில் பாண்டா ஏஸ் மாகாணத்தில் உள்ள லோக்சுமாவே நகர மேயர், பெண்களுக்கு கடும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளார்.

அதன் படி பெண்கள் இறுக்கமான நீளக் காற் சட்டை அணியக் கூடாது, கள்ளக்காதல், விபசாரம், ஓரினச் சேர்க்கை என்பவற்றுக்கு தண்டனை வழங்கப்படும் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

மேலும் குறிப்பாக ஆண்களுடன் மோட்டார் சைக்கிள்களில் செல்லும்போது இருக்கையின் பின்பக்கம் இரண்டு பக்கம் கால் போட்டு அமர்ந்து செல்ல கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெண்கள் மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கு அனுமதிக்கப்படும். ஆனால் முஸ்லிம் பாரம்பரியப்படி உடை அணிந்திருக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. இதற்குப் பெண்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

## மெக்ஸிக்கோவில் சூடு: 12 பேர் சாவு

சகாடெகாஸ், ஜன. 5

மெக்ஸிக்கோவில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டில் 12 பேர் உயிரிழந்தனர். இராணுவத்தினர் சோதனையிட மறித்த போது காரை நிறுத்தாமல் சென்றபோதே துப்பாக்கிப் பிர யோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மெக்ஸிக்கோவில் சகாடெகாஸ் நகரில் சந்தேகத்துக்கு இட மான கார்களை மறித்து இராணுவத்தினர் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது நிறுத்தாமல் சென்ற காரைப் பின்தொடர்ந்த இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட னர். அதில் 12 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். 7 பேர் கைது செய்யப்பட்டனர்.


சரவணா ரெக்ஸ்

2013 ஆம் புதிய ஆண்டில் புதிய திருப்புமுனை

புதிய வடிவங்களுடன்

எமது யாழ்.குடாநாட்டில் உள்ள எந்த ஒரு கிளையிலும் புதிய பரிமாணத்துடன் இன்று (05.01.2013) சனிக்கிழமை முதல் விலை தளம்பல் அற்ற மிக மிக மலிவான நிர்ணயிக்கப்பட்ட (Fixed Price) விலையில் வாடிக்கையாளர்கள் எந்த ஒரு குழப்பமும் இல்லாம் 100% நம்பிக்கையுடன் கொள்வனவு (Shopping) செய்யலாம்.

நிர்ணயிக்கப்பட்ட விலை (Fixed Price) மூலம் கிடைக்கப்பெறும் நன்மைகள்

01. தரமான ஆடைகளை புதிய புதிய தெரிவுகளுடன் அன்றாடம் பெறலாம்.
02. விலை தளம்பல் இல்லாமல் 100 % நம்பிக்கையுடன் கொள்வனவு செய்யலாம்.
03. முடிவு செய்யப்பட்ட, மாறாத, நிலையான, உறுதியான விலை.
04. உங்களுடைய சேமிப்பு இன்னும் இரு மடங்காக அதிகரிக்கும்.
05. உங்களுடைய நம்பிக்கைக்கு 100 % வீத நம்பிக்கை உத்தரவாதம்.

ஒருமுறை மட்டும் விஜயம் செய்து பாருங்கள் எவ்வளவு இலாபம் என்று தெரிந்துகொள்வீர்கள்.

நல்லூரில்:
இல. 526, 529 பருத்தித்துறை வீதி,
நல்லூர் (பின் வீதி) யாழ்ப்பாணம்.
T.P : 021 222 1723
(வாரத்தில் 7 நாள்களும் கடை திறந்திருக்கும்)

யாழ்ப்பாணத்தில்:
இல. 770, 772, கே.கே.எஸ் வீதி,
(தட்டாதெரு சந்தி), யாழ்ப்பாணம்.
T.P : 021 222 0421
(வாரத்தில் 7 நாள்களும் கடை திறந்திருக்கும்)

வடமராட்சியில்:
இல. 171, பிரதான வீதி,
நெல்லியடி. (சம்பத் வங்கி அருகில்)
T.P : 021 226 2992


சங்கானையில்:
219 பிரதான வீதி, சங்கானை.
(HNB வங்கி முன்பாக)
T.P : 021 2250909



31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
30.08.1930

மறைவு
07.12.2012



திருமதி செல்வரட்ணம் செல்லமுத்து

கடந்த 07.12.2012 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியம் நாளை (06.01.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
(மகன் – செ.இரட்ணலிங்கம்)

அளவெட்டி வடக்கு, அளவெட்டி. (27402)(6.7.2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பள்ளத்தில் வீழ்ந்தது டிப்பர் வாகனம்

வட்டவளை,ஜன.5

வட்டவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட டி கார்டன் வளைவுக்கு அருகில் டிப்பர் வாகனம் நேற்று முன்தினம் மாலை பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்கு உள்ளானது.

வட்டவளை தோட்டத்திலிருந்து நுவரெலியாவுக்கு வந்த டிப்பர் வாகனமே இவ்வாறு விபத்துக்கு உள்ளாகியது.

குறுக்குப் பாதை ஒன்றிலிருந்து கினிகத்தேனை பிரதான வீதிக்கு திரும்ப முற்பட்டபோதே வாகனம் பள்ளத்தில் சரிந்துள்ளது.

இந்த சம்பவத்தில் வாகன சாரதியும் ,நடத்துநரும் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர். (ச)



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆலையடிவேம்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொருள்களை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் பி.எச். பியசேன வழங்கினார்.

## கலைத்துறை மாணவர்களுக்கான சாதனையாளர் தெரிவில் முறைகேடு

### பட்டிருப்பு மாணவர்கள் கவலை

எருவில்,ஜன.5

பட்டிருப்பு கல்விவலயத்தில் 2011 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப்பெற்ற கலைத்துறை மாணவர்களுக்கான சாதனையாளர் தெரிவில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு பாதிக்கப்பட்ட மாணவர்கள் கவலை தெரிவித்தனர்.


மாணவர்களைப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யும்போது இஸட் புள்ளியின் அடிப்படையிலே தெரிவு செய்வது தற்போதுள்ள கல்வித் திட்டத்தின் முக்கிய அம்சமாகும்.

சாதனையாளர் கௌரவிப்பில் இஸட் புள்ளியைக் கருத்தில்கொள்ளாது மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அது உயரதிகாரிகளின் முறைகேடான செயற்பாடாகும் என்று பாதிக்கப்பட்ட மாணவி ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

இந்த அநீதியான விடயத்தை அதிகாரிகளுக்கு எடுத்துச் சொன்னபோதும், அவர்கள் எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை என்று அவர் கூறினார்.

கல்வி அதிகாரிகள் இவ்வாறான தவறான செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மர்மம்தான் என்ன என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ச-31)

## சட்டவிரோத தாவர நிலையம் மாநகரசபையால் அகற்றப்பட்டது



கல்முனை,ஜன.5

கல்முனையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட பல்வகை தாவர விற்பனை நிலையம் ஒன்றை மாநகரசபை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அகற்றியுள்ளது.

இந்த விற்பனை நிலையம் தொடர்பில் பொதுமக்கள் மாநகரசபை முதல்வரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். அதனையடுத்து, மாநகர சபை முதல்வர் சிராஸ் மீரா சாஹிப் உள்ளிட்ட குழுவினர் நேரில் சென்று விற்பனை நிலையத்தை பார்வையிட்ட பின்னர் அதனை அகற்றியுள்ளனர்.

இந்த விற்பனை நிலையம் வடிகாலின் மேல் அமைக்கப்பட்டது. அதனால் நீர் வடிந்தோடுதல், வடிகாலை துப்பரவு செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறாக விற்பனை நிலையம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## வெள்ளநீரை வெளியேற்றக் கோரி

# மழைக்கு மத்தியிலும் மக்கள் ஆர்ப்பாட்டம்

காத்தான்குடி,ஜன.5

காத்தான்குடி பிரதேச செயலர் பிரிவிலுள்ள தாரூஸ்ஸலாம் பகுதியைச் சேர்ந்த மக்கள் மழைக்கு மத்தியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் காத்தான்குடி பிரதேச செயலகத்துக்கு முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

தாரூஸ்ஸலாம் பகுதி வெள்ளத்தால் மூழ்கியுள்ளது. அந்தப் பகுதியிலுள்ள வெள்ளநீரை வடிந்தோடுவதற்கு வழிசெய்ய வேண்டும் என்று கோரியே அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் பகுதி தொடர்ந்து அதிகாரிகளால் புறக்கணிக்கப்பட்டு வருகிறது என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.



ஆர்ப்பாட்டத்தின் முடிவில் காத்தான்குடி பிரதேச செயலர் எஸ்.எச்.முஸம்மிலிடம் மனு ஒன்றையும் அவர்கள் கையளித்தனர்.

இதேவேளை தாரூஸ்ஸலாம் பகுதிக்குச் சென்று அங்குள்ள வெள்ள நிலைமைகளை காத்தான்குடி பிரதேச செயலர் முஸம்மில் பார்வையிட்டார்.

வெள்ளநீர் வடிந்தோடச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறினார்.

தாரூஸ்ஸலாம் பகுதி ஒவ்வொரு வருடமும் வெள்ளத்தில் மூழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## 'டிக்கட்' இல்லை; பயணிகள் விசனம்

அக்கரைப்பற்று,ஜன.5

அக்கரைப்பற்றிலிருந்து புறப்படுகின்ற பஸ்களில் பயணிகளிடம் நடத்துநர்கள் பணம் பெற்றுக் கொண்டு டிக்கட் கொடுப்பதில்லை. இவ்வாறு பயணிகள் விசனம் தெரிவித்தனர்.

திருக்கோவில், பொத்துவில், விநாயகபுரம் போன்ற இடங்களுக்குச் செல்லுகின்ற பயணிகளுக்கே இவ்வாறு டிக்கட் கொடுப்பதில்லை.

அத்தோடு மீதிப் பணம் கேட்டால் சில்லறை இல்லை என்று நடத்துநர்கள் கூறுகின்றனர் என மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர். தனியார், அரச பஸ்களில் இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்று பயணிகள் கூறுகின்றனர்.

எனவே, இதனைக் கருத்திற்கொண்டு அரச, தனியார் உயரதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

## தாதியர்களின் இரண்டு கோரிக்கைகளுக்கு தீர்வு

### கிழக்கு இணைப்பாளர் நஸிறுத்தீன் சொல்கிறார்

மட்டக்களப்பு,ஜன.4

தாதியர்களால் நீண்ட காலமாக முன்வைக்கப்பட்டு வந்த கோரிக்கைகளில் இரண்டு கோரிக்கைகளை சுகாதார அமைச்சு நிறைவேற்றியுள்ளது. இவ்வாறு அரச தாதி உத்தியோகத்தர் சங்கத்தின் கிழக்கு மாகாணத்துக்கான இணைப்பாளர் பி.எம். நஸிறுத்தீன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தாதியர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு, அபாயக் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. தாதியர்கள் சார்பில் 5 கோரிக்கைகளை முன்வைத்து அரச தாதி உத்தியோகத்தர் சங்கம் கடந்த காலங்களில் பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்தது. அதற்கிணங்க தற்போது 2 கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வந்துள்ளது.

இரத்த வங்கி, சத்திர சிகிச்சைக் கூடம், அவசர சிகிச்சைப் பிரிவு, தீவிர சிகிச்சைப் பிரிவு, கசரோகம், புற்றுநோய் உள்ளிட்ட சிகிச்சைப் பிரிவுகளில் பணியாற்றுகின்றவர்களுக்கான அபாயக் கொடுப்பனவுகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.-என்றார். (ச)

## சாரதியால் தாக்கப்பட்டார் மேற்பார்வை உத்தியோகத்தர்

### ஏறாவூர்ப்பற்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

ஏறாவூர்,ஜன.5

மட்டக்களப்பு, ஏறாவூர்ப்பற்று பிரதேசசபையின் மேற்பார்வை உத்தியோகத்தர் ஒருவரை சாரதி ஒருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தாக்கியுள்ளார். இந்தச் சம்பவம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று ஏறாவூர்ப்பற்று பொலிஸார் தெரிவித்தனர். தாக்குதலுக்கு உள்ளானவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலை மேற்கொண்டதாகக் கூறப்படும் சாரதி கடமைக்கு சமுகமளிக்காமை குறித்து குறித்த மேற்பார்வையாளர், தொலைபேசி மூலம் வினவியுள்ளார். அதனையடுத்து பிரதேச சபைக்கு வந்த சாரதி மேற்பார்வை உத்தியோகத்தரை தலைக் கவசத்தால் தாக்கியுள்ளார் என்று பொலிஸார் கூறினர்.

இந்தத் தாக்குதல் தொடர்பில் ஏறாவூர்ப்பற்று பிரதேச சபைத் தலைவர் வினோத் தெரிவித்ததாவது:-

**தாக்குதலுக்கு உள்ளான உத்தியோகத்தர் வாய் பேச முடியாத அளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளார்.**

கடமையில் இருந்த உத்தியோகத்தரை தாக்கிவிட்டு குறிப்பிட்ட சாரதி தனக்கு சுகவீனம் என்று கூறி ஏறாவூர் வைத்தியசாலையில் சிகிச்சைக்கான அனுமதியைப் பெற்றுள்ளார்.

தாக்குதலுக்கு உள்ளான உத்தியோகத்தர் வாய் பேச முடியாத அளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளார். எனவே அவருடைய வாக்குமூலம் பெறப்பட்டதும் அந்த விடயம் குறித்து நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராயப்படும் .-என்றார்.

இந்தத் தாக்குதல் குறித்து ஏறாவூர்ப்பற்று பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## அம்பாறை ஆழ்கடல் மீனவர்கள் படகுகளை நிறுத்துவதில் சிரமம்

### படகுகள் கடலுடன் அடித்துச் செல்லப்படும் நிலை என்கிறார் அமைச்சர் றிசாத் பதியுதீன்

அம்பாறை,ஜன.5

அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீனவர்கள் தமது படகுகளை நிறுத்துவதில் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், கைத்தொழில் மற்றும் முதலீட்டு அமைச்சருமான றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

அதனைச் சுட்டிக்காட்டி துறைமுக அதிகாரசபைத் தலைவர் பிரியந்த விக்ரமவுக்கு அவர் மனு ஒன்றையும் அனுப்பியுள்ளார்.

அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தற்போது ஏற்பட்டுள்ள கடற்கொந்தளிப்பு மற்றும் இயற்கை மாற்றங்கள் காரணமாக கரையோர மீனவர்கள் படகுகளை நங்கூரமிடுவதில் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

அதிகரித்த கடல் அலை காரணமாக படகுகள் கடலுடன் அடித்துச் செல்லப்படுகின்றன.



அவ்வாறு சிரமங்களை எதிர்நோக்கும் அம்பாறை மாவட்ட மீனவர்களுக்கு உதவ நடவடிக்கை எடுக்க வேண்டும்

இந்த மீனவர்கள் ஒலுவில் துறைமுகத்துக்குள் படகுகளை நிறுத்த அனுமதிக்கும்படி பணிப்புரைகளை ஒலுவில் துறைமுக அதிகாரிகளுக்கு வழங்க வேண்டும்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வான் உடன்விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 57- xxxx தொடர் இலக்கமுடைய Toyata கயஸ் வான் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0779934740 (27582) (6.7.4)

## வாகனம் விற்பனைக்கு

LB xxxx- China கன்டர் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0772136097 (27529) (6.7.4)

## திருமண சேவை

✱78 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 10½ பாவம் உடைய B.Sc M phil முடித்து அரச நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

✱78 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 15 ½ பாவம் உடைய B.Sc M.Sc முடித்த அரச நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு அரச நிறுவனத்தில் பணி புரியும் மணமகள் தேவை.

✱78 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 18 ¾ பாவம் உடைய டாக்டர் மணமகனுக்கு அரச நிறுவனத்தில் பணி புரியும் மணமகள் தேவை.

✱82 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 23 பாவம் உடைய அஸ்திரேலியா பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

✱மேலும் டாக்டர்கள் , இஞ்சினியர்கள், பட்டதாரிகள், பாவம் கூடிய குறைந்த அரச உத்தியோகத்தர்கள் சைவ போசனமுள்ள மணமக்களும் வெளிநாட்டில் பிரஜாவுரிமை பெற்ற மணமக்களும் எம்மிடம் உளளனர்.

தொடர்பு: காமக்கண்ணன் திருமணசேவை.
இல. 435/3, கோயில் வீதி,நல்லூர். (கந்தன் கருணைக்கருகில்)
T.P: 0776070862. (27590)(6.7.4)

## சட்டறிங் அடித்துக் கொடுக்கப்படும்

கட்டடத்துக்கு சட்டறிங் உடன் அடித்துக் கொடுக்கப்படும்.
ஒரு ஸ்குயர் ரூபா 7000 மட்டும்.

தொடர்பு: 0778167864 (27484) (6.7.11)

## காணி விற்பனைக்கு

உடையார் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் உள்ள கிணற்றுடன் கூடிய 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 1133375, 0041 772910427. (27566) (6.7.4)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

இனம் - டோபமன் (Doberman)
2 மாதங்கள் நிரம்பிய பூச்சி நீக்கிய தூய டோபமன் இன நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0719160098, 077 4520377 (27608) (6.7.4)

## வேலை ஆள்கள் தேவை

இயக்கச்சியில் உள்ள பிரபல தோட்டம் ஒன்றுக்கு சமையல் வேலைக்கு ஆள்கள் தேவை. தகுந்த சம்பளம் மற்றும் தங்குமிட வசதியும் உண்டு.

தொடர்பு:- 0773361750 (27448) (6.7.7)

## Organ,Guitar புல்லாங்குழல் இசை வகுப்புகள்

சுரவீணா இசை மன்றம்
4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.

T.P: 0777031293 (27589) (6.7.4)

## விற்பனைக்கு

NP PT- 9xxxதொடரிலக்க வெள்ளை நிற நியூ மொடல் மகேந்திரா A/C , Power Steering லீசிங்குடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 071 618 2182,077 773 0303. (சி/5254) (6.7.4)

## நாய்கள் விற்பனைக்கு

அல்சேசியன் நாய் 1½ வயது நிரம்பிய ஜேர்மன்சப்பேட், அல்சேசியன் 40 நாள் பூச்சி நீக்கிய ஜேர்மன்சப்பேட் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 645 0822 (27557) (6.7.4)

## பிரபல அசைவ உணவகம் உடன் வாடகைக்கு

மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம் வைத்தியசாலையுடன் இணைந்த 45அடி நீளமான நீர் மின்சாரம், தளபாடம்,குளிர் சாதன வசதி கொண்ட கவர்ச்சிகரமான அசைவ உணவகமான "திரு சுவையருவி" என்னும் உணவகம் நடத்துநர் வெளிநாடு செல்ல இருப்பதால் உடன் வாடகைக்கு விடப்படவுள்ளது. தொடர்புகள் நேரில்.

தொடர்பு: 0212223175,
உரிமையாளர். (27593)(6.7.4)

## கமெரா விற்பனைக்கு

கொடக் கமெரா 7.1 மெகா பிக்சர்ஸ் சிறிது காலம் பாவித்தது. நல்ல நிலையில் உள்ளது. விற்பனைக்கு.

தொடர்பு:
077 1167 667 (27599) (45.6.7)

## முன்பள்ளி ஆசிரியை தேவை

சிறுப்பிட்டி மேற்கில் நவீன முறையில் ஆரம்பிக்கப்படவிருக்கும் முன்பள்ளிக்கு ஆசிரியை தேவை.மேலதிக தகைமைகளாக கணினி, ஆங்கில அறிவு கருதப்படும்.

விண்ணப்ப முடிவு 10.01.2013

குறிப்பு: தங்கள் சுயவிபரக் கோவையில் தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிடவும்.

தொடர்பு :077905 7722
கோ.ஸ்ரீஸ்கந்தராசா(தலைவர்).
இராஜவீதி, சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி. (27555)(6.7.11)

## கிளிநொச்சி மாவட்ட வர்த்தகர்களுக்கான அறிவித்தல்

**கிளிநொச்சி மாவட்ட வணிக,கைத்தொழில்,வேளாண் ஒன்றியம்**

**(Kilinochchi District Chamber of Commerce, Industry & Agriculture)**

மேற்படி கிளிநொச்சி மாவட்டவணிக,கைத்தொழில், வேளாண் ஒன்றியத்தின் நடவடிக்கைகள் ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் சர்வதேசதொழிலாளர் அமைப்பு (பொருளாதாரஅபிவிருத்திக் கருத்திட்டத்தினூடாகமக்களைவலுவூட்டல்)(I.L.O.LEEDS)திட்டத்தின் அனுசரணையுடன் இல.57, புகையிரதநிலையவீதி, கிளிநொச்சியில் 20.09.2011ஆம் திகதிதொடக்கம் மீண்டும் ஆரம்பமாகி முழுஉத்வேகத்துடன் செயலாற்றிக்கொண்டுவருகின்றது. அத்துடன் வர்த்தக தகவல் நிலையம், வர்த்தக அபிவிருத்திச் சேவை,வர்த்தகர்களுக்கான ஈமெயில் வசதி, சந்தைத் தொடர்புகள்,வர்த்தகர்களுக்கான பயிற்சிகள் முதலியனவற்றுக்கு 2013ஆம் ஆண்டுக்கு மீண்டும் அனுசரணை கிடைத்து நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றது என்பதனை அன்புடன் அறியத் தருகின்றோம்.

21.02.2012ஆம் திகதிகிளிநொச்சிமாவட்ட அரசஅதிபரின் தலைமையில் மாவட்ட தொழில் முயற்சி சபை (District Enterprise Forum) உருவாக்கப்பட்டு தொடர்ந்து நடைமுறையில் உள்ளது. இதன் முதற்கட்ட நடவடிக்கையாக கிளிநொச்சி பரவிப்பாஞ்சானில் பாதுகாப்பு படையினரின் பொறுப்பில் இருந்தஏறக்குறைய 30 கடைகள் அரசாங்க அதிபரின் அனுசரணையுடன் உரிமையாளர்களுக்குக் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது..

USAIDநிறுவனத்தினரின்கிளிநொச்சிமாவட்டத்தில் வேலைவாய்ப்பைக் கூட்டுவதற்கான தொழில் முயற்சிகளுக்கான வேலைத்திட்டம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றது.

போரினால் பாதிக்கப்பட்ட காப்புறுதி செய்த 32 காப்புறுதிகளுக்கான நட்டஈடு எம்மால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் போரினால் பாதிக்கப்பட்டவர்த்கர்களுக்கான இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியினைக் கூடியவிரைவில் பெற்றுக்கொடுப்பதற்கானநடவடிக்கைகள் எம்மால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

மேற்படி ஒன்றியம் அங்கத்தவர்களது தேவைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது என்பதனைத் தயவுடன் அறியத்தருகின்றோம்.

அங்கத்தவர்கள் தங்களது 2013ஆம் ஆண்டுக்கானசந்தாப் பணத்தினை (ரூபா 1000.00) செலுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்வதுடன் இது வரை அங்கத்தவர்களாக சேராதவர்களும் வர்த்தக சங்கங்களும் எமது வணிக ஒன்றியத்தில் இணைந்து இதன் மூலம் நன்மைகளை பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தொடர்புகொள்ளவேண்டியதொலைபேசி/ தொலைநகல் இல :- 021 228 5601
மின்னஞ்சல் முகவரி :- kdccia2011@gmail.com

சி.நவரெத்தினராஜா
செயலாளர்.

# பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ/து) பருத்தித்துறை

# பதவி வெற்றிடங்கள்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **வயதெல்லை :** 18 தொடக்கம் 45 வரை (கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரியும் விண்ணப்பதாரிகளுக்கு இந்த வயதெல்லைபொருந்தாது)
02. **விண்ணப்ப முடிவு திகதி :** 19.01.2013
03. **பிணை :** பதவிக்கு தெரிவு செய்யப்படும் பட்சத்தில் சங்கத்தினால் கோரப்படும் ரொக்கப் பிணை மற்றும் உறுதிப் பிணைகளைச் சமர்ப்பிக்கத் தயாராக இருத்தல் வேண்டும்.
04. கணினி அறிவும் திறனும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
05. (i) பதவி: பொதுமுகாமையாளர் - 101/08

சம்பள அளவுத்திட்டம்: 11200 - 14100
140x10-150x10

**தகைமைகள்:** (கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் 10.08.2012 ஆம் திகதிய 04/2012 இலக்க சுற்று நிருபத்துக்கு அமைவானது.)

(அ) கூட்டுறவு ஊழியர் 9ஆவது சம்பளத்திட்ட முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்ட முகாமை அல்லது மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 06 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமொன்றுடன் அல்லது அதற்கு சமமான தகைமை யொன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியொன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 04 வருடகால அனுபவம்/க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 06 வருட சேவையாற்றிய அனுபவம்.

(ii) கணக்காளர்: - 104/09

சம்பள அளவுத்திட்டம்: 10950 - 13650
130x10-140x10

**தகைமைகள்:**

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 10 ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்காளர்/ அகநிலைக் கணக்காய்வாளர் பதவியில் ஆகக் குறைந்தது 03 வருடகால அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 11 ஆவது சம்பளத்திட்டத்தில் அகநிலைக் கணக்காய்வாளர்/ கணக்குப் பதிவாளர் அல்லது கணக்கு/ கணக்காய்வுப் பகுதி எழுதுநர் பதவியில் ஆகக்குறைந்தது 06 வருடகால அனுபவம்.

அல்லது

(ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இறுதிப் பரீட்சையிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் கணக்காய்வுத் துறையில் மேற்பார்வை மட்டப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 வருடகால அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவு ஊழியர் உயர்தரப் பத்திரம்/க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட 03 பாடங்களில் சித்தியுடன் கணக்கியல்/ கணக்காய்வுத் துறையில் மேற்பார்வை மட்டத்தில் ஆகக் குறைந்தது 06 ஆண்டுகால அனுபவம்.

06. குறித்த பதவிகளுக்குரிய சம்பளத்துக்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபங்களுக்கு அமைவாக வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் விசேட படிகளும் வழங்கப்படும்.
07. **விண்ணப்பிக்கும் முறை**
    (i) சங்கத்தில் தற்போது கடமையாற்றுபவர்கள் சங்கத்தின் ஊடாகவே விண்ணப்பிக்கவேண்டும்.
    (ii) சங்கத்தில் ரூபா 20/= செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்தினை முறையாகப் பூர்த்திசெய்து " தலைவர், பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், முதலாம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை." என்னும் முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினை குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
    (iii) விண்ணப்பப்படிவத்துடன் கல்விச் சான்றிதழ்கள், வதிவிடச் சான்றிதழ், [illegible] சேவை அனுபவச் சான்றிதழ்கள் [illegible] நின் பிரதிகள் இணைக்கப்பட்டிருந்தல் வேண்டும்.

தலைவர்,
பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம். (சி/5261) (45.6.7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் - 1938.02.21
மறைவு - 2012.12.06
அமரர்
**சின்னப்பு விசாலாட்சி**

என்றும் மறவாத பாசமிகு பெரியம்மாவுக்கு நீங்காத நினைவுகளுடன் அன்புக் காணிக்கை.

இலண்டன். கி.சுதாகரன் (27465)(6.7.11)


Study in the UK / Canada / Australia / New Zealand

April/May INTAKES IN PROGRESS

SETTLEMENT VISA

(கணவன்/மனைவி) மூலம் UK, Australia, Canada, U.S.A செல்பவர்களுக்கான விசா தொடர்பில் ஆவணங்கள் வெற்றிகரமாகச் செய்து தரப்படும்

TOURIST VISA / FAMILY VISIT VISA

உட்பட அனைத்து நாடுகளின் விசாவுக்களுக்குமான ஆலோசனைகளும், ஆவணங்களைத் தயார்படுத்துதல் தொடர்பில் நிபுணத்துவமான சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்.

100% வீசா உத்தரவாதம் Guaranteed

Eisc EXPRESS INTERNATIONAL STUDIES & CONSULTANTS

30-1/14, W.A.De Silva Mawatha Colombo-06
(Above Hotel Green Palace)
Tel: 2500207 E-mail: eisc_2007@yahoo.com
Robin-0777 222 422 Selva-0714 299 935
Web: www.expresslanka.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 நீதிபதிகளுக்கு இடமாற்றம்

## பிரதம நீதியரசர் தீர்மானம்

கொழும்பு,ஜன.5

இலங்கையின் பிரதான நீதிபதிகளை இடமாற்றம் செய்ய பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தீர்மானம் எடுத்துள்ளார்.

**21 ஆம் திகதியில் இருந்து நடைமுறைப் படுத்தப்படும்**

அதற்கமைய கம்பஹா சிவில் மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சிரோமி பெரேரா, அம்பாறை மேல் நீதிமன்ற நீதிபதி அநுர குமார, அநுராதபுரம் சிவில் மேன்முறையீட்டு நீதிபதி நிசங்க பந்துல, அம்பாறை சிவில் மேன்முறையீட்டு நீதிபதி சமன் விக்கிரமசூரிய, கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி குமுதினி விக்கிரமசிங்க, அவிசாவளை சிவில் நீதிமன்ற நீதிபதி இராங்கனி பெரேரா, கல்கிஸ்ஸை சிவில் நீதிமன்ற நீதிபதி எஸ் ரபீக் ஆகியோரே இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இந்தத் தீர்மானம் எதிர் வரும் 21 ஆம் திகதியில் இருந்து நடைமுறைப்படுத் தப்படும் என்பது குறிப்பிடத் தக்கது. (ச)

# மாணவருக்கு உயர் கல்வியை பெற்றுக் கொடுப்பது பெற்றோரின் கடமை

## பஸில் சொல்கிறார்



கொழும்பு,ஜன.5

மாணவர்களுக்கு உயர் கல்வியைப் பெற்றுக் கொடுப்பது ஒவ்வொரு பெற்றோரினதும் கட்டாய கடமையாகும்.

இவ்வாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தையிலுள்ள பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு நான்குமாடிக் கட்டடம் நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை நடைபெற்றது.

அந்தநிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இன்று சில பெற்றோர் தமக்கு வசதி வாய்ப்புகள் இருந்தும் தமது பிள்ளைகளுக்கு உயர்கல்வியை பெற்றுக் கொடுப்பதில் கவனம் செலுத்துவதில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

வசதி படைத்த தனவந்தர்களும் உயர்கல்வியைப் பெறும் பிள்ளைகளுக்கு தம்மாலான உதவிகளைச் செய்ய வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

நிகழ்வில் சிரேஷ்ட அமைச்சர் அல்ஹாஜ் ஏ.எச்.எம். பவுசி, மேல் மாகாண ஆளுநர் அஷ்ஷெய்க் அலவி மௌலானா, கொழும்பு மாநகர சபை முதல்வர் எம். ஜே. எம். முஸம்மில் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச)

# மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவை ஏற்றுக்கொள்ளவும்

## லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி.வலியுறுத்து



கொழும்பு,ஜன.5

நாடாளுமன்றம் உள்ளிட்ட அனைத்து நபர்களும் மேன்முறையீட்டு நீதிமன்றின் உத்தரவை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல வலியுறுத்தியுள்ளார்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தாக்கல் செய்த மனுவை பரிசீலனை செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அளித்த தீர்ப்புத் தொடர்பில் அவர் வெளியிட்ட விசேட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணை தொடர்பில், நாடாளுமன்றத் தெரிவுக் குழு விசாரணை நடத்த முடியாது என்ற மேன் முறையீட்டு நீதிமன்றின் தீர்ப்பை அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

குற்றப் பிரேரணை அரசமைப்புக்கு முரணானது என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

நாட்டின் அரசியல் சாசனம் தொடர்பில் சட்ட வரைவிலக்கணத்தை வழங்கும் அதிகாரம் மேன்முறையீட்டு நீதிமன்றுக்குமட்டுமே இருக்கிறது. எனவே நாடாளுமன்றம் உள்ளிட்ட அனைத் துத் தரப்பினரும் அந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அரசமைப்புக்கு முரணாக செயற்பட்ட காரணத் தால் எதிர்க்கட்சி உறுப் பினர்கள் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிலிருந்து விலகிக் கொண்டனர்.

திவிநெகும சட்டம் தொடர்பில் நாடாளுமன்றில் விசேட உரையாற்றிய சபாநாயகர், நாட்டின் அரசியல் சாசனம் தொடர் பில் சட்ட வரைவிலக்கணம் வழங்கக் கூடிய அதிகாரம் மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு இருப்பதாகத் தெரிவித் திருந் தார். எனவே, மேன்முறை யீட்டு நீதிமன்றின் தீர்ப்பை சபாநாயகர் ஏற்றுக்கொண்டு செயற்பட வேண்டும்.- என்றார். (ச)

# ஒரு மில்லியன் ரூபா லஞ்சம்; சுங்கத் திணைக்கள அதிகாரி கைது

கொழும்பு,ஜன.5

சுங்கத் திணைக்கள தடுப்புப் பிரிவின் தலைவர் நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை லஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

**வர்த்தகர் உரிய நேரத்தில் லஞ்ச ஊழல் ஆணைக் குழுவுக்குத் தெரிவித்ததை அடுத்தே அவர் கைதுசெய்யப்பட்டார்.**

ஒரு மில்லியன் ரூபா பணத்தை லஞ்சமாகப் பெற முற்பட்ட போதே சுங்க திணைக்கள தடுப்புப் பிரிவின் தலைவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவின் ஆணையாளர் ஜயந்த விக்ரமரத்ன தெரிவித் தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வர்த்தகர் ஒருவரினால் இறக்குமதி செய்யபபட்ட வாகன உதிரிப் பாகங்கள் அடங்கிய கொள்கலன் ஒன்றை வெளியில் எடுப்பதற்காக அவர் லஞ்சம் பெற்றுக் கொண்டுள்ளமை விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

வாகன உதிரிப்பாகங்கள் அடங்கிய கொள்கலனை வெளியில் எடுப்பதற்காக 5 மில்லியன் ரூபா பணத்தை லஞ்சமாகத் தரும்படி வர்த்தகரிடம் சுங்கத் தடுப்புப் பிரிவின் தலைவர் கோரியுள் ளார்.

எனினும் 2 மில்லியன் ரூபாவை தருவதாக இணங்கிய வர்த்தகர் நேற்றுமுன் தினம் ஒரு மில்லியன் ரூபாவை வழங்க முற்பட்ட போதே லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவினரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள் ளார்.

வர்த்தகர் உரிய நேரத்தில் லஞ்ச ஊழல் ஆணைக் குழுவுக்குத் தெரிவித்ததை அடுத்தே அவர் கைதுசெய்யப்பட்டார். குறித்த சந்தேக நபருக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். -என்றார். (ச)

# ஹலால் பணப்பரிமாற்றம் குறித்து விசாரணையை மேற்கொள்ளவும்

## அகில இலங்கை உலமா சபை வேண்டுகோள்

கொழும்பு,ஜன.5

ஹலால் சான்றிதழின் பணப்பரிமாற்றம் தொடர்பில் பாதுகாப்பு செயலர், புலனாய்வுப் பிரிவினர் ஆகியோர் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அகில இலங்கை உலமா சபை கோரியுள்ளது.

இதுகுறித்து பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு உலமாசபை மனு ஒன்றை அனுப்பியுள்ளது.

அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பொதுபல சேனா என்ற பௌத்த அமைப்பு, அண்மையில் ஹலால் சான்றிதழ் தொடர்பில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தது.

ஹலால் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதன் மூலம் உலமா சபைக்கு வருடம் ஒன்றுக்கு 80 பில்லியன் ரூபா கிடைக்கின்றது. அந்த பணம் முஸ்லிம் தீவிரவாதத்துக்கு அனுப்பப்படுகிறது என்று பொதுபலசேனா குற்றம் சுமத்தியிருந்தது.

அந்தக் குற்றச்சாட்டு சிங்கள சமூகத்துக்கு மத்தியில் முஸ்லிம்கள் தொடர்பில் சந்தேகத்தைக் கொண்டு வந்துவிடும்.

எனவே இந்த விடயத்தில் கவனம் செலுத்தவேண்டும்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



புத்தளம் ஆதார வைத்தியசாலையில் முதன் முறையாக பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கற்பிட்டியை வசிப்பிடமாகக் கொண்ட ஒருவருக்கே இந்தச் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# நவீனமாகிறது கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம்



கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை நவீனமயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விமான நிலையம் ஜப்பான் ஜயிக்கா நிறுவனத்தின் 28 ஆயிரத்து 969 மில்லியன் செலவில் நவீனமயப்படுத்தப்படவுள்ளது.

சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரட்ன்வின் இந்தத் திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

# தரம் உயர்வதை விரும்பாத பாடசாலைகள் நீக்கப்படும்

## பதிலாக வேறு பாடசாலைகள் என்கிறார் பந்துல

கொழும்பு,ஜன.5

1,000 பாடசாலை திட்டத்தின் கீழ் இரண்டாம் நிலை பாடசாலையாகத் தரம் உயர்த்தப்படுவதை விரும்பாத பாடசாலைகள் தற்காலிகமாக நீக்கப்படும். அதற்குப் பதிலாக அதே பிரதேசத்தில் வேறு பாடசாலை தெரிவு செய்யப்படும்.

இவ்வாறு கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இரண்டாம் நிலை பாடசாலையாக தரமுயர்வதை சில பாடசாலைகள் விரும்பவில்லை.

தமது பாடசாலையை இரண்டாம் நிலை பாடசாலையாக மாற்ற வேண்டாம் என்று சொன்னால், நாம் அதனைத் தற்காலிகமாக இடைநிறுத்தி விடுவோம். அவ்வாறு 1000 பாடசாலைத் திட்டத்திலிருந்து [illegible] பாடசாலைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டுள்ளன. -என்றார். (ச)

# இலங்கைப் படகு இந்தோனேசியாவில் சிக்கியது

கொழும்பு,ஜன.5

சுமாத்ரா தீவிலிருந்து 330 கடல் மைல்களுக்கு அப்பால் 46 பேரைக் கொண்ட இலங்கையர்களின் படகு ஒன்றை இந்தோனேசிய கடற்படையினர் நேற்றுமுன்தினம் மீட்டுள்ளனர்.

ஏற்கனவே அந்தப் படகு இந்தோனேசியக் கடற்படையினரால் கடந்த 23 ஆம் திகதி அவதானிக்கப் பட்ட போதும், அது வர்த்தக நோக்கில் வந்த படகாக இருக்கலாம் என்ற அடிப்படையில் கண்காணிக் கப்படவில்லை.

எனினும் நேற்றுமுன் தினம் வியாழக் கிழமை அருகில் சென்று பார்த்தபோதே குறித்த படகு பழுதடைந்தி ருந்தமை கண்டு பிடிக்கப்பட் டது.

அ தில் இருந்த 46 இலங்கையர்களும் மீட் கப்பட்டனர்.

அவர்கள் கிறிஸ்மஸ் தீவுக்குச் செல்லும் நோக் குடன் இலங்கையில் இருந்து புறப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது
வித்தியா

## இன்றைய நாள்
### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பணம் தேவையான அளவு இருக்கும். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.

**இடபம்:** அடிமனதில் இருந்த பயம் விலகும். துணிச்சலுடன் சில முடிவுகளை எடுப்பீர்கள். அலைச்சல் தந்த வேலைகளை உடனே முடிப்பீர்கள். பணவரவு திருப்தி தரும். உடல் நிலை சீராகும். வெளிவட்டாரம் மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்:** உங்களின் குறிக்கோளை எட்டிப்பிடிக்க முயற்சிப்பீர்கள். அரசியல்வாதிகளின் சந்திப்பு கிடைக்கும். விருந்தினர்களின் வருகையால் வீட்டில் சந்தோஷம் ஏற்படும். வேற்று மதத்தினரால் உதவி கிடைக்கும்.

**கடகம்:** அதிரடித் திட்டங்களைத் தீட்டுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உங்களைத் தேடிவந்து சிலர் உதவி கேட்பார்கள். வியாபாரத்தில் மகிழ்ச்சி தங்கும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.

**சிங்கம்:** அதிகாரப்பூர்வமாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப்பெறுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.

**கன்னி:** தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். குடும்பத்தினர் சிலர் உங்கள் மனம் நோகும்படி பேசுவார்கள். சிலரின் தவறுகளை சுட்டிக் காட்டுவதன் மூலம் சச்சரவுகளில் சிக்குவீர்கள். உத்தியோகத்தில் சிறுசிறு அவமானங்கள் வந்து நீங்கும்.

**நாளை**

மார்கழி -22 ஞாயிற்றுக்கிழமை 06.01.2013
திதி: நவமி பி.ப 03.16 வரை
நட்சத்திரம்: சித்திரை மு.ப 09.26 வரை
சுபநேரம்: 09.32- 11.02 வரை
ராகுகாலம்: 05.02- 06.32 வரை

**துலாம்:** சின்ன சின்ன வேலைகளையும் அலைந்து முடிக்க வேண்டி வரும். விலை உயர்ந்த பொருள்களைக் கவனமாகக் கையாளுங்கள். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் விவாதம் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** பளிச்சென்று பேசி எல்லோரையும் கவருவீர்கள். உத்தியோகத் தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். தாய்வழி உறவினர்களில் இருந்துவந்த மனக்கசப்புகள் விலகும்.

**தனுசு:** தைரியமான முடிவுகளை எடுத்து வெற்றி காண்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். சகோதர வகையில் மகிழ்ச்சி தங்கும். உறவினர்கள், நண்பர்களின் சந்திப்பு நிகழும்.

**மகரம்:** மனக்குழப்பங்கள் விலகும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. உத்தியோகத்தில் வேலைப்பளு குறையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவி கிடைக்கும். அரச வேலைகள் சுமுகமாக முடியும்.

**கும்பம்:** மறதியால் பிரச்சினைகள் வந்து நீங்கும். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்துவார்கள். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். சிலர் உதவுவதைப் போல் உபத்திரவம் தருவார்கள். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் உண்டு.

**மீனம்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணப்பற்றாகுறை விலகும். மனதிற்குப் பிடித்தவர்களை சந்தித்து மகிழ்வீர்கள். மனநிறைவுடன் சில வேலைகளை செய்து முடிப்பீர்கள். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு.

## சுடோக்கு
### எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 3 | 9 | 1 | | | |
| 3 | 1 | | 7 | | | 5 | 9 | |
| | | 7 | 2 | | | | | 4 |
| 8 | 7 | | 6 | | | 4 | | |
| | 3 | 5 | | 1 | | 6 | 2 | |
| | | 6 | | | 4 | | 3 | 9 |
| 2 | | | | | 7 | 1 | | |
| | 5 | 1 | | | 2 | | 4 | 3 |
| | | | 1 | 5 | 9 | | | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 7 | 5 | 3 | 9 | 8 | 2 | 6 | 1 |
| 6 | 2 | 1 | 7 | 4 | 5 | 8 | 3 | 9 |
| 9 | 8 | 3 | 1 | 2 | 6 | 5 | 4 | 7 |
| 7 | 6 | 2 | 4 | 1 | 3 | 9 | 5 | 8 |
| 8 | 1 | 4 | 9 | 5 | 2 | 3 | 7 | 6 |
| 5 | 3 | 9 | 6 | 8 | 7 | 4 | 1 | 2 |
| 1 | 4 | 6 | 8 | 3 | 9 | 7 | 2 | 5 |
| 3 | 5 | 8 | 2 | 7 | 1 | 6 | 9 | 4 |
| 2 | 9 | 7 | 5 | 6 | 4 | 1 | 8 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலராக
05
☆
03
☆
1954

சருகாக
23
☆
12
☆
2005

**திதி :- 05.01.2013**

ஆண்டுகள் தான் ஏழு ஆனதுவோ அப்பா- நாம்
எழவில்லை இன்னும் எம் துயரிலிருந்து- நீர்
எழுந்து வருவரென ஏங்கியிருந்தோம்- அப்பா
எப்போ தான் எழுவீரோ எம்- அப்பா
நாம் எழுந்து நிற்பதற்காய் நீர் உழைத்தீர்- இவ்வுலகினிலே
நாம் எழுந்தோம் உம் உழைப்பால்- நீர்
கண்ட கனவினைப் போல்- அப்பா
கனவுகளின் நனவுகளைக் காணாது- அப்பா
உறங்குகின்றீர் எம் உள்ளங்களில்
உம் உறக்கம் நிம்மதியாய் நீடிக்க- நாம்
இறைவனிடம் வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**அமரர் நல்லதம்பி தர்மலிங்கம்**

-குடும்பத்தினர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும்மேகக் கூட்டத் துடன் கூடிய வானிலை நிலவும்.

## திருட்டுப் போனது இரும்பு

நவாலியில் உள்ள இரும்புத் தொழிற்சாலை ஒன்றில் வைக்கப்பட்டிருந்த இரும்புகள் திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை நடைபெற்றுள்ளது.

நவாலி கலையரசன் வீதியில் உள்ள சிவபாலன் என்பவரது தொழிற்சாலையில் கேற் வகைகள், வீட்டு யன்னல்கள் செய்வதற்காக இரும்புகள் வெட்டி வைக்கப்பட்டிருந்தன.

அந்த இரும்புகளையே திருடர்கள் திருடிச் சென்று இருக்கிறார்கள். இதன் பெறுமதி முப்பது ஆயிரம் ரூபா என தெரிவிக்கப்படுகின்றது. (3-100)



யாழ் முகாமையாளர் சம்மேளனம் ஏற்பாடு செய்த "விஞ்ஞானமும் அபிவிருத்தியும்" தொடர்பான கலந்துரையாடல் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் யாழ். பல்கலைக்கழக இயற்பியல் துறை தலைவர் பேராசிரியர் பூ.இரவிராஜன் இந்தியா லக்னோ நகரில் நடைபெற்ற கணித விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற யாழ். இந்துக் கல்லூரி மாணவன் செல்வன் அ.அபிநந்தனுக்கு பரிசில்கள் வழங்குகிறார். (ம)

## ஆங்கில, சிங்கள வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், ஜன.5

யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு பாரதிமன்ற சனசமூக நிலையம் மாணவர்களுக்கென தமிழ், ஆங்கில, சிங்கள வகுப்புகளைத் தினமும் மாலை நேரத்தில் நடத்தவுள்ளது. இலவசமாக நடத்தப்படவுள்ள இந்த வகுப்புகளில் பயில விரும்பும் மாணவர்கள் சனசமூக நிலைய நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு மொழி வகுப்புகளுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கை கொண்ட மாணவர்களே அனுமதிக்கப்படவுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது. (3-8)

## வீதிக்கு ஒளி கிடைக்குமா?

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட கொடிகாமம் பருத்தித்துறை வீதி போதிய மின் விளக்குகள் இன்றிக் காணப்படுகின்றது.

இதனால் இந்த வீதியூடாக இரவு நேரங்களில் பயணிப்போர் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வீதியில் 500 மீற்றர் தூர இடைவெளியில் பொருத்தப்பட்டிருக்கும் இந்த மின் விளக்குகளில்சிலபழுதடைந்து ஒளிராமல் இருப்பதாகவும் இந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (3)

## இன்றும் நாளையும் மின் தடைப்படும்

வீதி அகலிப்பு பணிகளுக்காகவும், மின் மார்க்கங்களின் புனரமைப்பு பணிகளுக்காகவும் இன்றும் நாளையும் சில பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.

இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியில் இருந்து 6 மணிவரை துலாக்கட்டு, வதிரிப் பிரதேசம், சக்கலாவத்தைப் பிரதேசம், உடுப்பிட்டி வீதி பிரதேச சபை தொடக்கம் நவிண்டில் வரையான பிரதேசங்களிலும்,

நாளை குஞ்சர் கடையின் ஒரு பகுதி நவிண்டில், பொலிகண்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை தொண்டமானாறு, உடுப்பிட்டி, புனித நகர், கற்கோவளம், நெல்லண்டை, ஸ்ரான்லி வீதி, யாழ். மாநகர சபைப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத் தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும். (3)

## யோகா வகுப்பு

யாழ்ப்பாணம், ஜன.5

ஓம் கிரியா பாபாஜி யோகா ஆரண்யத்தின் திருநெல்வேலிக் கிளையால் இலவச யோகாசன பயிற்சிகள்நடைபெற்றுவருகின்றன.

தினமும் காலை 6.30 மணிக்கு பழங்கிணற்றடிப் பிள்ளையார் ஆலய கல்யாண மண்டபத்தில் இந்த வகுப்புகள் நடைபெறுகின்றன.

அத்துடன் மூச்சுப் பயிற்சி, தியானப்பயிற்சி போன்ற வகுப்புகளும் நடத்தப்படுவதால் ஆர்வலர்கள் கலந்து பயன் பெறலாம் என ஓம் கிரியா பாபாஜி யோக ஆரண்ய அமைப்பாளர் தெரிவித்துள்ளார் (3-14)

## 90 வீதமானோர் நாளாந்தம் மருந்து பயன்படுத்துகின்றனர்

### ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

இலங்கையில் 90 வீதமான மக்கள் தினமும் ஏதேனும் ஒரு மருந்தை பயன்படுத்தி வருவதாக சுகாதார அமைச்சு மேற்கொண்ட ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.

பெரும்பாலான மக்கள் பல்வேறு வகையான மருந்துகளை எந்தவித மருத்துவ ஆலோசனையும் இன்றி கடைகளில் வாங்கிப் பயன்படுத்தி வருகின்றனர்.

மருத்துவரின் ஆலோசனை யின்றி மருந்துகளை உட் கொள்வது மிகவும் ஆபத் தானது என்றும், பக்க விளைவு களை ஏற்படுத்தக் கூடும் என்றும் சுகாதார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள் ளார்.

அரச மருத்துவ மனைகளில் மாதம்தோறும் 45-50 மில்லியன் ரூபா பெறுமதியான பரசிற்ற மோல் வில்லைகள் நோயாளிகளுக்கு வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (3)

## மறைவின் முதலாம் மாத நினைவுநாள்



மண்ணில் - 24.02.1954
விண்ணில் - 05.12.2012

அமரர்
**செ.அடைக்கலம்**(S.A.கலம்)
(படப்பிடிப்பாளர், பனர் எழுதுநர்)
90, நூல் நிலைய வீதி, கூமாங்குளம்,வவுனியா.

பெற்றோர் : அமரர்கள் செபமாலை-ஞானம்மா
மனைவி : றெபேக்கா(ஜெயந்தி)
பிள்ளைகள் : றெனீசியஸ்,றெமீசியஸ்,கஜேந்தினி

"என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பிலும் வாழ்வார்."
சகோதரன் : செ.டானியல்(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
பிள்ளைகளான கிறிஸ்ரி சகோதரர்கள்.

இல. 174, 5/1,
மெசெஞ்சர் வீதி,
கொழும்பு-10.
011 239 2068
(24394)(5.6.7)

## பத்தாம் ஆண்டு நினைவலைகள்....



திருமதி
**தம்பு செல்லமுத்து**
(தம்பு ரீச்சர்)
(ஓய்வுபெற்ற கனிஷ்ட அதிபர்,
யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.)

மலர்வு: 29.04.1940
உதிர்வு: 26.12.2002
திதி: 05.01.2013

அன்பின் பிறப்பிடமாய்
அமைதியின் திருவுருவாய்
பண்பின் இருப்பிடமாய்
பாசத்தின் ஒளி விளக்காய்
பேரோடும் புகழோடும் பெருமையாய்
வாழ்ந்த உங்கள் நினைவுகளுடன்
பத்தாண்டுகள் கடந்ததம்மா....
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"திருவேரகம்",
அல்லாரை, மீசாலை.

அன்பின் கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவுகள்.

(27528)(2.6.7)

## கரைச்சி பிரதேசசபை அறிவித்தல்கள் – 2013

**1. கட்டட அனுமதி**

1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் பிரகாரமும் 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 52ஆம் பிரிவிற்கமைய கரைச்சி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அரச திணைக்களங்கள், அதிகார சபைகள், அரச அரசசார்பற்ற நிறுவனங்கள், வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் தங்களது ஆதனத்தில் புதிய கட்டடங்கள் மதில்கள் அமைக்கும் போது அல்லது பழைய கட்டடங்களின் திருத்தங்கள் மேற் கொள்ள வேண்டியிருப்பின் கட்டட அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். கட்டட அனுமதியைப் பெறுவதாயின் கரைச்சி பிரதேசசபையின் கரைச்சி, முரசுமோட்டை உப அலுவலகங்களில் வேண்டுகை கடிதத்தினை வழங்கி உரிய கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம். சபையின் அனுமதியின்றி கட்டப்படும் கட்டடங்கள் தொடர்பாக ஆதன சொந்தக்காரர் மீது குறித்த சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**2. வியாபார உரிமம்**

1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் கட்டளைச் சட்டத் தின் 150(4), 152(4) ஆம் பிரிவிற்கமைய அத்தியவசியமாக்கப்பட்டுள்ளது. கரைச்சி பிரதேசசபை எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் வியாபார / தொழில் நிலையங்களை நடத்தி வருகின்ற அனைத்து உரிமையாளர் களும் கரைச்சி பிரதேசசபையினால் வழங்கப்பட்ட வியாபார உரிமம் பெற்றிருத்தல் வேண்டும். வியாபார உரிமத்தை கரைச்சி பிரதேச சபையின் உப அலுவலகங்களான கரைச்சி, முரசுமோட்டை என்பவற்றில் பெற்றுக் கொள்ளலாம். வியாபார உரிமத்தை 31.03.2013 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் குறித்த சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**3. சூழல் பாதுகாப்பு உரிமம்**

சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக் கொள்ள வேண்டிய செயற்பாடு தொடர்பாக 2008ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் திகதி அதிவிசேட வர்த்த மானியில் "இ" பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் / வியாபார நடவடிக்கைகளைப் பிரதேச எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக் கொள்ள வேண்டும். மேற்படி தொழிலை/ வியாபாரத்தினை நடத்துபவர்கள் கரைச்சி பிரதேசசபை தலைமையகத் துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பபடிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து, சமர்ப்பித்து உரிய கட்டணத்தைச் செலுத்தி உரிமத்தைப் பெற்றுக் கொள்ளலாம். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**4. விளம்பரம், பெயர்ப்பலகைகளுக்கான அனுமதி**

கரைச்சிப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட இடங்களில் காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்குப் பிரதேசசபையிடம் அனுமதி பெறவேண்டும். அவ்வாறு அனுமதி பெறாதுள்ள விளம்பரங்கள் பிரதேச சபையால் எவ்வித முன்னறிவித்தலுமின்றி 31.03.2013 இற்குப் பின் அகற்றப்படும். வர்த்தக நடவடிக் கைகளில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களில் விளம்பரங்கள் இல்லாத தமது வர்த்தக நிலையம் தொடர்பான பெயர்ப் பலகை ஒன்று மட்டும் காட்சிப்படுத்த முடியும். விளம்பரங்களுடனான பெயர்ப்பலகை மற்றும் மேலதிகமாக உள்ள பெயர்ப்பலகைகளுக்கு பிரதேச சபையின் அனுமதி பெறல் வேண்டும். அவ்வாறு அனுமதி பெறாத பெயர்ப்பலகைகள் பிரதேச சபையால் அகற்றப்படும். மேலும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் தமது கடை கட்டட எல்லைக்குள்ளேயே பொருள்கள் காட்சிப்படுத்தவோ களஞ்சியப்படுத்தவோ முடியும். அவ்வாறு அல்லாது கடையின் வெளிப்புறத்திலோ வீதிக்கருகிலோ பொருள்களை காட்சிப்படுத்தவோ, களஞ்சியப்படுத்தவோ தடைசெய்யப்பட்டுள்ளது என்பதுடன் இவற்றை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

**5. வாகனங்கள், மிருகங்களுக்கான உரிமம்**

கரைச்சிப் பிரதேசசபை எல்லைக்குள் வசித்து வருகின்ற அனைத்து துவிச்சக்கர வண்டி உரிமையாளர்களும் தாம் வைத்திருக்கின்ற ஒவ் வொரு துவிச்சக்கர வண்டிக்குமான ஆண்டுக்குரிய உரிமத்தையும், நாய் வளர்க்கின்ற உரிமையாளர்கள் தாம் வளர்க்கும் நாய் ஒவ்வொன்றுக்கும் ஆண்டுக்கான உரிமத்தை கரைச்சிப் பிரதேசசபையின் உப அலுவலகங்களில் இருந்து நடப்பு நிதியாண்டின் பங்குனி மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ள வேண்டும். குறித்த ஆண்டுக்கான உரிமத்தைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**6. நடைபாதை வியாபாரம்**

கரைச்சிப் பிரதேசசபை எல்லைக்குள் நடைபாதை வியாபாரம் மேற்கொள்வது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. மீறி நடை பாதை வியாபாரத் தில் ஈடுபடுவோர் மீது பிரதேசசபையால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அப்பொருள்களும் பிரதேசசபையால் கையகப்படுத்தப்படும்.

[illegible] தவிசாளர், கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி.

(சி/5239)(6.2.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் - 1938.02.21

மறைவு - 2012.12.06

அமரர்

## சின்னப்பு விசாலாட்சி

எமது அன்புத் தெய்வம் அமரத்துவம் அடைந்த வேளை ஆற்றொணாத் துயரடைந்த எம்மை சகல வழிகளிலும் ஆற்றுப்படுத்திய அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி நவிலலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முதலாம் கட்டை, கல்வயல், சாவகச்சேரி. குடும்பத்தினர்.

(27466)(6.7.11)

# மரண அறிவித்தல்கள்

## சிவஞானம் மகேந்திரநாத்

*(ரதி வோச் -யாழ்ப்பாணம்)*



கொக்குவில் மேற்கு, மஞ்சவனப்பதி வீதியைப் பிறப்பிடமாகவும் அராலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் மகேந்திரநாத் 03.01.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஞானம் -மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-பூராசாத்தி தம்பதியரின் அன்பு மருமகனும், மங்களாதேவியின் அன்புக் கணவரும் நவகீதா, சசிதரா (டுபாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரமேந்திரனின் அன்பு மாமனாரும் நித்திக்கா, நிதர்ஷிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் பூபாலேந்திரா (மருந்தாளர்- வவுனியா), காலஞ்சென்றவர்களான தனபாலேந்திரா, குணபாலேந்திரா மற்றும் சுப்பிரமணியம் (ஜேர்மனி), பாலேந்திரன் (ஜேர்மனி), பாலநாத் (லண்டன்), காலஞ்சென்ற ஜெய பாலேந்திரா, காலஞ்சென்ற பாலசகுந்தலா, பாலசறோஜினி (கொக்குவில்), இந்திராதேவி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோ தரனும், இலட்சுமிதேவி (கனடா), கதிர்காமநாதன் (யாழ்ப்பாணம்), பூரணாம்பிகை (ஆஸ்திரேலியா), வைத்தியநாதன் (கனடா), காலஞ் சென்ற நாகேஸ்வரி, கிருபநாதன் (ஜேர்மனி), ஜெயந்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.01.2013) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அராலி வடக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூரணவாசா
அராலிவடக்கு, வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.
021 492 1820

## திருமதி கோசலா தனபாலன் (கோபி)

(முன்னாள் ஆசிரியை, யா/ புனித ஜோன் பொஸ்கோ, யாழ்ப்பாணம், சென். மேரிஸ் கல்லூரி, திருகோணமலை)



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், அம்மன் வீதி, கந்தர் மடத்தில் வசித்தவருமாகிய திருமதி கோசலா தனபாலன் நேற்று (04.01.2013) வெள்ளிக்கிழமை திருகோணமலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தங்கராசா - சிவஞான சரஸ்வதி தம்பதியரின் ஏகபுதல்வியும், காலஞ்சென்றவர்களான முருகேசு - கனகேஸ்வரி தம்பதியரின் மருமகளும், தனபாலனின் அன்பு மனைவியும், தனுசலா, சிவனுஜா ஆகியோரின் அன்புத் தாயாரும் பிரதீஸின் அன்பு மாமியாரும், தனேஸின் அன்புப் பேர்த்தியாரும், சிவபாலன், குணபாலன், சந்திரபாலன், ஜீவச்சந்திரமணி, சுந்தரபாலன், நந்தபாலன், விஜயபாலன், காலஞ்சென்றவர்களான தேவபாலன், கிருஸ்ணபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (06.01.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் இல.44, கடல் முக வீதி, (SEA VIEW ROAD) திருகோணமலை இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் திருகோணமலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு.தனபாலன்
(கணவர், முன்னாள் கணித ஆசிரியர் யா/ புனித பத்திரிசியார் கல்லூரி)

தொ.பே:
0262225320

(27954)(6.7.11)

# மீசாலை விபத்துடன் தொடர்புடைய சாரதிக்கு விளக்கமறியல்

தென்மராட்சி,ஜன.05

மீசாலை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பலியான சம்பவம் தொடர்பான மினி பஸ் சாரதி விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

கொடிகாமம் பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிமன்றத்தில் பதில் நீதிவான் முன்னிலையில் வாகன சாரதியை முற்படுத்தினர். வழக்கை விசாரித்த பதில் நீதிவான் செ. கணபதிப்பிள்ளை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் மரண விசாரணை எதிர் வரும் பெப்ரவறி 15 ஆம் திகதி நடத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

விபத்தில் அலுகம்பவத்தவைச் சேர்ந்த பி.பத்திகே நிஹால் (வயது-40) என்னும் பொறியியலாளரே மரணமானவராவார். (ம-9)

# ஆஸ்பத்திரி வீதியில் வாகனம் நிறுத்த விரைவில் தடை வரும்

யாழ்ப்பாணம், ஜன. 5

யாழ். ஆஸ்பத்திரி வீதிக்குக் காப்பெற் போடும் வேலைகள் பூர்த்தியடைந்ததும் வீதியின் நடுப்பகுதியில் வாகனம் நிறுத்தத் தடை செய்யப்படவுள்ளது.

வாகனங்களை நிறுத்துவதற்குத் தனியார் காணிகளை இனங்கண்டு அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நகரில் தனியார் காணிகள் பயன்படுத்தப்படாத நிலையில் போதிய அளவு இருப்பதாகவும் கூறப்பட்டது.

ஆஸ்பத்திரி வீதியில் எல்லை தாண்டியிருக்கும் வடிகால்கள் உடைக்கப்பட்டு அவற்றை நடைபாதையாக மாற்ற நகர அபிவிருத்தி அதிகார சபை உதவும் எனவும் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

(ம-7)

# மோட்டார் சைக்கிள் சறுக்கி விபத்து

தென்மராட்சிஜன.5

மோட்டார் சைக்கிள்சில்லு சறுக்கி மோட்டார் சைக்கிள் தூக்கி வீசப்பட்டதில் கணவனும் மனைவியும் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நாவற்குழிச் சந்திக்கு அருகில் இடம்பெற்றது. வீதி வளைவில் மோட்டார் சைக்கிள் திரும்பிய போது கல்லுக்குள் சில்லுச் சிக்கித் தூக்கி வீசியதில் காயமேற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மந்துவில் மேற்கைச் சேர்ந்த சண்முகராசா சந்திரராஜா (வயது-30), அவரது மனைவியான சந்திரராஜா சுபாஷினி (வயது-30) ஆகிய இருவரும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-9)


# இலவச சேவைகளுக்காக பதிவினை மேற்கொள்ளவும்

வன்னி மக்களின் வசதிக்கேற்ப தூர நோயாளர்களின் நலன் கருதி கிளிநொச்சி பேருந்து நிலையத்திற்கு அண்மையில் அமைந்துள்ளது.

SAS HOSPITAL

இங்கு வைத்தியர்கள் பார்வையிடல், பார்மசி செயற்கைக்கால் மையம் , மெடிக்கல் இன்ஸி ரியூட் அத்துடன் யாழ். ஜெய்ப்பூர் மையத்துடன் சேர்ந்து இலவசமான செயற்கைக்கால்கள் பொருத்தி பராமரிப்பு வழங்கப்படும். இந்த இலவச சேவையை பெற விரும்புவோர் எம்மிடம் பதிவினை மேற்கொள்ளவும்.

இல: 203, A-9 வீதி,
பொதுச்சந்தை அருகில், கிளிநொச்சி,
021 4913082.
sas hospital @ gmail .com.

(26131) (6.7.4)


# தவறி விட்டது

பெரிய மாவடி, சுன்னாகத்தை சேர்ந்த இராஜேந்திரன் இலங்கேஸ்வரன் என்பவருடைய தே.அ.அ, வாகனவரிப்பத்திரம் (500 8885) ரான்ஸர் போம் என்பன சுன்னாகத்திற்கும் அவரது வீட்டிற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 0779127509,0778827905

(27597)(6.7.11)


# விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய ஜேமன் சப்பேட் அல்சேசன் ஆண், பெண் நாயும், பொமேரியன் ஆண், பெண் நாயும், 45 நாள் பூர்த்தியான பொமேரியன் குட்டிகளும், மணிபுறா, வெள்ளடியான், புறால், வண்டம், கிளிகள்

தொடர்பு: வி. மயூரன் - புன்னாலைக் கட்டுவன் தெற்கு, ஆயக்கடவை பிள்ளையார் கோவில் முன்பாக, பூதராயர் கோவிலடி, டயலொக் டவர் அருகில்.

(27600) (45.6.7)

# தேவை

இல்லத்திற்கு இயக்குனர், பராமரிப்பாளர், ஆங்கில,சிங்கள, பரதநாட்டிய,சங்கீத ஆசிரியர்கள் தேவை.ஊதியம் பேசித்தீர்மானிக்கப்படும்.
செஞ்சோலை சிறுவர் பராமரிப்புஇல்லம்,
4,5/2 திருவையாறு,
கிளிநொச்சி.
பதிவுஎண்.NEP/PCC/CH/134
தொடர்புகளுக்கு:0213734848
email:sencholai1992@gmail.com

# அறைகள் வாடகைக்கு

நல்லூர் கோயிலில் இருந்து 500m சுற்றாடலில் அறைகள் வாடகைக்கு உண்டு. பல்கலைக் கழக மாணவர்கள், தங்கி வேலை செய்பவர்களுக்கு உகந்தது. 1 அறை 5000 /= (3 பேர் பயன்படுத்தலாம்) பெண்களுக்கு மட்டும்.

தொடர்பு :0757277986, 0777341994

(27595)(6.7.11)


# மரண அறிவித்தல்



## இராமச்சந்திரன் சிவகுமார் (மைந்தன்)

விசுவமடு, 12/2, தொட்டியடியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட இராமச்சந்திரன் சிவகுமார் (மைந்தன்) 24.12.2012 திங்கட்கிழமை லண்டனில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமச்சந்திரன் - சரஸ்வதி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற அம்பிகைபாகன் - சரீரதேவி தம்பதியரின் மருமகனும், துவாஜினியின் (லண்டன்) பாசமிகு கணவரும், சாஜகாவின் (லண்டன்) பாசமிகு தந்தையும், விஜயகுமார் (லண்டன்), உதயகுமார், அமிர்தாம்பிகை (ஆசிரியை - முல்லைத்தீவு பாரதி வித்தியாலயம்), விமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவசீலன் (லண்டன்), சத்தியசீலன் (லண்டன்), அமுதினி (பிரான்ஸ்), பகீரதி (கனடா), கேதனி, இராஜகோபால், சிவறூபி (குடும்ப நல உத்தியோகத்தர் - கண்டாவளை), ரசிக்குமார் ஆகியோரின் மைத்துனரும், கம்சிகா, கவியரசன், லனுசிகா ஆகியோரின் பாசமிகு பெரிய தந்தையும், மிதுனகா, திசானி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.01.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு St. Marylebone Crematorium, East end Road, London $N_2$ ORZ இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விசுவமடு, 12/2, தொட்டியடி.
தொ.பே. 077 8660 143, 0044 75724 32048.

தகவல்:
தாய்,
சகோதரர்கள்,
மைத்துனர்கள்.

(26133) (45.6.7)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தொழிற்கல்வி

குறுகிய காலத்தில் 100% தொழில் உத்தரவாதத்துடன் உயர்வருமானம் தரும் சான்றிதம் பயிர்சி பாடநெறிகள்

**Computer Repairing**
**Electrical Wiring**
**Mobile Phone Repairing**

1.கனணி திருத்துதல்
2.வீட்டு மின் இணைப்பு
3.கையடக்க தொலைபேசி திருத்துதல்


IISEEES NALLUR CAMPUS
762,பருத்தித்துறை வீதி. நல்லூர்

பதிவுகளுக்கு
0777 444 225

# மரண அறிவித்தல்கள்

## சின்னட்டி திருநாவுக்கரசு

(ஓய்வுபெற்ற மருந்துக் கலவையாளர்)



அல்வாயைப் பிறப்பிடமாகவும், அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னட்டி திருநாவுக்கரசு நேற்று (04.01.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் நாகேஸ்வரியின் (ஆசிரியை) அன்புக் கணவரும், ஆதவன் (தபால் அதிபர்), பத்மாஸ் (விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌசல்யா, ஜெய தாட்சாயினி (கால்நடை வைத்தியர்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3/1, ஸ்ரான்லி கல்லூரி வீதி,
கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம்.

தகவல்:
ஆதவன் (மகன்)

## நல்லையா சிதம்பரேஸ்வரன்



(நூலக பணியாளர், கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்)

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா சிதம்பரேஸ்வரன் நேற்று (04.01.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையா மற்றும் சரோஜினிதேவி (தங்கமணி) தம்பதியரின் அன்பு மகனும், சிறீமதியின் அன்புக் கணவரும், சுமூகாவின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2013) சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் வீதி,
இணுவில் தெற்கு, இணுவில்.

தகவல்:
சிறீமதி (மனைவி)

## வேலன் கந்தையா

(சங்கானை)



பழைய தபாற்கந்தோர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் கந்தையா நேற்று (4.01.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலன் - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அருமைக் கணவரும், இராசேந்திரம் (கனடா), மகாலிங்கம், இரத்தினசிங்கம், துரைசிங்கம், சிறிபத்மநாதன், கணேசலிங்கம், செல்வரத்தினம், ஞானசௌந்தரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரா, வசந்தமலர், நந்தினி, மணி, விஜி, இராசமலர், அன்னலட்சுமி, புவனேந்திரம் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2013) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை இந்துகரைச்சி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய தபாற்கந்தோர் வீதி,
சங்கானை. 0770420470

தகவல்:
குடும்பத்தினர்.

# மழை தொடரும்

யாழ்ப்பாணம், ஜன.5

வடக்கு, கிழக்கு, மத்திய, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களில் காற்றுடன் கூடிய மழையும், இடிமுழக்கமும் அடுத்து வரும் 12 மணி நேரத்துக்கு காணப்படும் என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை மதியம் 1 மணியளவில் விடுவிக்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம், நாட்டின் பல பாகங்களிலும் கடுமையான காற்று வீசும் எனவும் சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தெற்கு, தென்கிழக்கு, கிழக்கு கடல் கடும் கொந்தளிப்பாக இருப்பதுடன் கடுமையான கடற் காற்றும் வீசும் என்று அந்த அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

**விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள TATA 1615 இன் அடித்தட்டு நீளம் 22' உடனடி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777281399

அனுபவமிக்க British Council Tr.
· கொழும்பு ஆசிரியர் குழுவால்.

**SPOKEN ENGLISH**
**IELTS 6.5 Guaranteed**

தனித்தனியாகவோ, குழுக்களாகவோ பங்குபற்ற முடியும் 0777444225
IISEEES NALLUR CAMPUS
762, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ்ப்பாணம்,
K.K.S வீதி, (நீலாம்பரி உணவகம் (முன்பாக)
சகல வசதிகளுடன் கூடிய பெரிய வீடு வாடகைக்கு உண்டு.
(நிறுவனங்கள் விரும்பத்தக்கது)
தொடர்பு: 0777311683,
0776028670
(27974)(8.7.11)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர். திரு. இராமலிங்கம் நகுலேசபிள்ளை**

(சரவணைகொட்டாங்காட்டு ஞானவைரவ ஆலய தர்மகர்த்தா)
(சமாதன நீதிவான் J.P. சரவணை மேற்கு வேலணை)

| தாயின் மடியில் | இறைவனின் அடியில் |
|---|---|
| 02.01.1927 | 18.12.2011 |

அகவை ஒன்று அகன்றே
நின்றாலும் அழியாத
நினைவலைகள் கண் முன்னே
வாழ்ந்த காலம் கனவாகிப்
போனாலும் எம் முன்னே உங்கள்
முகம் எந்நாளும் உயிர் வாழும் எம்
வாழ்வின் வாழ்விற்கு பெயர்
சொல்லும் முகவரிகள் என்றும்
மாறாது ஐயா!
நீங்கள் தந்த அன்பு என்றும்
நிலைத்து நிற்கும் நினைவுகளாய்

தோணிக்கல்
வவுனியா

அன்பின் நினைவு கூரும்
மகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
23 * 08 * 1923



மறைவு
06 * 12 * 2012

**அமரர் கனகசபை இராசரத்தினம்**

கடந்த 06.12.2012 இறைவனடி சேர்ந்த இராசரத்தினத்தின் மறைவை ஒட்டி அனுதாபச் செய்தி தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி அழைப்பு மற்றும் வெளிநாட்டு உறவுகளுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (05.01.2013) சனிக்கிழமை வீட்டில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

K.K.S றோட், இணுவில்.

தக்வல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## பொன்னம்பலம் இலட்சுமி அம்மா



நவாலி வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் இலட்சுமி அம்மா 03.01.2013 வியாழக்கிழமை மாலை 5.45 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னம்மா தம்பதியரின் மூத்த மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.01.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலவர் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:
பொ.கிருபானந்தன்
(குடும்பத்தினர்)

## திருமதி சுலோச்சனா பாலகுமாரன்



மல்லாகத்தை (பங்களாலேன்) பிறப்பிடமாகவும், கொழும்பு, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுலோச்சனா பாலகுமாரன் (03.01.2013) அன்று காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திருமதி றோஸ்மணி (சீதா) மற்றும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற தன்மாவரதர் மற்றும் சரஸ்வதி தம்பதியரின் பாசமிகு மருமகளும், பாலகுமாரன் (கணக்காளர் - Aanjaneyar Gament Factory) அவர்களின் அன்பு மனைவியும் பாலினியின் அன்புத் தாயும், சிறிநிவாசன், சிவநேசன், ஜெபநேசன், ராஜசிங்கம், கணேசன், ரவீந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுமதி, சுதர்சினி, புஸ்பா, வசந்தி, விஜிதா, வனஜா, பாலச்சந்திரன், பாலதயாளன், பாலராஜன், சீதாலக்ஷ்மி, பாலேந்திரன், சகுந்தலா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று (05.01.2013) சனிக்கிழமையும் நாளை (06.01.2013) ஞாயிற்றுக்கிழமையும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியை மு.ப. 11மணியளவில் நடைபெற்று தனகக்கிரியைகள் கல்கிசை பொது மயானத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

தொ.பே.இல.
0114 954 593
0773 013 756

22-2/1, Moor Road, Wellawatte,
Colombo - 06

(சி/5306)(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ/து)

அங்கத்தவர் கவனத்துக்கு:

எமது சங்கம் 2011, 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தரம் 05 இன் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய அங்கத்தவர்களின் பிள்ளைகளை கௌரவிக்க உள்ளமையால் சித்தியடைந்த தங்கள் பிள்ளைகளின் சித்திக்கான விவரங்களை அவர்கள் பாடசாலையினால் உறுதிப்படுத்தி 05.02.2013 ஆம் திகதிக்கு முன்னர் சங்கக் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பொதுமுகாமையாளர்
யா.மா.த.பா.உ.கூ.சங்கம்,
கோண்டாவில். (சி/5265)45.6.7)


# பசளை விநியோகத்தில் தடைகள்

கிளிநொச்சி,ஜன.5

கமக்கார அமைப்புக்கள் பயிர்களுக்கு ஏற்பட்ட அழிவு விவரங்களை இதுவரை சமர்ப்பிக்காமையால் பசளை விநியோகத்தில் தடைகள் ஏற்பட்டுள்ளதாக கமநல சேவை நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஊரியான், மகிழங்காடு ஆகிய இரண்டு கமக்கார அமைப்புகள்தவிர்ந்த ஏனைய கமக்கார அமைப்புகள் கிளிநொச்சியில் கனமழை, வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்ட விவசாய பயிரழிவுகளை கிளிநொச்சி கமநல சேவைகள் நிலையத்திடம் ஒப்படைக்காததால் பசளை விநியோகத்தை மேற்கொள்வதில்தடைகள் காணப்படுகின்றன

ஆகவே கமக்கார அமைப்புகள் விவசாய அழிவு விவரங்களை உடனடியாக ஒப்படைத்து உதவுமாறு கிளிநொச்சி கமநல சேவைகள் நிலையத்தினர்கேட்டுக் கொண்டுள்ளனர். (க-426)


## கார் விற்பனை

14 ஸ்ரீ xxxx MMC லான்சர் வெள்ளை நிறக்கார் விற்பனைக்குண்டு.
Scooty or Pleasure இக்கு மாற்றம் செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு :0772963262 (27973)(6.711)

## கண்ணீர் அஞ்சலி



எமது கலாமன்ற நிர்வாக உறுப்பினர்
செல்லத்துரை சங்கரப்பிள்ளை
அவர்களின் பாசமிகு சகோதரியும் கலா
மன்ற கௌரவ செயலாளர்
இராசசிங்கம் திருப்புகலூர்சிங்கம்
அவர்களின் அன்பு மாமியும்ஆகிய
**சண்முகநாதன் செல்லம்மா**
அவர்களின் மறைவுத்துயர் அறிந்து அன்னாரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய ஈழத்து சிதம்பர தில்லைக்கூத்தன் திருவடிகள் சேரப்பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி! சாந்தி! சாந்தி!

கிழவன்காடு கலாமன்றம்,
காரைநகர். (27969)(6.7.4)

நிர்வாகசபையினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
## கலைப்பீடம்

**ஆங்கில பாட விசேட மீள்பரீட்சை - 2010**

பட்டமளிப்பு விழாவில் பங்குபற்ற தகுதியுடைய கலைப்பீட மாணவர்களுக்கான ஆங்கில பாட விசேட மீள் பரீட்சைகள் 2013.01.10 ஆம் திகதி ஆரம்பமாகும்.

பரீட்சை நேர அட்டவணையினை யாழ் பல்கலைக்கழக கலைப்பீட விளம்பர பலகையில் பார்வையிடலாம்.

பதிவாளர். (c/5068)(6.711)



(27958)(6.7.1)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

## Basic English with spoken

**G.C.E(O/L)** பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேட ஆங்கில கற்கை 3 மாத கால பயிற்சிநெறி
புதிய பிரிவு: 11-01-2013
மட்டுப் படுத்தப் பட்ட அனுமதிகள்
காற்றுள்ள போது தூற்றிக்கொள்ளுங்கள்

- English vocabulary
- Reading Skills
- ஆங்கிலம் சரளமாக பேசுவதற்கான நவீன கற்பித்தல் வழிமுறைகள்
- English Writing skills with basic Grammar
- பயிற்சி நெறியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
- கொழும்பு ஆசிரியர்களால் விரிவுரைகள் வழங்கப்படும்

**இலவசம் சான்றிதழுடன்** Diploma in Information Technology கற்கை நெறி உள்ளடக்கம் (Office Applications, Graphics Applications Hardware & Network &Basic IT Concepts)

**International Knowledge Pool**
19,ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம் (மக்கள் வங்கி 3 வது மாடி)
வதிரி வீதி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அருகில்
மேலதிக விபரங்களுக்கு: ☎2221864 / 0771895164

# மலிவோ மலிவு...









## 2013 ஆம் ஆண்டின் மாபெரும் மலிவு விற்பனை

Intel Dualcore 3rd Gen processor
Biostar H61MGV Motherboard
2GB Kingston DDR-3 Ram
320GB Mytouch Harddisk
Samsung 24x Dvd Writer
Porch ATX Tower Casing
Prolink Keybord Mouse
16" Benq LED Monitor
Speaker free



SALE Rs.44,800

Intel Dualcore 3rd Gen processor
Intel 61 HO Motherboard
2GB Kingston DDR-3 Ram
500GB Toshiba Harddisk
Samsung 24x Dvd Writer
Porch ATX Tower Casing
Prolink Keybord Mouse
19" Hp LED Monitor
Speaker free




SALE Rs.49,500

Intel Core i3 3.30GHZ processor
Intel 61 HO Motherboard
2GB Kingston DDR-3 Ram
500GB Toshiba Harddisk
Samsung 24x Dvd Writer
Porch ATX Tower Casing
Prolink Keybord Mouse
19" Hp LED Monitor
Speaker free



SALE Rs.56,900


### Hp Presario Cq57



Core i3-2310 Processor
4GB DDR-3 Ram
500GB Harddisk
DVD Writer
15.6 LED Screen
Bluetooth,WiFi
**Windows Home Basic** free

SALE Rs.72,000


### Hp Presario Cq58



AMD Dualore Processor
2GB DDR-3 Ram
320GB Harddisk
DVD Writer
15.6 LED Screen
Bluetooth,WiFi
**Windows Home Basic** free

SALE Rs.57,500

### Samsung RV 413



AMD Dualore Processor
2GB DDR-3 Ram
500GB Harddisk
DVD Writer
14.0 LED Screen
Bluetooth,WiFi
**Windows Dos** free

SALE Rs.54,500




நீங்கள் கொள்வனவு செய்யும் அனைத்து (Laptop,Desktop) கணனிகளுக்கும் Greentel-G10 கையடக்கத்தொலைபேசி **இலவசம்**

**இச்சலுகை 05.01.2013-10.01.2013 வரை மட்டுமே**

மேலதிக விபரங்களுக்கு:- *T.A Mobile & Computer System*
No:-03 Aalady Junction,Manipay, Tel:-077 2622373


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிஸானா விரைவில் நாடு திரும்பும் சாத்தியம்

சவூதி அரேபியாவில் மரண தண்டனை விதிக் கப்பட்டுள்ள இலங்கை பணிப்பெண் ரிஸானா நபீக் விரைவில் நாடு திரும்பும் சாத்தியம் உள்ளது.

இவ்வாறு இலங்கைக் கான சவூதி அரேபியத் தூதுவர் அப்துல் அஸீஸ் அல் ஜம்மாஸ் தெரிவித்தார்.

சவூதி அரேபியத் தூது வர் மற்றும் நீதியமைச் சரான ரவூப் ஹக்கீம் ஆகியோருக் கிடையிலான சந்திப்பு கடந்த வியாழக்கிழமை நீதி அமைச்சில் நடைபெற்றது.

இதன்போதே இலங்கைக் கான சவூதி அரேபிய தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நீதி அமைச்சின் ஊடக பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையிலே மேற்கண்ட வாறு தெரிவிக்கப்பட் டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

பணிப்பெண் ரிஸானா நபீகின் விடுதலை தொடர் பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சவூதி மன்னர் அப்துல்லாஹ் பின் அப்துல் அஸீஸ் அல் சவூதிற்கு அனுப்பி வைத்த கருணை மனு சாதகமான முறையில் பரிசீலனைக்கு எடுக்கப்பட் டுள்ளது.

இதனால், உயிரிழந்த குழந்தையின் பெற்றோரு டனான சமாதான முயற்சி கள் பயனளிக்கும். இதன் காரணமாக ரிஸானா விரை வில் நாடு திரும்பும் சாத்தி யம் உண்டு. மனிதாபிமான அடிப்படையிலான ஜனாதிபதியின் கோரிக்கைக்கு சாதகமாக கொழும்பிலுள்ள சவூதி அரேபிய தூதுவராலயம் விஷேட குறிப்பு களை இணைத்து அனுப்பி யது.

அத்துடன், சவூதி மன்ன ரின் வேண்டுகோளின்படி ரியாத் ஆளுநர் சல்மான் ஏற்கெனவே உயிரிழந்த குழந்தையின் குடும்பத் தினரோடு தொடர்பு கொண் டுள்ளார்.

ரிஸானா நபீக் பணிப் பெண்ணாக சென்றி ருந் தார். பாலூட்டும் கடமை பணிப்பெண்ணுக்கு உரிய தல்ல. அது குழந்தை பராமரிப்பாளருக்கு உரியதாக இருப்பதும் விடு தலைக்கு சாதகமான காரணிகளாக அமையலாம் என சவூதி அரேபிய தூதுவர் தெரிவித்தார்.

**இலங்கை மற்றும் சவூதி அரேபியா ஆகிய நாடு களில் சிறைத் தண்டனை விதிக்கப்படும் கைதிகளை பரிமாறிக் கொள்ளுவது தொடர் பாக உடன்படிக்கை யொன்றை செய்து கொள்ளு வது பற்றியும் தூது வரிடம் எடுத்துக் கூறினார்.**

ரிஸானா நபீக்கின் கட வுச்சீட்டிலும் பயண ஆவ ணங்களிலும் வயதைக் கூட்டிக் குறிப்பிட்டு மோசடியான முறையில் அவரை சவூதி அரேபியாவுக்கு அனுப்பிய பயண முக வர்கள் கைது செய்யப்பட்டு, அவர்களுக்கு எதிராக வழக் குத் தொடரப்பட்டு தண் டனை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் சவூதி அரேபியா ஆகிய நாடு களில் குற்றவாளிகளாக காணப் பட்டு சிறைத் தண்டனை விதிக்கப்படும் கைதிகளை பரஸ்பரம்பரி மாறிக் கொள்ளுவது தொடர் பாக உடன்படிக்கையொன்றை செய்து கொள்ளுவது பற்றியும் அமைச்சர் ஹக்கீம் துது வரிடம் எடுத்துக் கூறினார்.

முன்னாள் வெளிநாட்டு அமைச்சர் ரோஹித்த போகொல்லாகமவிற்கும் சவூதி அரேபியாவின் அப்போதைய உள்நாட்டு விவகார அமைச்சராக இருந்த இளவரசர் நாயிப் பின் அப்துல் அஸீஸ் ஆகியோரும் இந்த சிறைக் கைதிகள் பரிமாற்றம் விவகாரம் தொடர்பில் பயனுள்ள பேச்சு நடத்தி யிருந்ததாகவும் பின்னர் அது செயலுருப்படுத்தப் படாது போய் விட்டதாக வும் அமைச்சர் ஹக்கீம் தூதுவரிடம் தெரிவித்தார்.

நீதி அமைச்சருக்கும் சவூதி அரேபிய தூதுவருக் கும் இடையிலான இந்த சந்திப்பில் சவூதி அரேபியா வின் முன்னாள் ஜித்தா கொன்ஸியூலர் கலாநிதி அஷ்ஷெய்க் எம். இனா முல்லாவும் கலந்துகொண்டார். (3)


## Lorry விற்பனைக்கு

LJ xxxx தொடரிலக்கமுடைய LEYLAND Ecomet (1112 model) லொறி உடன் விற்பனைக்கு

தொடர்பு: 0777784314


## அபிவிருத்திச் சங்கத்துக்கு நிதி ஒதுக்கீடு

வலி.வடக்கு, ஜன.5

தெல்லிப்பழை பிர தேச செயலகத்துக்கு உட் பட்ட கட்டுவன் தெற்கு மகளிர் கிராம அபி விருத் திச் சங் கத்துக்கு பன்முகப் படுத்திய வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவிடம் விடுக்கப்பட்ட கோரிக்கை யின் அடிப்படையில் 50 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட் டுள்ளது.


கட்டுவன் தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க வளாகத்தில் குடி தண்ணீர் பெறுவதற் கான குழாய்க் கிணறு அமைப்பதற்காக இந்த நிதி ஒதுக்கீடு செய்து வழங்கப்பட் டுள்ளது.

கடந்த சுமார் 30 வருட கால இடை வெளியின் பின்னர் மீளக் குடியமர்ந்துள்ள மக்களின் குடிதண் ணீர் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் இந்த குழாய்க்கிணறு அமைக் கப்படுகின் றது. (ம-86)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் முத்துக்குமாரு (முத்துவேலி, நயினாதீவு)

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)



நயினாதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் பிரம்படியை வதிவிட மாகவும் கொண்ட ஆறுமுகம் முத்துக்குமாரு (ஓய்வு பெற்ற தபால் ஊழியர்) நேற்று (04.01. 2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னையா-விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், திலகவதியின் பாசமிகு கணவரும், புனிதநாதன்(அஞ்சலகம், நயினாதீவு), சிவநாதன்(ஜேர்மனி), ஜெகநாதன்(ஜேர்மனி), மகேந்திரநாதன்(ஜேர்மனி), சந்திரகலா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து, பொன்னம்பலம், சின்னம்மா, முருகேசு, விசாலாட்சி, ஐயாத்துரை, மாணிக்கம் மற்றும் பொன்னம்மா, நாகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், இந்திராணி, வசந்தமாலினி, சிவதர்சினி, ஜெயந்தி, சுகேந்திரன்(பௌதீகவியல்ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, சிவகங்கை மற்றம் மகாலிங்கம், குற்றாலம், இராசரெத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரதீப்குமார்(லண்டன்), திலீப் குமார், சுஜீப்குமார்(ஆசிரியர், நயினாதீவு மகா வித்தியாலயம்), கிசோப்குமார், தர்சிகா, அபிரா, அனுஷா, பிரியங்கா, பிரிந்தா, அனோஜன், லக்ஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும், விகாசினி, நிரு, யாதவி, யதுஷிகா, ஜோதா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.01.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக் குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

36/20, பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
T.P-021 3002519, 0778893616

தகவல்:
குடும்பத்தினர்.

ads@uthayan.com 0215671111

## கண்ணீர் அஞ்சலி




எமது ஸ்தாபனத்தின் ஊழியர்
**சிவஞானம் மகேந்திரநாத்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர், மற்றும் ஊழியர்கள்
ரதிவோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ்
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### சுப்பர் முத்துக்குமாரசாமி (CID)



கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பர் முத்துக்கு மாரசாமி (CID) நேற்று (04.01.2013) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பர் - சேதுப்பிள்ளை தம்பதியரின் ஏக புதல்வனும், காலஞ்சென்ற நன்னித்தம்பி - நாகம்மா தம்பதியரின் மருமகனும், தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், பரமேஸ்வரி, செல்லம்மா, காலஞ்சென்ற வர்களான மகேஸ்வரி, கதிர்காமநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சுவேந்திரன், தபேந்திரன், வசந்தா, செபசீலன், வனிதா, அரசேந்திரம் ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசகுல சிங்கம், புஸ்பா, புவனா, சுமதி, உதயகுமார், துர்க்கா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.01.2013) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊரியான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி மேற்கு,
கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்.

### ஞானப்பிரகாசம் மாசிலாமணி



குருநகர் மத்தியகிழக்கு வீதி, இல, 26/3 இல் வசிக்கும் ஞானப்பிரகாசம் மாசிலா மணிநேற்று(04.01.2013)வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானப் பிரகாசத்தின் (மேசன் ஐயாத்துரை)அன்பு மனைவியும், முத்துக்கிளி, காலஞ்சென்ற ஜோன்சன், அன்ரன்(முன்னாள் ஊழியர், உதயன் பத்திரிகை), கிறேஷியன்(டோகா), ஜசிந்தா, வின்சன் (ஜேர்மன்), சகாயராணி ஆகியோரின் தாயும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(05.01.2013) சனிக்கிழமை பி.ப.2.30 மணிக்கு கொஞ்சேஞ்சிமாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலியின் பின் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

26/3, மத்திய கிழக்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

தகவல்: பிள்ளைகள்.
அருட் தந்தை மங்ரிலன்,
(செபமாலைதாசர் சபை-
பேரப்பிள்ளை.)

### திருமதி நாகராசா சரஸ்வதி



கோண்டாவில் தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகராசா சரஸ்வதி கடந்த (03.01.2013) வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆசாரி வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.021 222 3626

தகவல்:ஆ.சி.நாகராசா
ஆச்சாரி.

### திருமதி மகேஸ்வரி தர்மராஜா

சாவகச்சேரி தேவாலய வீதியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட மகேஸ்வரி தர்மராஜா நேற்று (04.01.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிரதம தபாலதிபர் நல்லதம்பி தர்மராஜாவின் அன்பு மனைவியும், திருமதி சுதர்மாவின் (ஆசிரியை மிருசுவில் றோ.த.க. பாடசாலை) அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சிவகுரு பாக்கியரத்தினம், குணமனி, சதாசிவம், V.N.நவரட்ணம் (முன்னாள் சாவகச்சேரி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்) மற்றும் லீலாவதி -நல்லதம்பி (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.01.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தேவாலய வீதி, சாவகச்சேரி. யே.சுதர்மா (மகள்) 0774962764

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊரெழு றோயல் வெற்றிக் கிண்ணக் கிரிக்கெட்

# கொக்குவில் பிரம்படி சம்பியன்

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் நடத்திய கிரிக்கெட் தொடரில் கொக்குவில் பிரம்படி விளையாட்டுக்கழகம் சம்பியனானது.

யாழ். மாவட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையில்ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் விலகல் முறையிலான 10 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்தாட்ட துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியை நடத்தியது.

இந்தத் தொடரில்லீக் போட்டிகளில் அபாரமாக ஆடிய கொக்குவில் பிரம்படி விளையாட்டுக்கழகமும், சங்கானைஐக்கிய விளையாட்டுக்கழகமும் இறுதிப் போட்டியில்விளையாடத் தகுதி பெற்றன.கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் குறித்த இரு அணிகளும் ஒன்றை ஒன்று எதிர்ததாடின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பிரம்படி விளையாட்டுக்கழகம் அதிரடியாக ஆடி எதிரணியைத் திக்குமுக்காடச் செய்தது. ஒரு பந்துப் பரிமாற்றத்துக்கு 7.7 ஓட்டச் சராசரியைப் பேணினர் பிரம்படி வீரர்கள். தமது அணியின் இலக்குகள் சீரான இடைவெளியில் வீழ்ந்த போதும் பிரம்படி அணி வீரர்கள், ஓட்டக் குவிப்பை நிறுத்த வில்லை. இதனால் அந்த அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 77 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு78 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நேக்கி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சங்கானை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை ஆரம்பத்தில் இருந்தே அச்சுறுத்தத் தொடங்கினர் பிரம்படி பந்து வீச்சாளர்கள் . அடுத்தடுத்து இலக்குகளை இழந்ததால் வெற்றிபெறத் தேவையான ஓட்டச் சராசரியை சங்கானை ஐக்கிய அணி வீரர்களால் தக்கவைத்துக் கொள்ள முடியவில்லை. பந்து வீச்சில் மாத்திரமன்றி களத்தடுப்பிலும் கொக்குவில் பிரம்படி வீரர்கள் பிரகாசித்தனர். இதனால் ஒற்றையிலக்க ஓட்டத்தைப் பெறுவதற்குக் கூட சங்கானை ஐக்கியம் வீரர்கள் திணறினர்.

இறுதியில் பிரம்படி வீரர்களின் பந்து வீச்சுக்கு அடிபணிந்த சங்கானை ஐக்கியம் அணி 9 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 58 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதனால் கொக்குவில் பிரம்படி விளையாட்டுக் கழகம் 19 ஓட்டங்களால் வெற்றிபெற்றுச் சம்பியனாகியது. (ந-23)



சங்கானை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை அச்சுறுத்தத் தொடங்கினர் பிரம்படி பந்து வீச்சாளர்கள் .

## கரப்பந்து சுற்றுத் தொடர் விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம்,ஜன.5

'தேசத்தின் மகுடம்' கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் மாவட்ட மட்டப் போட்டிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

எனவே மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக்கழகங்கள் விண்ணப்பப்படிவங்களை யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவர், செயலாளர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். பின்னர் குறித்த விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்தி அவர்களிடமே ஒப்படைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

(ந-23)

## யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரியை நியமிக்குக

யாழ்ப்பாணம்,ஜன.5

யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரியாக கடமையாற்றிவந்த திருமதி. ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம் கடந்த நவம்பர் மாதம் 26 ஆம் திகதியுடன் ஓய்வுபெற்றுள்ள போதும், அந்த வெற்றிடத்துக்கு இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை.

இவ்வாறு மாவட்ட விளையாட்டுத்துறைஅதிகாரி பதவி வெற்றிடமாகவே நீடிப்பதால், விளையாட்டு வீரர்களும், கழகங்களும் பல் வேறு சிரமங்களை எதிர் கொள்வதாக விளையாட்டுத் துறை ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

2013 ஆம் ஆண்டு பிறந்துள்ள நிலையில் யாழ். மாவட்ட விளையாட்டுத் துறை பின்னடைவைச் சந்திப்பதைத் தவிர்ப்பதற்காக உடனடியாக புதிய மாவட்ட விளையாட்டு அதிகாரி நியமிக்க வேண்டும் என விளையாட்டு ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ந-23)

## தாச்சிச் சங்க பொதுக் கூட்டம்

கைதடி, ஜன.5

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இணுவில் அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்துக்கு முன்பாகவுள்ள மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத் தலைவர் செ.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் தாச்சி விளையாட்டை ஊக்குவிப்பதற்கான விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்படவுள்ளது. எனவே ஒவ்வொரு கழகமும் தலா 3 பிரதிநிதிகளை இந்த நிகழ்வுக்கு அனுப்பி வைக்குமாறு சங்கச் செயலாளர் கே.ஜனதாஸ் அறிவித்துள்ளார்.

இதன் போது 2013 ஆம் ஆண்டுக்கான போட்டி அட்டவணையும் தயாரிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ந-16-288)


## தீவக வலய உதைபந்து

யாழ்ப்பாணம், ஜன.5

தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 14 வயது , 16 வயது பிரிவு அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி தொடர் எதிர்வரும் 8 ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை நயினாதீவு மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.



(ந-23)



அண்மையில் கொழும்பில் நடைபெற்ற விசேட தேவையுடையோருக்கான 13 ஆவது தேசிய பரா பூப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இரட்டையர் பிரிவில் [illegible] மாவட்டத்தைச் சேர்ந்த சுபோதன், கபிலன் ஆகிய வீரர்கள் இணைந்து ஆடி மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டனர். (ந-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ஆட்டங்கள்

வவுனியா,ஜன.05

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் சாந்தன், யூட் கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்குமாக நடத்தப்படும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் வைரவப் புளியங்குளத்திலுள்ள யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம் பெற்று வருகின்றது.

இதில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

மாலை 6 மணி

யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் எதிர் உதயதாரகை விளையாட்டுக்கழகம்

★ ★ ★

சரசாலை இலந்தைத்திடல் இளைஞர் கழகத்தினால் தென்மராட்சி ரீதியில்7 பேர் பங்கு பற்றும் 5 பந்துப்பரிமாற்றங்களை கொண்ட மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டித் தொடர் ஒன்று நடத்தப்பட்டு வருகின்றது இதில் 'சுப்பர் 8' அணிகள் பங்கு பற்றும் லீக் முறையிலான போட்டிகள் சரசாலை இலந்தைத்திடல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று சனிக்கிழமை இடம் பெறவுள்ளன. இந்த ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

'பி' பிரிவு

மு.ப. 9 மணி

★ கொடிகாமம் மின்னொளி விளையாட்டுக் கழகம் எதிர் சாவகச்சேரி பவர் விளையாட்டு கழகம்.

மு.ப.9.30 மணி

★ மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் எதிர் நுணாவில் அம்பாள் விளையாட்டுக் கழகம்.

மு.ப.10. மணி

★ கொடிகாமம் மின்னொளி விளையாட்டு கழகம் எதிர் மட்டுவில் வளர்மதி விளையாட்டு கழகம்.

மு.ப.10.30 மணி

★ சாவகச்சேரி பவர் விளையாட்டுக் கழகம் எதிர் நுணாவில் அம்பாள் விளையாட்டுக் கழகம்.

மு.ப.11. மணி

★ சாவகச்சேரி பவர் விளையாட்டுக் கழகம் எதிர் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம்.

மு.ப.11.30 மணி

★ கொடிகாமம் மின்னொளி விளையாட்டுக் கழகம் எதிர் நுணாவில் அம்பாள் விளையாட்டுக் கழகம்.

'ஏ' பிரிவு

நண்பகல்12.30 மணி

★ மீசாலை சீமா விளையாட்டுக் கழகம் எதிர் மட்டுவில் கண்ணகை விளையாட்டுக் கழகம்.

மதியம் 1.மணி

★ சரசாலை இராணுவ அணி எதிர் சாவகச்சேரி சிவன் விளையாட்டுக் கழகம்.

பி.ப.1.30 மணி

★ மட்டுவில் கண்ணகை விளையாட்டுகழகம் எதிர் சாவகச்சேரி சிவன் விளையாட்டுக் கழகம்.

பி.ப. 2. மணி

★ சரசாலை இராணுவ அணி எதிர் மீசாலை சீமா விளையாட்டுக் கழகம்.

பி.ப. 2.30 மணி

★ சாவகச்சேரி சிவன் விளையாட்டுக் கழகம் எதிர் மீசாலை சீமா விளையாட்டுக் கழகம்.

பி.ப. 3. மணி

★ மட்டுவில் கண்ணகை விளையாட்டுகழகம் எதிர் சரசாலை இராணுவ அணி.

★ ★ ★

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் வருடாந்தம் நடத்தும் மின்னொளியிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம் பெறவுள்ள ஆட்டத்தில் பங்கு பெறவுள்ள அணிகளின் விபரங்கள் வருமாறு:-

மாலை 6.மணி

கோப்பாய் ஐக்கியம் 'ஏ' அணி எதிர் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம்.

இரவு 7. மணி

கோப்பாய் ஐக்கியம் 'பி' அணி எதிர் ஓல்ட்கோல்ட் விளையாட்டுக் கழகம். (ந-23)

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

56 கழகங்கள் பங்குபற்றவுள்ள இந்த தொடரில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் -

பி.ப.3.30 மணி

இமையாணன் மத்தி விளையாட்டுக்கழக'ஏ' அணி எதிர் தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகம்

பி.ப.4.30 மணி

வல்வை விளையாட்டுக்கழக'ஏ' அணி எதிர் கருணாகரன் விளையாட்டுக்கழகம் (ந-23)

## தீவக வலய உடற்கல்வி ஆசிரியர்களுக்கு கூட்டம்

தீவக கல்வி வலயத்துக்குட்பட்ட உடற்கல்வி ஆசிரியர்களுக்கான திட்டமிடல் கூட்டமும், போட்டி அட்டவணை தயாரிக்கும் நிகழ்வும் எதிர்வரும் 11ஆம் திகதி காலை 8.30 மணிக்கு தீவக கல்வி வலயக் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

எனவே இந்த நிகழ்வுக்கு உடற்கல்வி ஆசிரியர்கள் அனைவரும் நேரகாலத்துடன் சமூகம் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ந-23)

## போராடும் இலங்கையும் ஆதிக்கம் செலுத்தும் ஆஸியும்


ஆஸ்திரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாம் நாள் முடிவில் இலங்கை அணி போராட்டத்தை வெளிப்படுத்தியுள்ள போதிலும் ஆஸ்திரேலிய அணி முன்னிலையில் காணப்படுகிறது.


நேற்றைய தினம் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி ஆட்டநேர நிறைவில் 6 இலக்குகளை இழந்து 342 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. முதலாவது இலக்கை 36 ஓட்டங்களுக்கே இழந்த ஆஸ்திரேலிய அணி, அதன் பின்னர் இரண்டாவது இலக்குக்காக 130 ஓட்டங்களைப் பகிர்ந்தது. அதன் பின்னர் இலக்குகள் இழக்கப்பட்டு ஒரு கட்டத்தில் 5 இலக்குகளை இழந்து 271 ஓட்டங்களுடன் காணப்பட்ட போதிலும் பின்வரிசை வீரர்கள் சிறப்பாக ஆடி வருகின்றனர்.

துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சார்பாக பிலிப் ஹியூஸ் 85 ஓட்டங்களையும், டேவிட் வோணர் 84 பந்துகளில் 85 ஓட்டங்களையும், மைக்கல் கிளார்க் 50 ஓட்டங்களையும், மத்தியூ வேட் ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக ரங்கன ஹேரத் 2 இலக்குகளையும், திலகரட்ண டில்ஷான், நுவான் பிரதீப் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆஸ்திரேலிய அணியின் 2 இலக்குகள் 'ரன் அவுட்' முறையில் பெறப்பட்டன.

சிட்னியில் இடம்பெறும் இந்த ஆட்டத்தில் நேற்றுமுன்தினம் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 294 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)




## போராடுகிறது நியூஸிலாந்து

தென்னாபிரிக்காவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும், தென்னாபிரிக்க அணிக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாம் நாள் முடிவில் நியூசிலாந்து அணி போராட்டத்தை வெளிப்படுத்தியுள்ளது. ஆனால் தென்னாபிரிக்க அணி ஆட்டத்தில் ஆதிக்கத்துடன் இன்னமும் காணப்படுகிறது.

3 இலக்குகளை இழந்து 252 ஓட்டங்களுடன் காணப்பட்ட தென்னாபிரிக்க அணி நேற்று முன்தினம் இரண்டாம் நாளில் 8 இலக்குகளை இழந்து 347 ஓட்டங்களைப் பெற்று தனது இன்னிங்ஸை இடைநிறுத்தியது. இது நியூசிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் பெற்ற 45 ஓட்டங்களை விட 302 ஓட்டங்கள் அதிகமாகும்.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக அல்விரோ பீற்றர்சன் 106 ஓட்டங்களையும், ஏபி.டி.வில்லியர்ஸ் 67 ஓட்டங்களையும், ஹசிம் அம்லா 66 ஓட்டங்களையும், ஜக் கலிஸ் 60 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக கிறிஸ் மார்ட்டின், ட்ரெண்ட் போல்ட்ற் ஆகியோர் தலா 3 இல்க்குகளை கைப்பற்றினார்.

302 ஓட்டங்கள் பின்னிலையில் காணப்பட்ட நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த நியூசிலாந்து அணி நேற்று முன்தினம் ஆட்டநேர முடிவில் 4 இலக்குகளை இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இதன் மூலம் 6 இலக்குகள் கைவசமுள்ள நிலையில் நியூசிலாந்து அணி இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க 133 ஓட்டங்களைப் பெற வேண்டியுள்ளது. துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணி சார்பாக டீன் பிரௌண்லி ஆட்டமிழக்காமல் 69 ஓட்டங்களையும், பிரன்டன் மக்கலம் 51 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஜக் கலிஸ் 2 இலக்குகளைக் கைப்பற்றினார். (5)

## நாங்கள் பலமானவர்கள்

பந்துவீச்சில் இந்திய அணியைவிட பாகிஸ்தான் அணிக்கு அதிக பலமுள்ளதாக பாகிஸ்தான் அணியின் தலைவர் மிஸ்பா உல் ஹக் தெரிவித்துள்ளார். அத்தோடு இந்திய ஆடுகளங்களில் பாகிஸ்தான் பந்துவீச்சாளர்கள் சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 3 போட்டி கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் இரண்டாவது ஆட்டத்திலும் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றுத் தொடரைக் கைப்பற்றியுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பந்துவீச்சாளர்கள் மிகச் சிறப்பான பணியைச் செய்து வருவதாகத் தெரிவித்த மிஸ்பா உல் ஹக், குறிப்பாக ஜுனைட் கான் மிகச்சிறப்பாகப் பந்துவீசி



வருவதாகத் தெரிவித்தார். ஜுனைட் கான் பந்தினை இருபக்கமும் ஸ்விங் செய்து வருவதாகத் தெரிவித்த மிஸ்பா, துடுப்பாட்ட வீரர்களுக்கு அவர் கடும் சவாலை வழங்கிவருவதாகத் தெரிவித்தார்.

மொஹமட் இர்பான் உயரமானவர் என்பதோடு, உமர் குலும் மிகச்சிறப்பாகப் பந்துவீசியதாகத் தெரிவித்த மிஸ்பா உல் ஹக், ஏனைய இருவரான சயீட் அஜ்மல், மொஹமட் ஹபீஸ் ஆகியோர் எப்போதுமே சிறப்பாகப் பந்துவீசி வருபவர்கள் எனத் தெரிவித்தார்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி பலமாகக் காணப்படுவதாகத் தெரிவித்த அவர், இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் பல நாள்களாகத் தடுமாறி வருவதாகவும், ஆனால் பாகிஸ்தான் பந்துவீச்சாளர்கள் ஆடுகளத்தில் மிகச்சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றதாகவும் தெரிவித்தார்.

இந்திய ஆடுகளங்கள் பொதுவாக தட்டையாகக் காணப்படுவதாகத் தெரிவித்த மிஸ்பா உல் ஹக், ஆனால் முதலிரண்டு போட்டியும் இடம்பெற்ற சென்னை, கொல்கத்தா மைதானங்கள் துடுப்பாட்ட வீரர்களுக்கு சவாலை வழங்கிய ஆடுகளங்களாகக் காணப்பட்டதாகத் தெரிவித்தார். (5)

## துடுப்பாட்ட வீரர்களே காரணம்

இந்திய அணியின் அண்மைக்கால தோல்விகளுக்கு இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர்கள் பொறுப்பேற்க வேண்டுமென இந்திய அணியின் முன்னாள் தலைவரும், நேர்முக வர்ணனையாளருமான சுனில் கவாஸ்கர் தெரிவித்துள்ளார். பாகிஸ்தானுக்கெதிரான இரண்டாவது ஒருநாள் சர்வதேச ஆட்டத்திலும் இந்திய அணி தோல்வியடைந்ததையடுத்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்திய அணி அண்மைக்காலத்தில் தொடர்ச்சியான தோல்விகளைச் சந்தித்து வருவதோடு, உள்ளூரில் இடம்பெற்ற போட்டியில் இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடரில் தோல்வியடைந்ததோடு, 'ரி-20' தொடரைச் சமப்படுத்தியிருந்தது. அதன் பின்னர் பாகிஸ்தானுடனான 'ரி-20' தொடரைச் சமப்படுத்திய போதிலும், 3 போட்டி கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை 2 போட்டியின் முடிவிலேயே தோற்றுள்ளது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த சுனில் கவாஸ்கர், இந்தியாவில் துடுப்பாட்ட வீரர்களே அதிக பிரபலமாகக் காணப்படுகிறார்கள் எனவும், அவர்களே கடந்த காலங்களில் அதிகளவில் பிரகாசித்து சிறந்த பெயரைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர் எனவும், எனவே துடுப்பாட்ட வீரர்களே சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்தியிருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

துடுப்பாட்ட வீரர்கள் நீண்டகாலமாக திறனில்லாது காணப்படுகின்றனர் எனத் தெரிவித்த சுனில் கவாஸ்கர், இந்த நிலை உலகக்கிண்ணத்தின் பின்னர் தொடர்ந்து காணப்படுவதாகத் தெரிவித்தார்.

உலகக்கிண்ணத்தின் பின்னர் துடுப்பாட்ட வீரர்கள் சர்வதேசப் போட்டி குறித்து போதியளவு கவனஞ் செலுத்தியிருக்கவில்லை எனத் தெரிவித்த அவர், சில வீரர்கள் தங்களது சத்திரசிகிச்சைகளை ஐ.பி.எல் போட்டிக்காகப் பிற்போட்டுவிட்டு, ஐ.பி.எல். முடிவடைந்ததும் சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டதாகவும், இதன் மூலம் சர்வதேசப் போட்டிகளை அவர்கள் தவறவிட்டிருந்தனர் எனவும் குற்றஞ்சாட்டினார். (5)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## NIRU KONDAVIL 2015

கலை, வர்த்தக பிரிவு

ஆரம்பம்: 06.01.2013 ஞாயிறு 7 மணி

## A/L 2015 கணக்கீடு A/L 2015

கணக்கீட்டின் சிறந்த பெறுபேற்றுக்கான அதி சிறந்த தெரிவு

புதிய பொருளியல் கல்லூரி மணிக்கூட்டு வீதி 05.01.2013 சனி 10மணி

NEC ஆனைப்பந்தி 05.01.2013 சனி 9மணி

திரு.பாலகஜன் B.Com, H.N.Dip.in.Acc

BPI குருநகர் 07.01.2013 திங்கள் 3.30மணி

COC சுந்தோடைவீதி சுன்னாகம் 05.01.2013 சனி மாலை 4மணி

தனிப்பாட அனுமதி உண்டு

## Sky Computers (Pvt) Ltd

புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம

பிரிவு-1 திங்கள் 9:00 am

பிரிவு-2 செவ் 9:00 am

Ms. Office, DTP, Hardware ,Graphic Designing, Web Designing, Internet & E-mail , Computer Type Setting, Kids Program. (சிறுவர்களுக்கானது)

(பிரத்தியேகமாக/ குழுக்களாக விரும்பிய நேரத்தில் கற்கும் வசதி)

TP:-021 - 222 - 1417

162, Main Street, Jaffna.

## மாபிள் பதித்தல்

10 வருடங்கள் மத்திய கிழக்கு நாட்டில் வேலை செய்தவர்களால் டோகா அரசாங்கத்தினால் பாராட்டுப் பெற்றவர்களால் உங்கள் விருப்பத்திற்கு ஏற்ற வகையில் குறுகிய காலத்தில் மாபிள் வேலை செய்து தரப்படும்.

தொடர்பு: பாபு 0773824871

## THE SCIENCE CORNER

,Clock Tower Lane - Jaffna.

சிங்களம்

புதிய பிரிவு 05.01.2013இன்று முதல் சனி, ஞாயிறு 3.00 - 4.00pm

By: சாம்சன்

## THE SCIENCE CORNER

Clock Tower Lane - Jaffna.

2014 A/L PHYSICS SOUND

பிரிவு:I SAT, SUN 11.00 - 12.30

பிரிவு:II TUE, THU 6.00 - 07.30am

By: - செல்வன் B.Sc.

## FRENCH LANGUAGE CENTRE

சர்வதேச தரத்திலான French வகுப்புக்களை வழங்கும் ஒரே ஒரு நிறுவனம்

FRENCH CLASSES - பிரஞ்சு வகுப்புக்கள்

France, Canada,Belgium செல்வோர் University Students மற்றும் France போக, Franch கற்க ஆர்வம் உள்ள எவரும் கற்றுக் கொள்ளலாம்.

International Certificate இனை குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ளலாம்

For Better French: 0779789456

ஆரம்பம்: 12.01.2013 சனி 10.30am
No.23, Palaly Road, Jaffna.
(அப்பலோ வைத்தியசாலை முன்பாக)
ஆரியகுளம்.

16.01.2013 புதன் 03.30pm
181,1st Floor, Jaffna Road, Neilliady.
(சோதி வீதி, முன்பாக உள்ள மாடியில்)

இணைவு: BCLL
English (IELTS, A1, B1, Spoken, O/L Exam எடுத்தவர்களும்), German (Deutsch), சிங்கள வகுப்புக்களும் ஆரம்பமாக உள்ளன.

## கிளி/ஆனந்தபுரத்தில் ஆங்கில மொழிக்கல்வியின் முன்னோடி

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான

**Spoken English**

ஆரம்பம் ஜனவரி 07

U.K Qualified ஆங்கில ஆசிரியர் Mr.K.Kethees அவர்களின் கற்பித்தலில்

**English Medium Pre-school**

ஆங்கில மொழிமூல முன்பள்ளி

அரச பாடசாலையில் கற்கக்கூடியவாறு வாரத்தில் ஒரு நாள் தமிழ் கற்பிக்கப்படும்.

Hello: 077 074 3131

E L T C — ENGLISH LANGUAGE TEACHING COLLEGE (PVT)LTD

## விற்பனைக்கு

ND - xxxx இலக்கமுடைய யாழ் - கொழும்பு றூட் போமிற்றுடன் வழி இலக்கம் 87 Semi Luxury

தொடர்பு: 0777238615

(27698)(3)

## விசேட கருத்தரங்கு

ஜனவரி 27 ஆம் திகதி நடைபெறவுள்ள

முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை

வழிகாட்டல் வகுப்பு ஜனவரி - 06, 12, 19 ஆம் திகதிகளில் காலை 9.00 - 5.00 மணிவரை

விரிவுரையாளர் P. உமாசங்கர் கமல்தாசன்

நாவலர் கல்வி நிலையம் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 0774696695

## Maths Personal Class

6 - 11 வரையான வகுப்புகளுக்கு கணிதபாடம் அடிப்படையில் இருந்து வீட்டில் வந்து கற்பிக்கப்படும்.

(விடுதி மாணவர்களுக்கும் கற்பிக்கப்படும்)

தொடர்பு: 0750474001

## THE SCIENCE CORNER

Clock Tower Lane - Jaffna.

BIOLOGY 2015

பிரிவு:II ஆரம்பம் 05.01.2013 சனி, ஞாயிறு 3.00 - 4.30pm

சு. பொன்திவாகரன்

## உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111

## வெளிவாரிப் பரீட்சை

யாழ்.பல்கலைக் கழகம் பொருளியல் GAQ,B.com pass papers with Answers உடன் G.G. சந்திரன். T.P 0778780814

## றோயல் அக்கடமி

பிரதான வீதி சங்கானை [இலங்கை வங்கி அருகாமை]

A/L 2015

ஆரம்பம்: ஜனவரி 05 மாலை 3,00 மணி

வர்த்தகப்பிரிவு

- பொருளியல் : வரதராஜன்
- கணக்கீடு : பகீரதன்
- வணிகக்கல்வி : முரளி

கலைப் பிரிவு

- தமிழ் பத்மநாதன்
- புவியியல் பாபு
- இந்துநாகரிகம் ஸ்ரீஸ்
- நாட.அரங்கியலும் றமேஸ்
- அளவையியல் E.S.பவன்
- அரசியல் சுகாஷ்
- வரலாறு R.S.சந்திரன்
- ஆங்கிலம் மவுலி

## சோலர், இன் வேட்டர்

பொங்கல் திருநாளை முன்னிட்டு அதிரடி விலையில் சோலர்கள்,

DC - AC இன்வேட்டர்கள் 12V / DC மின்குமிழ்கள்

1 வாற் சோலர் ரூபா 350/= - 290/=

24V / 1000 W இன்வேட்டர் ரூபா 22500/= - 19700/=

மேலும் 300 வாற்றில் இருந்து 2500 வாற் வரையான இன்வேட்டர்கள், வீட்டு மின்சாதனங்கள் யாவும் தொழிற்படக்கூடியவை.

30 வாற்றில் இருந்து 240 வாற் வரையான சோலர்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்ரீராம் எலக்றோனிக்ஸ்

105.ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். T.P:- 0776048646

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

2013 புதுவருடத்தை முன்னிட்டு

விசேட கட்டணக் கழிவில் சர்வதேசத் தரங் கொண்ட கற்கை நெறிகள்

### BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

Duration : 2 Months

### Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Months)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.

வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

### Diploma In English (2 Months)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி, ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

### A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

புதிய வகுப்புக்கள்: Batch I : 07-01-2013, Batch II : 12-01-2013, Batch III : 14-01-2013, Batch IV : 19-01-2013

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya.

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

## ஞானோதயா அக்கடமி

-சாவகச்சேரி - கொடிகாமம் -

[இரு இடங்களிலும்]

A/L - 2015

கலை, வர்த்தக பிரிவுகள் ஆரம்பம்- Jan 06

அனுபவமும் திறமையும் வாய்ந்த யாழ்,தென்மராட்சி, வடமராட்சி ஆசிரியர்களின் ஒருகிணைந்த சேவையில்.......

கலைப்பிரிவு

| | |
|---|---|
| தமிழ் | - திரு.முகுந்தன் |
| புவியியல் | - திரு.செந்தூரன் |
| வரலாறு | - திரு.விக்கி |
| அரசியல் விஞ்ஞானம் | - திரு.சந்துரு |
| இந்து நாகரிகம் | - திரு.ஜோதீஸ்வரன், திரு.செல்வா |
| நாடகமும் அரங்கியலும் | - திரு. றசித்குமார் |
| விவசாய விஞ்ஞானம் | - திரு.சசிக்குமார் |

வர்த்தகப் பிரிவு

| | |
|---|---|
| வணிகக்கல்வி | - திரு.பசில், திரு.பிரவேஷ்கண்ணா |
| பொருளியல் | - திரு.சுதாகரன் |
| கணக்கீடு | - திரு.திவம் |
| பொது ஆங்கிலம் | - திரு.நிஷாந்தன் |

ஆரம்பம்:- 06.01.2013 [ஞாயிறு] at 9.00AM

குறிப்பு:- சென்ற வருடம் 50 இற்கு மேற்பட்ட மாணவர்கள் எமது நிறுவனத்தில் இருந்து பல்கலைக்கழக அனுமதியை பெற்றுள்ளனர் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

## E.U.T Modern Furniture



இடமாற்றம்

இல.270, கே.கே.எஸ். வீதியில் இயங்கிவந்த எமது தளபாட காட்சியறை தற்போது இல.19, விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம் [யாழ். போதனா வைத்தியசாலைக்கு பின் புறம்] எனும் முகவரிக்கு இடமாற்றியுள்ளோம் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

E.U.T இல.19, விக்ரோறியா வீதி யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புறம்) T.P:0217200850

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஒரு தவறைச் செய்யும்
மனிதன் அதனைத்திருத்திக்
கொள்ளாவிட்டால்
அதுவும் ஒரு தவறே
-கன்பூசியஸ்

வார வசந்தம் 01

உதயன் 05 ஜனவரி 2013 சனிக்கிழமை பக்கங்கள்: எட்டு

> “ எமது விவசாயிகளும் பூச்சிகளை ஒழிக்க வேண்டுமென்ற ஒரே குறிக்கோளுடன் செயற்படுகின்றனர். நிர்ணயிக்கப்பட்ட அளவைவிடப் பல மடங்கு கிருமி நாசனிகளைப் பயன்படுத்துகின்றனர். சக மனிதர்களின் உயிர்கள் தொடர்பாக அவர்கள் எள்ளளவும் கவலைப்படுவதில்லை.



# உணவே எதிரியாக....



■ ராஜராஜன்

பசி வந்திடப் பத்தும் பறந்தோடி விடும் என்று கூறிச் சென்றுள்ளனர் எமது முன்னோர்கள். நாம் உண்ணும் உணவின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதற்காக அவ்வாறு அவர்கள் கூறியிருக்கலாம்.

ஆனால் இந்தப் பத்தும் எவை என்பது எம்மில் பலருக்குத் தெரியாது. மானம், குலம், கல்வி, வன்மை, தானம், தவம், முயற்சி, அறிவுடைமை, தாளாண்மை, காமம் என்பனவே அந்தப் பத்துமாகும். ஒரு மனிதனிடம் அமைந்திருக்க வேண்டிய முக்கிய பண்புகளும் இவையாகும்.

உணவின்றிப் பசியால் வாடும் ஒருவன் இவற்றுள் எதனையும் கருத்தில் கொள்ள மாட்டான்.

தனது பசியைப் போக்குவதற்கான உணவைத் தேடுவதே அவனது முக்கிய குறிக்கோளாக இருக்கும். இதனால் அந்த வேளையிலே இத்தகைய பத்துப் பண்புகளும் அவனைவிட்டு அகன்று விடும். இதனையே எமது முன்னோர்களின் கூற்று எமக்குப் புலப்படுத்துகின்றது. அத்துடன் உணவின் முக்கியத்துவமும் தெரிய வருகின்றது.

மனிதர்கள், மிருகங்கள் மட்டுமல்ல ஓரறிவு படைத்த மரங்கள் கூட உணவைச் சார்ந்தே உயிர் பிழைக்கின்றன.

ஆனால் அந்த உணவே இன்று எமக்கு எதிரியாக மாறி எம்மை அழிக்க முற்படுவதுதான் வேதனை அளிக்கின்றது.

எமக்கு முன்பு வாழ்ந்தவர்கள் நோய், நொடியற்று நிறைவான வாழ்வு வாழ்ந்தமைக்கு அவர்களின் உணவுப் பழக்க வழக்கங்களே காரணமாக அமைந்திருந்தன. அதிலும் உயிர் கொல்லும் இரசாயனங்களின் நிழல்கூட அணுகாத உணவு வகைகள் அன்று அவர்களுக்குக் கிடைத்ததால் நோயற்ற வாழ்வு வாழ்வதற்கு அவர்களால் முடிந்தது.

உடலுக்குத் தீங்கு விளைவிக்காத தானிய வகைகள், பனம்பொருள்களால் உருவாக்கப்பட்ட உணவு வகைகள் தோட்டங்களில் இயற்கையாகக் காணப்படும் கீரைகள், கடல் உணவுகள், அவ்வப்போது கிடைக்கும் இறைச்சி என்பன. அவர்களின் பசியைப் போக்கின.

உணவுகளை சமையல் செய்வதற்கு மண்ணால் உருவாக்கப்பட்ட பாத்திரங்களை அவர்கள் பயன்படுத்தினர். அகப்பைகள் கூட தேங்காய்ச் சிரட்டைகளைக் கொண்டு நேர்த்தியாக உருவாக்கப்பட்டன. எரிபொருளாக தேர்ந்தெடுக்கப்பட்ட மரங்களிலிருந்து பெறப்பட்ட விறகுகள் பயன்பட்டன.

ஆனால் இன்று நாகரிகத்தின் உச்சியில் இருப்பதாகக் கூறிக் கொள்ளும் நாம் எம்மை அறியாமலேயே எமக்குக் குழி தோண்டிக் கொண்டிருக்கின்றோம். நாம் உண்ணும் உணவே எமக்கு எதிரியாக மாறி எம்மை அழிக்கின்றது.

ஓரளவு வசதி படைத்தவர்கள் கூட வீடுகளில் கிடைக்கும் உணவுகளை விடுத்து வெளியில் உணவு அருந்துவதை வழக்கமாகக் கொண்டிருப்பதைக் காண முடிகின்றது.

அதிலும் இளைஞர்கள், நண்பர்கள் புடைசூழ உணவுக் கடைகளுக்குச் சென்று வாங்கி உண்ணும் உணவுகளே தமக்குச் சுவையையும் மன நிறைவையும் தருவதாக நினைக்கின்றனர். ஆனால், அவர்களின் உடலில் அமரப்போகும் நோய்களுக்கு அந்த உணவுக் கடைகளே பிள்ளையார் சுழி இடுகின்றன என்பதை அவர்கள் காலம் தாழ்த்தியே புரிந்து கொள்கின்றனர்.

இன்று எல்லா வகையான நோய்களும் வயது வேறுபாடு இன்றி மனிதர்களைப் பீடிக்கின்றன. சிறார்கள் கூட இதிலிருந்து தப்புவதில்லை.

இந்த நிலையில் மருத்துவர்கள் நோய்களின் பிரதான காரணியாக உணவுப் பழக்க வழக்கங்களே அமைந்துள்ளதாகக் குறிப்பிடுகின்றனர். இரசாயனங்களால் நஞ்சூட்டப்பட்ட உணவுகளே மனிதர்களைப் பெரிதும் பாதிக்கின்றது என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

ஒரு சிலவற்றைத் தவிர ஏனைய மரக்கறி வகைகள் நஞ்சு செறிந்த பூச்சிநாசனிகளால் நஞ்சூட்டப்படுகின்றன.

இன்று சிலர் கிருமிநாசனிகளின் தாக்கம் இருக்காது என்பதற்காகப் பூச்சிகளால் அரிக்கப்பட்ட கீரைகளைத் தேடி வாங்குவதையும் காண முடிகின்றது.

எமதுவிவசாயிகளும்பூச்சிகளை ஒழிக்க வேண்டுமென்ற ஒரே குறிக்கோளுடன் செயற்படுகின்றனர். நிர்ணயிக்கப்பட்ட அளவைவிடப் பல மடங்கு கிருமிநாசினிகளைப் பயன்படுத்துகின்றனர். சக மனிதர்களின் உயிர்கள் தொடர்பாக அவர்கள் எள்ளளவும் கவலைப்படுவதில்லை.

முதல்நாள் கரும்பச்சை நிறத்தில் தொங்கிக் [illegible] வாழைக்குலை [illegible] நாள் மஞ்சள் நிறத்தில் ஜொலித்து காண்பவர்களைச் சுண்டி இழுக்கின்றது. மாம்பழங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. யாழ்ப்பாணத்துக் கறுத்தக் கொழும்பான் என்ற பெயர் அடிபட்டுப் போய் வெகுநாள்களாகி விட்டன.

மீன்கள் கூட மனிதர்களுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய இரசாயன மருந்துகளின் உதவியுடன் கெடாமல் பாதுகாக்கப்படுவதாகவும் தெரிய வருகின்றது.

எமது நாட்டின் மலைப் பிரதேசங்களில்விளையும் தேயிலை உலகப் பெயர் பெற்றது. வெளி நாட்டவர்கள் இந்தத் தேயிலையில் இருந்து கிடைக்கும் தேநீரை விரும்பி அருந்துவர்.

ஆனால் அந்தக் கொடுப்பனவு கூட எமக்கில்லை. கழித்து ஒதுக்கப்பட்ட தேயிலைத்தூள், மரத்தூள் மற்றும் சாயமூட்டப்பட்ட தேயிலைத் தூள் ஆகியவற்றையே நாம் பயன்படுத்துகின்றோம். நோய்களையும் வாங்கிக் கொள்கின்றோம்.

மேலும் கலப்படம் செய்யப்பட்ட நிலையில் விற்பனையாகும். உணவுப் பொருள்கள் எமது உடலுக்குத் தீங்கு விளைவித்து எம்மை விரைவில் அழிக்கக் கூடியன.

இந்த நிலையில் சிலர் எதை உண்பது என்பதை அறியாது தலையைப் பிய்த்துக் கொள்வது தெரிகின்றது.

இதைப் பார்க்கும்போது விரதங்கள் நினைவுக்கு வருகின்றன. உணவை விடுத்தோ அல்லது சுருக்கியோ விரதங்களை அனுஷ்டிக்கலாமெனக் கூறப்படுகின்றது. எமது உடலில் படிந்துள்ள தேவையற்ற கொழுப்புகளைக் கரைப்பதற்கும், சீரான உறுப்புக்களுக்கு ஓய்வு கொடுப்பதற்கும் விரதங்கள் உதவுகின்றன.

ஆனால் இன்று உணவுகளின் கோலத்தைப் பார்க்கும்போது உண்ணாமல் விரதம் இருப்பதே மேல் என்ற எண்ணமும் சிலரிடம் எழலாம்.

ஆனால், சாத்தியமில்லாத ஒன்றைச் சிந்திப்பதில் பயனில்லை.

எனவே, ஆட்சியில் இருப்போர் மக்களுக்குத் தீங்கு விளைவிக்காத உணவுகள் அவர்களைச் சென்று அடைவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

செயற்கை இரசாயனங்கள், கிருமிநாசினிகள் என்பனவற்றின் பாவனை முற்றாகத் தடை செய்யப்பட வேண்டும்.

மக்களும் தமது உடலுக்கு ஏற்றால் போன்று உணவுகளைத் தெரிவு செய்வதோடு அளவோடு உண்பதற்கும் தம்மைத் தயார்ப்படுத்த வேண்டும். இல்லையேல் நாம் உண்ணும் உணவே எமக்கு எதிரியாக மாறி எம்மை அழிப்பதை எவராலும் தடுக்க முடியாது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் தனிக்குரலை உலகுக்கு வெளிக்காட்டியவர்



■ டி.ராஜா

**குமார் பொன்னம்பலத்தின் 13 ஆம் ஆண்டு நினைவு தினம் இன்றாகும்**

இலங்கைத் தமிழர்களின் முதுபெரும் கட்சியான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் பொதுச் செயலாளராக இருந்து, பெரும்பாலான தமிழர்களின் மன உணர்வுகளை பகிரங்கமாக வெளிப்படுத்தி வந்த மாமனிதர் குமார் பொன்னம்பலம், பிற்போக்குச் சக்திகளால் பட்டப் பகலில் படுபாதகமாக கொல்லப்பட்டமை கவலைக்குரியது; கண்டனத்துக்குரியது; மன்னிக்க முடியாதது.

1802 இல் பிரிட்டனின் முடிக்குரிய காலனியாக விளங்கிய இலங்கையில், கோல்புறுக்கமிஷன் ஆலோசனைப்படி 1833 இல் 16 பேர் கொண்ட சட்டசபை நிறுவப்பட்டது. 1912 இல் தெரிவு முறையும் அறிமுகமாகி 21 பேர் (11 அதிகாரிகள், 1 நகர ஐரோப்பியர், 1 கிராம ஐரோப்பியர், 1 பறங்கியர், 1 படித்த இலங்கையர் சேர் பொன்.இராமநாதன், மீதி 6 பேர் அதிகாரி தரத்தில் அல்லாதோர் தெரிவானார்கள். 1924 இல் 2 இந்தியத் தமிழர், 3 முஸ்லிம்கள், 1 மேல்மாகாண-இலங்கைத் தமிழர், 2 பறங்கியர், 3 ஐரோப்பியர் என 11 பேர் இனரீதியாகவும், 23 பேர் பிரதேச ரீதியாகவும்-12 பேர் அதிகாரிகளாகவும் நியமனமானார்கள்.

இலங்கைத் தேசிய காங்கிரசின் முக்கிய நிர்வாகிகளாக சேர் பொன். அருணாசலம் போன்றோர் இலங்கையின் சுதந்திரத்துக்கு பாடுபட்டாலும், காலப் போக்கில்-1913 இல் சகலருக்கும் வாக்குரிமை சட்டம் வந்ததும், நாடாளுமன்ற பெரும்பான்மையால், படிப்படியாக அதிகாரம் கூடிய சிங்களத் தலைமைகள் தமிழரை ஒதுக்கியபோதுதான் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் பிறந்தது. போர்த்துக்கீச, ஒல்லாந்த, பிரித்தானிய ஆட்சியின் முன்பு, தமிழர் அரசுகள் வட-கிழக்கில் (ஏன் கண்டியிலும் கூட, கண்ணுச்சாமி எனும் விக்கிரம இராசசிங்கன் அரசு) இருந்ததால் தமிழருக்குத் தனித்து வாழ உரிமை இருந்தது. எனினும் 50:50 பிரதிநிதித்துவம் சிறுபான்மையினருக்குத் தந்தால் சிங்களவருடன் சேர்ந்து வாழ முடியும் எனும் தூரநோக்குள்ள, ஜி.ஜி.பொன்னம்பலத்தின் வாதம், 1944 இல் பிரிட்டனிலிருந்து வந்த சோல்பெரி பிரபுவின் காதில், செவிடன் காதில் ஊதிய சங்கொலியாய் மாறியது.

1948 இல் தந்தை செல்வா அ.இ.த.காங்கிரசில் இருந்து பிரிந்து தமிழரசுக் கட்சியைத் தொடங்கியதும், பின்பு 1976 இல் வட்டுக்கோட்டை மாநாட்டில் செல்வா, ஜி.ஜி, தொண்டமான் இணைந்து குரல் கொடுத்ததும், மூவரதும் அரசியல் பாதைகளும் நடைமுறையில் இணக்கம் இல்லாது போனமையும் தமிழர்களது துரதிஷ்டமே ஆகும். தந்தைக்குப் பின் தமிழர் மனங்களை வென்ற தனயன் குமார் பொன்னம்பலம் தமிழ்க் காங்கிரஸ் கட்சியை வழி நடத்தினார்.

12.8.1938 இல் யாழ்ப்பாணத்தின் மூளை எனக் கருதப்படும் வடமராட்சியில் காங்கேசு கணபதி பொன்னம்பலம் (ஜி.ஜி) அவர்கட்கும், அழகுமணிக்கும் பிறந்த இவர், யாழ். அரச அதிபராக இருந்த பிரபல தமிழர் முருகேசம்பிள்ளையின் மகளான யோகலட்சுமியை மணந்தார். உயர் கல்விகள் பயின்று பாரிஸ்டராகி தந்தையாரைப் போல் புகழ்பெற்ற அதிதிறமையான வழக்கறிஞராக பணிபுரிந்தார்.

தமிழ் நாட்டில் சர்க்காரியா கமிஷன் வழக்கிலும் கலைஞருக்கு ஆதரவாக தந்தையாருடன் ஆஜரானார். தமிழ், ஆங்கிலத்தில் மட்டுமன்றி சிங்களத்திலும் ஏழை எளிய மக்களுக்காகவும் நீதி மன்றுகளில் வழக்காடினார்.

1966 இல் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் இளைஞர் பிரிவுச் செயலாளரான இவர், தந்தையின் மறைவின் பின் கட்சியை வழி நடத்தினார். 1977 இல் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட இவர், 1982 இல் இலங்கை ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட்டு தமிழர் தனிக்குரலை உலகுக்கு வெளிக்காட்டினார்.

கொழும்பில் கைதான எண்ணுக் கணக்கற்ற தமிழர்களுக்காக கட்டணம் பெறாமலே வாதாடி அவர்களை விடுவித்தார்.

கொக்கட்டிச்சோலையில் பல தமிழர்கள் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான ஆணைக் குழு விசாரணையில் வழக்கில், வாதாட மட்டக்களப்பு செல்ல பல வழக்கறிஞர்கள் மறுத்த நிலையில் இவர் நாடாளுமன்ற உறுப்பினர் யோசெப் பரராஜசிங்கத்தின் வேண்டுதலை ஏற்று உடன் சென்று பாதிக்கப்பட்டவர்களாக வாதாடினார்.

ஐரோப்பா சென்று லண்டன், டென்மார்க், பிரான்ஸ் என பலநாடுகளில் இடம் பெற்ற தமிழீழ மாநாடுகளில் கலந்து கொண்ட இவர், புலம்பெயர் தமிழரின் அன்பைத் தனது அழகு தமிழாலும் அறிவாலும் கவர்ந்து கொண்டார்...

---

மருத்துவர்
நி.தர்ஷனோதயன்
வைத்திய அதிகாரி,
மாவட்ட ஆயுள்வேத
வைத்தியசாலை,
மன்னார்

# 7 ஆவது அறிவைப் பயன்படுத்துங்கள்


> “ மனதை ‘ரிலாக்ஸ்’ ஆக வைத்துக் கொள்ளுங்கள். உள்ளே அனுப்ப வேண்டியவற்றைத் தொடர்ந்து அனுப்பிக் கொண்டே இருங்கள். இறுதியில் நல்லதே நடக்கும். இதன் மூலம் 7 ஆவது அறிவை அடையலாம்.

பிரச்சினை... பிரச்சினை நாள் தோறும் பிரச்சினை. வீட்டில், தொழிலில், அலுவலகத்தில் எங்கும் பிரச்சினை. பிரச்சினைகளிலிருந்து வெளியே வர முடியாமல் அழிந்து போவோர் சிலர். போதையில் மூழ்கிப் போவோர் பலர். ஆக்க பூர்வமாக சிந்தித்து பிரச்சினைகளிலிருந்து மீண்டு வர ஆறறிவுக்கு மேல் ஏழாவது அறிவும் இருக்கிறது. அதைப் பயன்படுத்தினால் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பது மட்டுமல்ல, புதுமைகளையும் படைக்கலாம். நவீன கருவிகளை உருவாக்கலாம். வாழ்க்கையை முன்னே கொண்டு வரலாம்.

உலகில் ஜீவராசிகள், விலங்கினங்கள் ஐந்தறிவோடு வாழுகின்றன. பகுத்தறியும் சக்தியாம் ஆறறிவு பெற்ற மனிதன் உலகத்தை ஆளும் தகுதி பெற்றான். விலங்கினங்கள் நான்கு கால்களால் நடக்கும் போது, மனித இனம் மட்டும் இரண்டு கால்களால் நடக்க முனைந்து இரண்டு கால்களைக் கைகளாக பயன்படுத்தியது. கைகளால் எவ்வளவு காரியங்கள் செய்கின்றோம். இதுதான் மனிதனின் முதல் வெற்றி.

சிந்திக்கும் ஆற்றலை பெற்றிருக்கின்றோம். மூளையை இடது மூளை, வலது மூளை என்றும், மனதை உள் மனம், வெளிமனம் என்றும் இன்றைய கம்ப்யூட்டரோடு இணைத்துச் சொல்லலாம். மூளை என்பது ஹார்ட் வெயருக்கு சமம். மனம் சொவ்ற் வெயருக்கும், நாம் படிப்பது புரோகிராமிற்கும் சமம் என்று குறிப்பிடலாம். நமது பிரச்சினைக்கு நாமேதான் தீர்வு காண முடியும்.

நாள் முழுவதும் யோசிக்கிறோம், கவலைப்படுகிறோம் பின்பு அப்படியே



மறந்து விடுகின்றோம். வேறு ஏதாவது வேலையைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது மின்னல் போல் தீர்வு வரும். அது எப்படி கிடைக்கிறது. உள் மனம் சதா அசைபோட்டுக் கொண்டே இருக்கும். வெளி மனதுக்கு ஒரு விடயத்தை அழுத்தமாகக் கொடுத்து விட்டால் அது தானும் பெற்றுக்கொள்வதோடு ஒரு கொப்பியை உள் மனதுக்கும் அனுப்பி விடும். அங்கே ஒரு தனி ஆராய்ச்சியே நடந்து கொண்டிருக்கும். ஆழ்மனதில் விடயங்களைப் பதியம் போட்டு விட்டால் அது முளைத்து கிளைவிட்டு வளர்ந்து நல்ல பலனைத் தரும்.

இந்த ஆழ்மனதைப் பயன்படுத்தும் முறையைக் கற்றுக் கொள்ள வேண்டும். அதில் தேர்ச்சி அடைந்து விட்டால் 7 ஆவது அறிவைப் பெறுவதும், பயன்படுத்துவதும் எளிதாகிவிடும். ஒவ்வொருவரும் தங்களைப் பற்றிய விடயங்களை பாசிடிவ் ஆக ஆக்க பூர்வமாக மனதில் பதிய விட வேண்டும். நம்பிக்கையை நயமாக விதைக்க வேண்டும். விதைப்பது நம்பிக்கையாக இருந்தால், அறுவடையில் வெற்றி கிடைக்கும். கோயில்களில் செய்யப்படும் பிரார்த்தனைகள் நிறைவேறுவதும் இதன் அடிப்படையில்தான்.

மனதை 'ரிலாக்ஸ்' ஆக வைத்துக் கொள்ளுங்கள். உள்ளே அனுப்ப வேண்டியவற்றைத் தொடர்ந்து அனுப்பிக் கொண்டே இருங்கள். இறுதியில் நல்லதே நடக்கும். இதன் மூலம் 7 ஆவது அறிவை அடையலாம். பிரச்சினைகளைத் தீர்க்கலாம். நோயை மருந்தின்றி விரட்டலாம். உடலை களைப்பிலிருந்து மீட்கலாம். இழந்த சக்தியைப் பெறலாம்.

உங்கள் மனம் ஒரு தங்கச் சுரங்கம். அதை அடையாளம் கண்டு கொண்டால் வேறு எங்கேயும் அலையத் தேவையில்லை.

மூளையை நாம் இன்றும் முழுமையாக பயன்படுத்தவில்லை. அதை பயன்படுத்தும் போது கிடைக்காது என்றெண்ணியதெல்லாம் கிடைக்கும். செய்ய முடியாது என்பதெல்லாம் நொடிப் பொழுதில் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒத்த சொல்

சூரியன் - பகலவன்
சந்திரன் - அம்புலி
அழகு - வனப்பு
குதிரை - அசுவம்
துன்பம் - இடுக்கண்
மனம் - சித்தம்
ஆசிரியர் - உபாத்தியாயர்
கடல் - சாகரம்
களிப்பு - உவகை
காற்று - தென்றல்

ஜெ.தரணிஜா, தரம் -3
கரந்தன் இராமுப்பிள்ளை
வித்தி.

## கிளி



கிளி பச்சை நிறம்
அதன் சொண்டு சிவப்பு நிறம்
கிளியின் கழுத்தில்
சிவப்பு நிற வளையம் உண்டு
கிளி பேசும்
கிளி பழம் உண்ணும்
கிளி அழகான பறவை

த.அபிநயாதரம் -2 பி,
இந்து ஆரம்பப் பாடசாலை.

## கற்க வேண்டிய 10 விடயங்கள்

அன்னையிடம் - அன்பைக் கற்க வேண்டும்
தந்தையிடம் - ஒழுக்கத்தைக் கற்க வேண்டும்
ஆசிரியரிடம் - நல்ல கல்வியைக் கற்க வேண்டும்
மதகுருவிடம் - தெய்வ பக்தியைக் கற்க வேண்டும்
மனைவியிடம் - வாழ்க்கையைக் கற்க வேண்டும்
நண்பனிடம் - நட்பைக் கற்க வேண்டும்
அண்ணனிடம் - அறிவைக் கற்க வேண்டும்
குழந்தையிடம் - பாசத்தைக் கற்க வேண்டும்
பெண்ணிடம் - பொறுமையைக் கற்க வேண்டும்
நாயிடம் - நன்றியைக் கற்க வேண்டும்


சௌ.ஜெசிந்தா
அளவெட்டி.

## விடுகதைகள்

* ஒரு விளையாட்டு மைதானத்தில் மூன்று வீரர்கள் அவர்கள் யார்?
**தேங்காயின் மூன்று கண்கள்**
* ஒற்றைக்கால் மனிதனுக்கு வயிறு நிறையமுட்டை அது என்ன?
**மிளகாய்**
* வெள்ளை முத்துக்குள் சிவப்பு ராணி அவள் யார்?
**வாய்**
* வானத்தில் அழுகுக்கோலம் அது என்ன?
**வானவில்**
* மழை காலம் வந்து விட்டால் மகராசி பாட்டெடுப்பாள் அவள் யார்?
**நுளம்பு**
* வயலில் உழுதவன் ஊதியம் வாங்கவில்லை அவன் யார்?
**மண்புழு**
* தலையைச் சீவினால் தாளில் நடப்பான் அவன் யார்?
**பென்சில்**
* புத்தாண்டில் புகுந்த விருந்தாளி தங்குவதோ ஓராண்டு அவன் யார்?
**கலண்டர்**

சி.சுவேத்தா, தரம் -4பி,
புனித ஜோண் பொஸ்கோ வித்தி.

## முறுக்கிய முண்டம்



சுவீடனின் மால்மோ நகரில் உள்ள இக்கட்டடம் கட்டடக் கலைஞர்களின் கற்பனைத் திறத்தாலும் கடும் உழைப்பாலும் உருவாக்கப்பட்டது. ஆங்கிலத்திலே "Twisted torso' என்பதற்கு முறுக்கிய முண்டம் என்று தமிழில் மொழி பெயர்கலாம். நேராக சுவர் எழுப்பாமல் கோணலாக முறுக்கி கட்டப்பட்ட கட்டடம். இந்தக் கட்டடத்தில் குடியேறுவதற்கு சுவீடனில் பெரும் போட்டி இடம் பெற்றதாம்.

சா.ஜிந்துஜா,
கோண்டாவில்.

## பொது அறிவு

★ ஆயிரம் தடாகங்களின் நாடு எது?
பின்லாந்து
★ நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு எது?
நோர்வே
★ உலகின் கூரை எனப்படுவது எது?
திபெத்
★ சூரியன் உதிக்கும் நாடு என அழைக்கப்படுவது?
ஜப்பான்
★ சூரியன் மறையும் நாடு என அழைக்கப்படுவது?
பிரித்தானியா

செ. அனுசன்,
தரம் -5,
கோப்பாய் சரவணபவானந்த வித்தி.

## நன்றியுள்ள கிழவி



பாலூரிலிருந்து புறப்பட்ட இளைஞன் புருஷோத்தமன் மருதூரை அடைந்தபோது நன்கு இருட்டி விட்டது. அன்றைய இரவை எங்கே கழிப்பது என யோசித்தபோது ஒரு சிறு வீட்டைக் கண்டு அதன் கதவைத் தட்டினான்.

சில நிமிடங்களுக்குப் பிறகே கதவைத் திறந்து கொண்டு ஒரு கிழவி வெளியே வந்தாள். அவளைப் பார்த்த அவன், ''பாட்டி! நான் பாலூரிலிருந்து வேலைதேடி இந்த ஊருக்கு வந்திருக்கிறேன். எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது,'' என்றான். கிழவியும் அவனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு ''சரி. உள்ளே வா!'' என்றாள். அவன் உள்ளே போனதும் கிழவி ஒரு தட்டில் உணவை வைத்து அவனிடம் கொடுத்தாள்.


அவனும் அதைச் சாப்பிட்டு விட்டு ''பாட்டி! இன்றிரவு இங்கே இருந்துவிட்டு நாளைக் காலையில் போய்விடுகிறேன். வீட்டில் வேறு யாரும் இல்லையா?'' என்று கேட்டான். கிழவியும் ''என் மகனும் மருமகளும் வெளியூருக்குப் போயிருக்கிறார்கள். நாளைக்குத் தான் வருவார்கள்,'' என்றாள். அவனும் ''சரி, நான் இங்கே ஓரமாகப் படுத்துக் கொள்கிறேன்,'' என்று சொல்லித் தன் மேல் துண்டை விரித்துப் படுத்தான். ஆனால் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. அப்போது கிழவி அங்கிருந்த அலுமாரியைத் திறந்து நகைப் பெட்டியை எடுத்துப் பார்த்துவிட்டு மீண்டும் அதற்குள் வைத்துப் பூட்டிச் சாவியை எடுத்துக் கொண்டு போவதையும் அதைத் தன் தலையணைக்கு அடியில் வைத்துக் கொண்டு படுத்துவிட்டதையும் அவன் கவனித்தான்.

அப்போது அவன் மனம் அந்த நகைப் பெட்டியைத் திருடிக் கொண்டு போய்விட எண்ணியது. இந்தச் சமயத்தில் யாரோ இருவர் ஜன்னலருகே நின்று தாழ்ந்த குரலில் பேசுவதை அவன் கேட்டான். அவர்களில் ஒருவன் ''கிழவி நகைகளை எல்லாம் நகைப் பெட்டியில் வைத்து அலுமாரியில் வைத்திருக்கிறாள். சாவி அவளிடம் இருக்கிறது. அவளை அடித்துப் போட்டுவிட்டு சாவியை எடுத்து அலுமாரியைத் திறந்து நகைப் பெட்டியை எடுத்துக் கொண்டு ஓடிவிடலாம்,'' என்றான்.

அதைக் கேட்ட புருஷோத்தமனின் மனம் கிழவியைத் திருடர்களிடமிருந்து காப்பாற்ற வேண்டும் என எண்ணியது. எனவே மெதுவாக எழுந்து கிழவியருகே போய் அவளை எழுப்பினான். அவளிடம் திருடர்கள் இருவர் திருடவரப்போவதைக் கூறி என்ன செய்ய வேண்டும் என்பதையும் சொன்னான்.

அதன்படி அவன் வாசல் கதவைத் திறந்து கிழவியுடன் வீதிக்கு வந்து நடந்து சென்றான். கதவு திறந்து கிடப்பதைக் கண்டு திருடர்கள் மகிழ்ந்து போய் அந்த வீட்டிற்குள் சென்றார்கள். புருஷோத்தமன் உடனே ஓடி வந்து வாசல் கதவை மூடி வெளிப்புறம் தாளிட்டான். திருடர்கள் வீட்டினுள் அடைபட்டு விட்டார்கள். கிழவி ''திருடன்! திருடன்!!' எனக் கத்தினாள். உடனே அக்கம் பக்கத்தவர் ஓடி வந்தார்கள். அவர்கள் வாசல் கதவைத் திறந்து கொண்டு பட படவென உள்ளே நுழைந்து திருடர்களைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய் காவலதிகாரியிடம் ஒப்படைத்தார்கள்.

அப்போது புருஷோத்தமன் கிழவியிடம் ''பாட்டி! திருடர்கள் வருமுன் உன் நகைகளைத் திருட நானே எண்ணினேன். ஆனால் திருடர்கள் உன்னை அடிக்கப் போவதாகக் கூறியது என் மனதை மாற்றிவிட்டது,'' என்றான். கிழவியும் பரிவுடன் அவன் முதுகைத் தடவி ''தம்பி! நீ மனம் மாறி எனக்கு உதவி செய்தாய். மனம் மாறிய நீ நல்லவனே. என் மகனின் வயலில் நீ வேலை செய்ய ஏற்பாடு செய்கிறேன். வேலைக்காக நீ இனி அலைய வேண்டாம்,'' என்றாள். இளைஞன் ஆனந்தக் கண்ணீர் வடித்து கிழவிக்கு நன்றி செலுத்தினான்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலக்கிய இதிகாச புராணங்கள்

பொதுவாக இலக்கியங்கள் முக்கிய பேசு பொருளாக வாழ்வியலைக் கொண்டிருந்தாலும், இதிகாச புராணங்களைச் சொல்லாமலுமில்லை. இதேபோல் இதிகாசங்களும் முக்கிய பேசுபொருளாக வரலாற்றைக் கொண்டிருக்கிறபோதும், இலக்கிய புராணங்களைச் சொல்லாமலுமில்லை, இவ்வாறே புராணங்களும் தெய்வீக வரலாறுகளையும் வாழ்வியல்களையும் பேசுகிறபோதும் கற்பனையில் மனித வரலாறுகளையும் வாழ்வியல்களையும் உள்ளடக்காமலுமில்லை. எவ்வாறாயினும் இலக்கிய இதிகாச புராணங்கள் ஒன்றாகவும் இருக்கலாம் வெவ்வேறாகவும் இருக்கலாம். இது ஒவ்வொரு பண்பாட்டுத்தளங்களில் சில வேளைகளில் வேறுபட்டுமிருக்கலாம்.

இந்தவகையில் இலக்கியங்கள் பேசும் வாழ்வியல் என்பது வியாபாரம். நுகர்வுப்பொருளாக இருப்பது காமம் (இன்பம்) சுகங்கள் பணம் இல்லாமல் கிடைத்தால் மனிதன் முன்னேறியே இருந்திருக்கமாட்டான். எனவே மனித முன்னேற்றத்துக்கு விழுமியங்களாக இருப்பவை இலக்கியங்கள். இவை சுமைகளையும் இன்ப துன்பங்களையும் வேறுபாடுகளையும் மனித சமூகத்தில் ஏற்படுத்தியுள்ளன. எனினும் காமத்தை கானல் நீர் போன்ற இன்பம் எனச் சமயங்கள் பகர்ந்தாலும், மனித நாகரிகத்தை இயக்கிச் செல்வது இலக்கியங்கள். எனவே இலக்கியத்தில் பொருள் தேடச் சென்ற கணவனின் வருகையை ஏக்கத்துடனும் விரப தாபத்துடனும் எதிர்பார்த்துக் காத்திருக்கும் கற்புடைய மனைவியின் ஏக்கங்கள் மட்டுமல்ல அன்பை மூலதனமாகக் கொண்ட களவியல்களையும் , இன்னும் பலவற்றையும் இலக்கியங்கள் பேசுகின்ற அதே நேரம் பக்தி இலக்கியங்களையும் தருகின்றன.



இதிகாசங்கள் எனப்படும்போது, குடிப் பரம்பலும் சமூக கலாசார மாற்றங்களையும் கண்டறியும் தன்மையுள்ளன. அதுமட்டுமல்லாமல் சாத்தியமான விடயங்களை அசாத்தியமாகக் காட்டி மக்களிடமிருந்து சில சூக்குமங்களை அந்நியப்படுத்தும் நோக்கங்கள் தவிர, பல்வேறுபட்ட உள் நோக்கங்களை வெளிப்படுத்தும் கற்பனைகளுடன் - அன்றைய காலத்தில் நேரடியாக வெளிப்படுத்த முடியாது. விஞ்ஞானக் கருத்துக்களை , கற்பனைகளுடன் கலந்து எதிர்காலச் சந்ததியினர் புதிய விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களை மேற்கொள்ளத் தூண்டும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ளன.





இதை தவறாகப் புரிந்து கொண்டோர், வேற்று கிரகவாசிகளே கடவுள் எனக் கற்பனை செய்யும் பரிதாபங்களும் இல்லாமலில்லை. கடவுள் என்பவர் எங்கும் நிறைந்தவர் எம் உள்ளத்திலும் உள்ளார் என்னும் தத்துவங்களை மனங்கொள்ள வேண்டும். தவிர எங்கள் ஆன்மாவுக்கு உருவம் எப்படி கிடையாதோ அதே போல் கடவுளுக்கும் உருவமில்லை! மேலும் இதிகாசங்கள் சமயங்களை நிறுவனமயப்படுத்தும் சீர் திருத்தங்களைச்செய்திருக்காதவை.

(வளரும்)

■ இராமஜெயபாலன்

“ விஞ்ஞானக் கருத்துக்களை , கற்பனைகளுடன் கலந்து எதிர்காலச் சந்ததியினர் புதிய விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களை மேற்கொள்ளத் தூண்டும் வகையிலும் இதிகாசங்கள் மட்டுமல்ல புராணங்களும் உருவாக்கப்பட் டுள்ளன. இதை தவறாகப் புரிந்து கொண்டோர், வேற்று கிரகவாசிகளே கடவுள் எனக் கற்பனை செய்யும் பரிதாபங்களும் இல்லாமலில்லை.



# வஞ்சனை....

வரமாய் சிறகெடுத்து நீ
வானுயரப் பறந்திட
சிலுவை சுமந்தவர்கள்
எத்தனை பேர்?

ரோஜாவைப் பறித்து நீ
கழுத்தில் மாலையிட
முள்மீது நடந்தவர்கள்
எத்தனை பேர்

முண்டியடித்தோடி நீ
பதவி வென்றிட
உனக்காய் மிதிபட்டோர்
எத்தனை பேர்?
உன் படத்தை நீ
மாட்டி வைக்க
தன் முதுகில்
ஆணியடித்தோர்
எத்தனை பேர்?

மேடையேறிக் கைப்
பிடித்து நீ
உன் புகழ் முழங்க
மூச்சை விட்டோர்
எத்தனை பேர்?

அத்தனை
பேரும் இங்கே
கழுமரத்தில்
நீயோ அங்கு பல்லக்கில்

அ.அஜந்தன்,
கந்தர்மடம்.

# 20[...]

## இல் மிகச் சிறந்த ந[...]

வாழ்க்கையில் இன்ப துன்பங்கள் இரண்ட[...] வாழும் மனிதனுக்கு வாழும் இடம் சுற்ற[...] அமைத்துக்கொள்வது அவசியமாகிறது. அ[...] யோர்க் ஆலோசனை நிறுவ னமான மெர்சர் [...] அனைத்துலக ஆய்வு ஒன்றை மேற்கொண்டி[...]

அதாவது தரமான வாழ்க்கையை அனு[...] நகரங்கள் எவை என அந்த ஆய்வு வெளிப்படுத்[...] கைக்கு அத்தியாவசியமான கல்வி, சுகாதார[...] மற்றும் கலாசாரம் போன்றவைகளை அடிப்பன[...] கொண்டு அந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. அ[...] 3 இடங்களைப் பிடித்த 2012 இன் மிகச் [...] தொகுப்பு .

ஆஸ்திரியா-வியன்னா



சுவிற்ஸர்லாந்தின் மூன்று நகரங்கள் முதல் 10 இடங்களுக்குள் வகுக்கின்றன. அந்த வகையில் சூரிச் 2 ஆவது நிலையில் உள்ளது. சூரிச் சுவிற்ஸர்லாந்தின் மிகப்பெரிய நகரம். அத்துடன் புகழ்பெற்ற சுற்றுலாத்தலமாகவும் உள்ளது. இதற்கு காரணம் புகழ்பெற்ற ஏரிகள் நிறைந்த இடங்கள் மற்றும் உருமும் மலைகள் (rolling hills) இங்கு காணப்படுவதாகும்.



நியூசிலாந்து - ஆக்லாந்[...]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலில் மூழ்கிய லிமோரியா கண்டம்

எம்மில் எத்தனை பேர் லிமோரியாக் கண்டம் ஒன்று இருந்ததாக அறிந்திருக்கிறோம்? அப்படி ஒரு கண்டம் இருந்து பின்னர் அது கடல்கோள் காரணமாக கடலில் மூழ்கியதாக வரலாறுகளின் மூலம் அறியமுடிகின்றது.

இந்தியா, சீனா, உட்பட இலங்கை தொடக்கம் மடகஸ்கார் மற்றும் மாலை தீவு அத்துடன், ஆஸ்திரேலியா அடங்கலாக ஒரு பெரிய கண்டம் இருந்தது. அதாவது இலங்கையில் இருந்து ஆஸ்திரேலியா வரை நடந்தே செல்லும் அளவுக்கு அந்தக் கண்டம் இருந்ததாகக் கூறப்படுகிறது. அந்தக் கண்டத்திலேயே முதல் முதல் மனித இனம் தோன்றியதாகவும், பின்னர் படிப்படியாக அவர்கள் பல நாடுகளுக்குச் சென்றதாகவும் ஆங்கில விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். உலகில் முதல் முதல் தோன்றிய மனிதன் கறுப்பு இன மனிதன்




**லிமோரியாக் கண்டத்தின் வரைபடத்தை நாம் உற்றுநோக்கினால், அது இந்தியா, இலங்கை ஆஸ்திரேலியா அடங்கலாக பரந்து விரிந்து இருந்த ஒரு பெரிய கண்டம். அதில் இலங்கைக்கும் மாலை தீவுக்கும் இடையில், பெரு ஆறு, குமரி ஆறு, மூதாறு என்று பல ஆறுகள் ஓடியதாக புராணத்தில் கூறப்பட்டுள்ளது.**

என்று ஆதார பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

லிமோரியாக் கண்டம் (lemuria) என்று நீங்கள் இணையத்தளங்களில் தேடிப்பார்ப்பீர்களானால், பல சுவாரசியமான விடயங்கள் வெளிவரும். அதாவது ஆணும் பெண்ணும் ஒன்றாகக் கலந்த உருவமுடைய, கடல் வாழ் இனமாக மனிதன் முதலில் தோன்றினான். பின்னர் அந்த கடல்வாழ் பிராணி தரையை அடைய பல மில்லியன் ஆண்டுகள் ஆனதாகவும் கூறப்படுகிறது. முதலை, நண்டு போன்றவை போல கடலிலும் தரையிலும் வாழக் கற்றுக் கொண்ட சில பிராணிகளில் நாமும் ஒருவகை என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். பின்னர் பரிணாம வளர்ச்சி காரணமாக இந்தப் பிராணிகள், கடலைவிட தரையிலேயே அதிகமாக வாழக்கற்றுக் கொண்டன. அதன் காரணமாக இதன் இனப்பெருக்கம், வாழ்க்கை முறை என்பன தரையிலேயே தொடர ஆரம்பித்தது.

ஆணும் பெண்ணும் கலந்த உயிரினம் எப்படியானது என்று பார்த்தால், உயிரினம் ஒன்று உலகில் எஞ்சியதாகக் காணப்படுகின்றது. ஆபிரிக்கக் காடுகளில் வாழும் ஒரு வகை நாக்குளிப் பூச்சிகள் ஆணும் பெண்ணும் உள்ளடக்கியவை எனக் கண்டறியப்பட்டுள்ளன. [illegible]

பெண்ணையோ அல்லது பெண் ஆணையோ நாட வேண்டியது இல்லை, அதுவாகவே கருத்தரிக்கிறது. இவ்வாறு அடையாளம் காணப்படாத ஆண், பெண் இருபாலும் கலந்த உயிரினம் வேறு சிலவும் இந்த உலகில் இருக்கலாம்.


பரிணாம வளர்ச்சி என்பதுடன் இயைபாக்கம் அடைவது என்பதும் மிகவும் முக்கியமான ஒன்று, அது பூமியில் ஆண்டாண்டு காலமாக நடைபெற்று வருகிறது. அதாவது இலங்கையில் வளரும் ஒரு ஆட்டை அல்லது மாட்டை, ஐரோப்பாவிற்குக் கொண்டு வந்தால், அது அங்கிருக்கும் குளிருக்கு ஏற்றவாறு தன்னை இயைபாக்கம் அடையச் செய்யும். அது சில ஆண்டுகள் ஆகலாம் அல்லது, அது ஈன்றெடுக்கும் இயைபாக்கம் நிச்சயம் அடையலாம். ஒரு வகையில் இயை பாக்கம் அடைந்தே தீரும். அதுவே ஆச்சரியம். அதாவது மாட்டின் தோல் கூடுதலான கொழுப்பைச் சேர்த்து, தோலின் தடிப்பை அதிகரித்தல், மற்றையது தோலில் கூடுதலான உரோமங்களை ஓமோன்கள் உருவாக்கும். அந்த உரோமங்கள் கூடுதலாக வளர்ந்தால் குளிரை தாங்கும் சக்தி இயற்கையாகவே உருவாகும். இதுவே இயைபாக்கம் அடைதல். அதாவது ஒன்றை உள்வாங்கிக்கொள்வது எனலாம்.

லிமோரியாக் கண்டத்தின் வரைபடத்தை நாம் உற்றுநோக்கினால், அது இந்தியா, இலங்கை ஆஸ்திரேலியா அடங்கலாக பரந்து விரிந்து இருந்த ஒரு பெரிய கண்டம். அதில் இலங்கைக்கும் மாலை தீவுக்கும் இடையில், பெரு ஆறு, குமரி ஆறு, மூதாறு என்று பல ஆறுகள் ஓடியதாக புராணத்தில் கூறப்பட்டுள்ளது. அதாவது தற்போது கடலில் மூழ்கியிருக்கும் பரப்புகளில் ஒரு காலத்தில் அவை கடலுக்கு மேல் மட்டத்தில் இருந்த வேளை அங்கு ஆறுகள் கூட ஓடியுள்ளன. தற்போது மாலை தீவு என்றழைக்கப்படும் பகுதி ஒரு காலத்தில் 'ஓலை நாடு' என்று அழைக்கப்பட்டுள்ளது. அதாவது லிமோரியாக் கண்டம் என்ற ஒன்று பூமியில் இருந்து பின்னர் அழிந்து போனது என்பதற்குச் சான்றாக உள்ளவை இலங்கைத் தீவு, மாலை தீவு, மற்றும் மடகஸ்கார் தீவுகள் ஆகும். அவை கடலுக்கு நடுவில் இன்னமும் காணப்படுவதே அதன் கடைசி இருப்பின் ஆதாரமாகும்.

பல நூறு வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட ஒரு பெரிய நில நடுக்கம் காரணமாக, லிமோரியாக் கண்டம் துண்டுகளாக உடைந்தது என்றும் அப்போது ஏற்பட்ட சுனாமியால் பல பகுதிகள் கடலில் மூழ்கியதாகவும் கூறப்படுகிறது. அதில் மிகவும் மிக உயரமாக, இலங்கை, மடகஸ்கார் மற்றும் மாலை தீவு போன்ற பகுதிகளே எஞ்சி இருப்பதாகக் கூறப்படுகிறது. அதாவது லிமோரியாக் கண்டத்தில் அதி உயர் மட்டத்தில் இருந்த இடங்களே தற்போது மிஞ்சி இருக்கும் சில நாடுகள். அதற்கு நல்ல எடுத்துக் காட்டு, மாலை தீவுகள்.

(வளரும்)

■ இணையவன்



---

## 012 ...ந்த நகரங்கள்

3

...ள் இரண்டையும் சமாளித்து ...டம் சுற்றம் தரமானதாக ...கிறது. அவ்வகையில் நியூ ...ன மெர்சர் (Mercer) புதிய ...கொண்டிருந்தது.

...ையை அனுப விக்கக்கூடிய ...வளிப்படுத்தியிருந்தது. வாழ்க் ..., சுகாதாரம், பொருளாதாரம் ...ள அடிப்படை காரணி களாகக் ...டுள்ளது. அதன் முடிவில் முதல் ...இன் மிகச் சிறந்த நகரங்கள்

-றஜி



01

முதலாவது இடத்தைப் பிடித்திருக்கும் நகரம் ஆஸ்திரியாவின் வியன்னா நகரம். கடந்த மூன்று வருடங்களாக இது முதல் இடத்தைத் தக்கவைத்துக் கொண்டிருக்கிறது. ஆஸ்திரிய தலைநகரான வியன்னா இசைக்குப் பெயர்போன நகரமாகவும் அறியப்படுகிறது. அந்நகரம் அற்புத கட்டமைப்புடனும் விளங்குகிறது. இது 'கனவுகளின் நகரம்' என வர்ணிக்கப்படுவதோடு நரம்பியல் மருத்துவரான பிரபல Sigmund Freud என்பவரின் ஊரும் இதுவாக உள்ளது. மேலும் ஐக்கிய நாடுகள் மற்றும் OPEC உட்பட பல முக்கிய சர்வதேச அமைப்புகளை வழங்கும் நகரமும் வியன்னாதான்.



சுவிற்ஸர்லாந்து - சூரிச்

02



...லாந்து

03

நியூசிலாந்தின் மிகப் பெரிய நகரமான ஆக்லாந்து மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. பொறாமையூட்டும் இயற்கை அமைப்பைக் கொண்டிருக்கும் இந்த நகர் 11 அழிந்த எரிமலைகளையும் மற்றும் பல தீவுகளையும் கொண்டு இரு துறைமுகங்களுக்கிடையே அமைந்துள்ளது. இங்கு ஒவ்வொரு நபர்களும் உலகின் மிகப் பெரிய படகு உரிமைத்துவம் பெற்றிருக்கின்றனர். மேலும் நியூசிலாந்தில்தான் சிறந்த கல்வியாளர்களில் 37 சதவீதமானோர் இளங்கலை அல்லது அதியுயர் கல்வித் தகைமையைத் தக்கவைத்துக் கொண்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகசாலை

## நூல்– சதாவதானி கதிரவேற்பிள்ளைகடன் வழங்கு கூட்டுறவுச் சங்க வெள்ளி விழா மலர் 1986– 2011




சதாவதானி கதிரவேற்பிள்ளை சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம் , அதன் வெள்ளிவிழா நினைவாக மலர் ஒன்றினை வெளியிட்டுள்ளது. மலரைச் சிறப்பிக்கும் வகையில் சங்கத் தலைவரின் அறிக்கையுடன் சதாவதானி கதிரவேற் பிள்ளை அவர்களின் வாழ்வையும், பணிகளையும் நினைவுறுத் தும் வகையான பல ஆக்கங்களையும் கொண்டுள்ளது. பருத்தித்துறை தம்பசிட்டி புலோலி மேற்கில் தூரநோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட சங்கத்தின் வளர்ச்சிக்கும், பணிகளுக்கும் ஒரு பதிவேடாகவும், வடமராட்சியின் விவசாயம், வடக்கின் பொருளாதாரம் போக்குகளும் வாய்ப்புகளும், நீரிழிவு–தவறான எண்ணங்களும் மேற்கொண்டு செய்ய வேண்டியவையும், வடக்கின் பொருளாதாரம் இல்லாமை இல்லாத நிலை வேண்டும், சமூக அபிவிருத்தியில் சனசமூக நிலையங்களின் பங்கும், மாறிவரும் குடும்ப சமூக நிலையங்களின் பங்கும் எதிர்காலமும், போன்ற பயன் மிக்க கட்டுரைகளும் மலரின் மதிப்புயர்த்துகின்றன. மலரின் பக்கங்கள் சங்கத்தின் கடந்த கால செயற்பாடுகளையும், வண்ணப்படங்களையும் தந்து வெளிப்படுத்துகின்றன.

சங்க உறுப்பினர்களின் நிழற்படங்களுடன் கூடிய விவரங்களும் இணைக்கப்பட்டுள்ளன. இது வெள்ளி விழாவைச் சிறப்பிக்கும் மலர் எனினும் சங்கத்தின் கடந்தகால வளர்ச்சியின் பதிவாகவும் பேணத்தக்கதாகும். உதயன் பத்திரிகையில் தொடர்ச்சியாகச் சங்கத்தின் தொடக்கம், வளர்ச்சி, பணிச்சிறப்பு என்பன குறித்து வெளிவந்தவை மலரின் இறுதியில் அதிக பக்கங்களில் விவரிக்கப்பட்டுள்ளமை சங்கத்தின் மதிப்புயர்த்தும் சேவைக்கான ஆதாரங்களாகும். மலர் பாதுகாக்கப்பட்ட வேண்டியதன் அவசியத்தை மலரின் விடயப்பரப்புகள் வலியுறுத்தி நிற்கின்றன. பாராட்டுக்குரியதாகும்.

மகேஷ்

## நூல்– அமரர் கு.வன்னியசிங்கம் உருவச்சிலை திறப்பு விழா மலர்




கோப்பாய் கோமான் அமரர் கு.வன்னியசிங்கம் அவர்களின் உருவச்சிலை திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. அவ்வேளை விழாவைச் சிறப்பிக்கும் வகையில் ''உருவச்சிலை திறப்பு விழா மலர்'' வெளியிடப்பட்டது. அமரர் வன்னியசிங்கம் தமிழரசுக்கட்சியின் ஆரம்ப காலத்தில் கொள்கை வகுப்பாளராகத் திகழ்ந்தவர். கோப்பாய் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராகி மக்கள் பணி ஆற்றியவர். அவரது மறைவுக்குப் பின்னரான நீண்ட இடைவெளியில் அவருக்கான உருவச்சிலை நிறுவும் முயற்சி பல தடைகளையும் தாண்டி 22.12.2012 அன்று நிறைவேறியுள்ளது. அன்றைய நாளில் வெளிவந்த விழா மலர் கோப்பாய் கோமானின் அரசியல் சாணக்கியம் பற்றியும், அவரது அரும்பெரும் சேவைகள் பற்றியும் எதிர்காலம் அறிந்துணர்ந்து நினைவிருத்திச் செயற்படத் தூண்டும் ஆக்கங்கள் பலவற்றை கொண்டுள்ளது. செனட்டர் அல்ஹாஜ் எஸ்.இசட்.எம்.மசூர் மௌலானா, முன்னாள் ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம், வலி.கிழக்கு.பிரதேச சபைத் துணைத்தலைவர் க.தர்மலிங்கம், பிரதேச சபை உறுப்பினர் அமரர் அ.க.த.கிருஷ்ணராசா, சர்வோதய கலாமன்றச் செயலாளர் சி.கிருஷ்ணப்பிள்ளை, யாழ். மாநகரசபை உறுப்பினர் அ.பரஞ்சோதி, முன்னாள் யாழ்.மாநகர சபை உறுப்பினர் சி.தியகராஜா மறவன்புலவு க.சச்சிதானந்தன் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சோ.சேனாதிராசா, நீர்வை மணி ஆகியோர் அமரர் வன்னியசிங்கம் அவர்களைப் பற்றி எழுதிய கட்டுரைகளுடன் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களின் கவிதையும் இதில் இடம்பெற்றுள்ளது.

கோப்பாய் கோமானின் மறைவின் போது நாடாளுமன்றத்தில் இரங்கலுரை நிகழ்த்திய அவரது அரசியல் சகபாடிகளினது உரைகளும் அமரரின் மனைவி கோமதியினது இரங்கல் உரைப்பகுதியும் நூலைச் சிறப்பிக்கின்றன.

நூலை வெளியிட்ட வன்னியசிங்கம் நற்பணி மன்றத்தின் முயற்சி பாராட்டுக்குரியது. அதன் தலைவர் இளையதம்பி சந்திரன் அவர்களுடன் மன்றத்தினர் வெளியிட்டுள்ள மலர் அமரர் வன்னியசிங்கம் அவர்களின் பணிச்சிறப்பைப் பலரின் மனதிலும் நினைவுறுத்திப் படியவைக்கும் உன்னத முயற்சியாகும்.

மகேஷ்



## நூல்– 'அனலை' காலாண்டு சஞ்சிகை வெளியீடு– அனலைதீவு பொதுநூலகம்

ஊர்காவற்றுறை பிரதேச சபை அனலைதீவு பொதுநூலக வெளியீடான அனலை காலாண்டு சஞ்சிகை வெளிவந்துள்ளது. மாணவர்களிடையே வாசிப்பைத் தூண்டும் வகையிலான ஆக்கங்களைத் தாங்கியவாறு இது வெளிவந்துள்ளது.

# வாழ்க்கைப் பயணம் எப்படி அமைய வேண்டும்




நமது சூழலைப் புரிந்து கொண்டு, எப்படி அதற்கு ஏற்றபடி வாழ்வது? நமக்கு ஏற்றபடி சூழலை எப்படி மாற்ற முயல்வது? எது சரியானது?

வாழ்க்கை என்னும் ஓடம்... வழங்குகின்ற பாடம்... என்ற பாடல் வரிகள் நம் வாழ்வைப் பற்றிய பல உண்மைகளைப் புரிந்து கொள்ள இந்த ஒப்பீடு பயன்படும். ஓடம் என்பது சிறிய படகு. பெரும்பாலும் ஒருவரோ, மிகச் சிலரோ செலுத்திச் செல்லக் கூடியது. நமது வாழ்க்கைப் படகை நாம்தான் செலுத்திச் செல்ல வேண்டும்! நம் ஒவ்வொருவர் வாழ்வும் ஒரு தனிப் படகு, எங்கோ எப்போதோ தொடங்கிப் பயணம் செய்து, எப்போதோ முடியப் போகிற அல்லது மூழ்கப் போகிற ஒரு படகு.

நமது வாழ்க்கைப் படகை நாம் தான் செலுத்தியாக வேண்டும்! எப்படி செலுத்துகிறோம்? எதை நோக்கிச் செலுத்துகிறோம்? எவ்வளவு விரைவாக செலுத்துகிறோம்? என்பதெல்லாம் நம்கையில் தான். ஆனால் அடிப்படையாக ஒன்றை நாம் நிச்சயம் புரிந்து கொள்ள வேண்டும்! ஓடம் அல்லது படகுதான் நம் கையில் இருக்கிறது. ஆனால் நம் வாழ்வு மட்டும் நம் கையில் இல்லை அதை நாம் எப்படியும், எந்தத் திசையிலும், எந்த வேகத்திலும் செலுத்தலாம்.

அதுமட்டுமன்று! நம்மைப் போன்ற பல ஓடக்காரர்கள் அதே ஓடையில் தங்கள் வாழ்க்கைப் படகைச் செலுத்திக் கொண்டே இருக்கிறார்கள். நம்மைச் சுற்றிப் பயணம் செய்யும் இவர்கள் கூட எப்படித் தங்கள் ஓடங்களைச் செலுத்த வேண்டும் என்று நாம் கட்டளை போட முடியாது. அவரவர் போக்கில் அவரவர் பயணம்!

இந்த ஓடங்களுக்கு நடுவில்தான் நாம் பயணம் செய்தாக வேண்டும். இப் பின்னணியில் நம்முடைய வாழ்க்கைப் படகை நாம் எப்படி ஓட்டுகிறோம்? நாம் ஒவ்வொருவரும் எப்போதும் ஒரே மாதிரி நம் வாழ்க்கைப் படகை செலுத்துவது இல்லை. சில நேரம் வேகம், சில நேரம் சோர்வு. இது இயற்கைதான். ஆனால் பெரும்பாலும் நம் வாழ்வை ஒரு பழக்கமான வழித்தடத்தில்தான் நகர்த்துகிறோம்.

பலரும் தங்கள் வாழ்க்கையை ஓடையின் போக்கிலேயே விட்டுவிடுகிறார்கள்! விதி விட்ட வழி என்று ஒதுங்கிக் கொள்கிறார்கள். வெந்ததைத் தின்றுவிட்டு விதி வந்தால் சாகிறார்கள்! சிலர் ஓடையும் காற்றும் சரியாக வரட்டும்... ஓடையில் மற்றப் பகுதிகளின் கூட்டம் குறையட்டும்... அமைதியான சாதகமான சூழல் உருவாகட்டும்... அதற்குப் பிறகு பயணம் செய்யலாம் என்று கரையில் ஒதுங்கிக் காத்துக் கிடக்கிறார்கள்!

அலை ஓய்ந்த பின் குளிக்கப் போகிறவர்கள் இவர்கள். அலை எப்போது ஓய்வது? இவர்கள் எப்போது வாழ்வாங்கு வாழ்வது?

சிலர் படுவேகமாகப் பயணம் செய்ய முயல்கிறார்கள். அதிவேகமாக முன்னேறுகிறார்கள்! பல சமயங்களில் பெரும் வெற்றியும் பெறுகிறார்கள். ஆனால் பல நேரங்களில் ஓடை இவர்களின் ஓடத்தையே கவிழ்த்து விடுகிறது. நேரடியாகவோ, மறைமுகமாகவோ பல எதிர்பாராத சூழல்களையும், வெள்ளங்களையும், புயல்களையும் சமுதாய ஓடை கொண்டு வரக்கூடும். அதிக வேகம் அதிகமான விபத்துக்களுக்கும் இடமளிக்கும்.

சிலர் தங்கள் வாழ்க்கைப் படகு எந்தப் பக்கம், எப்படிப் போக வேண்டும், என்றெல்லாம் கனவு காண்பார்கள். திட்டம் போடுவார்கள். ஆனால் இவர்கள் வாழ்க்கைப் படகை, அப்பா, அம்மா, ஆசிரியர், நண்பர்கள், குடும்பத்தினர் என்று மற்றவர்கள் எல்லாம் செலுத்த வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். அவரவர் சுமையை அவரவர் சுமந்தால் போதாதா? மற்றவர்களையே சார்ந்திருப்பவர்கள் எப்படித் தங்கள் வாழ்க்கையில் முன்னேற முடியும்? சிலர் தத்தம் வாழ்க்கைப் படகை செலுத்துவதை விட்டுவிட்டு மற்றவர்களைத் திருத்தவும் வழிகாட்டவும் முயற்சி செய்துகொண்டிருப்பார்கள்.

ஊருக்காகப் போராடுகிறேன் என்று சொல்லிப் பலநேரம் தங்கள் வாழ்க்கைப் படகையே கவிழ்த்து விடுவார்கள்!

வேறு சிலர் மற்ற வாழ்க்கைப் படகுகளைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல், தங்கள் சுயநலம் ஒன்றையே மையமாக வைத்து முன்னேறுவார்கள். இந்தச் சுய நலமிகளுக்கு நட்புக் குறையும். பகைமை பெருகும். காலப் போக்கில் இவர்கள் பகைமைப் புயலில் சிக்கித் தவிப்பார்கள். மிகச் சிலர்தான், சமுதாய ஓடையின் நெளிவு சுழிவுகளை நன்றாகப் புரிந்துகொண்டு, தங்கள் வாழ்க்கைப் படகையும் செம்மையாக வழிநடத்தி, தங்களைச் சுற்றி இருப்பவர்களையும், சார்ந்து இருப்பவர்களையும் அரவணைத்துக் கொண்டு, தங்கள் வாழ்க்கை ஓடத்தில் வெற்றிகரமாகப் பயணம் செய்கிறார்கள்.

நம்முடைய வாழ்க்கைப் பயணமும் அப்படிப்பட்டதாக அமைய வேண்டுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழ்வினை மாறலாம்

உன் வாழ்க்கையில் என்னென்ன நடக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறதோ அதுவே விதி.

உனக்கு விதிக்கப்பட்டது எதுவோ அது நடந்தே தீரும்.

அனைவருக்கும் பிறப்பு ஒரே மாதிரித்தான் அமைகிறது.

எல்லோரும் அன்னையின் வயிற்றில் தான் உற்பத்தியாகிறார்கள்.

ஆனால் வாழ்க்கைப் பாதை ஒரே விதமாக அமைவதில்லை.

நம் இந்து மதம் விதியை வலியுறுத்திக் கூறுகிறது.

**"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று**
**சூழினும் தான்முந் துறும்"**

**என்கிறார் வள்ளுவர்.**

**'ஊழ்' எனப்படும் விதியைப் பற்றி ஒரு அதிகாரமே இயற்றியுள்ளார் அவர்.**

**ஊழ் என்பது முற்பிறப்பில் செய்த வினைகளின் பயனே.**

**'ஊழ்வினை உறுத்துவந் தூட்டும்' என்கிறது சிலப்பதிகாரம்.**

முற்பிறப்பின் பாவமே இந்தப் பிறப்பின் விதியாக மாறுகிறது.

இதனைச் சமண சமயக் காப்பியமான சிலப்பதிகாரமும் ஒப்புக் கொள்கிறது.

ஜாதகம் எழுதும் போது முதலில் ஒரு வாசகம் எழுதுவார்கள்.

அவ் வாசகம் இந்தக் கருத்தை மெய்ப்பிக்கிறது.

**"ஜனனீஜென்ம செளக்யானாம் வர்த்தனீ குலசம்பதாம்**
**பதவீ பூர்வபுண்யானாம் லிக்யதே ஜன்மபத்ரிகா"**

என்பதே அது.

மனிதன் எத்தனையோ இயந்திரங்களை உருவாக்குகிறான். அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு செயலுக்காக உருவாக்கப்பட்டவை. அதாவது, இயந்திரங்களின் செயற்பாடுகள் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட ஒன்று. அதுபோல், மனிதனின் வாழ்க்கையும் நிர்ணயிக்கப்பட்டதே.

விதியின் சாலையில் தான் நாம் பயணம் செய்தாக வேண்டும். பாதை மாறிச் செல்ல நம்மால் இயலாது. அது முடியவும் முடியாது. இராமன் வில்லை முறித்ததும் சீதையை மணந்ததும் விதிக்கப்பட்டதே.

மகாபாரதத்தில் தர்மன் சூதாடியதும், பாஞ்சாலி அவமானப்படுத்தப்பட்டதும், அவள் சபதம் ஏற்றதும், போர் நடந்ததும் அனைத்தும் விதியே.

விதிதான் இரண்டு இதிகாசங்களுக்கும் உயிர்நாடி.

இவ்வாறு விதியைப் பற்றி சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால் இறைவனிடத்தில் உன்னை முழுமையாக ஒப்படைத்துவிட்டால் விதி வேலை செய்வதில்லை.

உனக்கு இறைவன் பொறுப்பேற்றுக் கொள்கிறான்.

பதினாறு வயதில் ஆயுள் முடிய வேண்டும் என்பதுதான் மார்க்கண்டேயரின் விதி.

ஆனால் இறைவன் அருளால் அவருக்குக் கிடைத்தது, என்றும் இளமையாக இருக்கும் பேறும் சாகா வரமும்.

இறைவன் நினைத்தால் ஊழ்வினை மாறலாம்.

விதி என்பது, ஒன்பது கோள்களின் மூலமாக, அவற்றின் ஆணைக்குட்பட்டுதான், தன் வேலையைச் செய்கிறது. நீ இறைவனைச் சரணடைந்தால் இந்த ஒன்பது கோள்களும் உனக்கு நன்மையே செய்கின்றன. இது திருஞான சம்பந்தப் பெருமான் அருள் வாக்கு. கோளறு பதிகம் அவர் பாடியது.

இதைப் படித்தாலே நவகோள்களும் உனக்கு அருள் புரியும்.

இறைவன் அருளாலன்றி விதியை வெல்ல முடியாது.

**"வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்**
**மிகநல்ல வீணை தடவி**
**மாசறு திங்கள் கங்கை முடி மேலணிந்தென்**
**உளமே புகுந்த அதனால்**
**ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி**
**சனிபாம் பிரண்டு முடனே**
**ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல**
**அடியா ரவர்க்கு மிகவே"**

கோளாறு பதிகம்

**நாளென் செயும் வினை தானென் செயும் எனை நாடிவந்த**
**கோளென் செயுங்கொடுங்**
**கூற்றென் செயுங்குமரேசரிரு**
**தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந்**
**தண்டையுஞ் சண்முகமுந்**
**தோளும் கடம்பும் எனக்கு முன்**
**னேவந்து தோன்றிடினே.**

அருணகிரிநாதர்



இந்த அடியார்கள் சொல்பவை முற்றிலும் உண்மையே.

**பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்**

# வாசகர் திருமுகம்

## எமது வாழ்வோடு மட்டும் நிற்காமல் அடுத்து வரும் பரம்பரைக்காக பாடுபடுவோம்

**யாழ்.மாவட்டப் பொதுச் சந்தை ஒன்றுக்கு அண்மையில் சென்றிருந்தேன. சந்தையில் ஒரு பகுதியில் சனநெரிசல் தடல்புடலாக இருந்தது. விடயம் என்னவென்று அறிவோம் என அருகிலே சென்று பார்த்த போதுதான் விடயம் தெரிந்தது. தென்னிலங்கையில் இருந்து மின்சாரப் பொருள்கள் விற்பனை நடைபெற்ற வண்ணமிருந்தது.**

எமது உறவுகளும் நெரிபடும் வாங்கிச் செல்கின்றனர். தற்போதைய நவீன காலத்தில் மின் பாவனைப் பொருள்கள் வாங்குவது சாதாரண விடயம். இதில் வேடிக்கை என்னவெனில் சந்தை வாயிலில் எமது அடுத்து வரும் சந்ததிக்கு உதவும் மா, பலா, தென்னை, தேசி போன்ற பல பயன் தரும் மரங்களை வைத்துக் கொண்டு வியாபாரி தவம் இருக்கின்றார்.

யாராவது ஒருவர் விலை கேட்பதும் ஒரு சிலர் ஏதோ வைத்துப் பார்ப்போம் என்று அரை மனதுடன் வாங்குவதுமாக இருந்தது. அப்போதுதான் எனக்குள் பெரிய வேதனையும் கவலையும். இந்த மின்சாரப்பொருள்கள் எமது வாழ்வுக்கிடையிலும் பழுதடைந்து வீசி எறியும் நிலையில் எமது பொதுமக்கள் இந்தப் பயன்தரும் மரங்கள் எமது அடுத்த சந்ததியின் வாழ்வுக்கு உதவும் கனி மரங்களுக்குக் காட்டவில்லையே!

எமது மூத்தோர் அன்று தமது காலத்தில் பயன் தரு மரங்களை நாட்டியதால் தான் இன்று நாம் பழவகைகள், தெங்குப் பொருள்களை உண்ணமுடிகின்றது. அதுவும் இல்லாமல் இன்று பல குடும்பங்கள் தென்னைச் செய்கை (அன்று மூதாதையர் இட்ட) பலா பலன்களால் தமது வாழ்வாதாரத்தை குடும்பத்தைக் காப்பாற்றி வருவது மறுக்க முடியாது.

ஆனால் இன்று நம்மில் அதிகமானோர் எமது வாழ்வோடு மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற மனநிலையுடன் வாழ்வது வேதனைக் குரியது. எமது தாயகத்தில் இன்று எத்தனையோ பயன்தரு வளங்கள் அழிவடைந்து போயிருப்பதை எம்மால் காணமுடிகிறது. எனவே அழிந்து போன பயன்தரும் வளங்கள் இனி மீளப்போவதில்லை.

அழிந்து போன வளங்களுக்குப் பதிலாக நாட்டுக்காக அடுத்த சந்ததிக்காக ஒவ்வொரு வரும் ஏதோ ஒரு விதமாகப் பயன்பெறக் கூடிய கனிவளம், தென்னைவளம், பனைவளம் போன்ற நீண்டகாலப் பயிர்களைச் சலிப்பில்லாது நமக்கு ஏன் இவைகள் உதவப்போகின்றனவா என்ற நினைப்பில்லாது எமது முன்னோர்கள் காட்டிய பாதையில் சென்று வளர்ந்து வரும் பிறப்பெடுக்கும் எமது பச்சிளங் குழந்தைகளுக்காகச் சற்றுப் பாடுபடுவோம். நாம் பட்ட துன்ப துயரம் எமது எதிர்கால சந்ததியும் அனுபவிக்க விட ஒருபோதும் இடமளியாமல் அவர்களின் வருங்காலத்தை, எதிர்காலத்தை நல்லபடி அமைத்து நாம் விடைபெறுவோம். வாழட்டும் எமது அடுத்த தலைமுறை.

**மு.அருமைச்சந்திரன்,**
**வரணி வடக்கு.**

## ஒலி பெருக்கிகளின் தொல்லை தீருமா?

பல காலமாக நீக்கப்பட வேண்டிய ஒரு விடயம் தற்போது மிக விரைவாக எமது கலாசாரம் போல் வளர்ந்து வருகின்றது. அதுதான் ஒலிபெருக்கிக் கலாசாரம். வெளிநாடு செல்லும் எமது சொந்தங்கள் தமது அன்பளிப்பாக ஒலிபெருக்கியைக் கோயில் களுக்கு கொடுத்துவிட்டுச் சென்றுவிடுகி றார்கள்.

இங்கே மக்கள் எழும்பும் முதலே அதிகாலையில் மக்களுக்காகப் பாட்டுகள், மேளச் சமா, மந்திரங்கள் ஒலிக்கவிடப்படும். எந்தவொரு வயதுப் பிரிவினரையும் கவனத்திலெடுப்பதில்லை. எல்லாம் மக்களுக்காக என்ற எண்ணம். அத்தோடு பூசைக்கான முதல் ஆள் வந்தவுடனேயே பாட்டு ஒலிக்க விடப்படும். இவ்வாறு செய்வதால் சமயப் பற்று மக்கள் மத்தியில் பரப்பப்படுகிறது என்றுதான் நினைக்கிறார்கள் போல. உண்மையில் நடப்பது என்ன?

பல மாணவர்கள் படிக்க முடியாமல் திண்டாடுகிறார்கள். நோயாளர்கள் தூங்க முடியாமல் தவிக்கிறார்கள். வேலை செய்துவிட்டுக் களைப்பு நீங்கப் படுத்துறங்கும் பல்வேறு தொழில்புரிவோரும் இடையிலே எழுப்பப்படுகிறார்கள். இரைச்சல் இல்லாத சாதாரணமான சூழல் காணப்படாமை பெரும் வேதனை தருகிறது.

இதனைத் தாங்க முடியாது துன்புறுவோர் கோயிலில் இவ்வாறு செய்வது மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது என சொல்லப் பயப்படுகிறார்கள். காரணம் கடவுள் குற்றமாகி விடும் என்றும், ஊருடன் பகைப்பது போல் ஆகிவிடும் என்றும், தமது இயலாமையால் இன்னும் இரண்டு மூன்று மணித்தியாலத்தில் இது முடிந்துவிடும்தானே என்றும் மனதைச் சமாதானப்படுத்தி வாழ் கிறார்கள்.

உண்மையில் இதனைக் கட்டுப்படுத்த வேண்டியவர்கள் அதுபற்றி முறைப்பாடுகள் கிடைக்காமையால் அதுபற்றி அலட்டிக் கொள்வதில்லை. ஒலிபெருக்கி பாவிப்பதென்றால் முதலில் காவல் துறையில் அனுமதி எடுக்க வேண்டுமல்லவா? நீதிமன்றங்களுக்கும் இவ்வாறான பிரச்சினைகள் செல்வதில்லை.

இப்போது மிகவும் போட்டியாக இந்த ஒலி பெருக்கி பாவனை வளர்ச்சியடைந்து வருகின்றது. அத்தோடு யாரும் எதுவும் கேட்காமையால் அது சட்டப்படியும் எமது கலாசாரத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம் போலும் ஆகிவிட்டது. அப்படி கேட்டாலும் ''என்ன இந்தக் கோயிலில் மட்டுமா போடுகிறோம்.

போய் எல்லா கோயிலிலும் கேளுங் கோவன்'' என்று சட்டம் வேறு. அவ்வளவுக்கு கோயில்களின் ஒலிபெருக்கியின் ஆதிக்கம் பெருகிவிட்டது.

ஆகையால் தயவு செய்து இதனை கட்டுப்படுத்த சம்பந்தப்பட்டோர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**சமூகத்தில் அமைதியாக வாழ**
**விரும்புவோரில் ஒருவன்.**

## 'ஒலிபரப்பு உபத்திரவம்' பற்றிய 'உதயன்' செய்திக்கு வரவேற்பு

ஆலய ஒலிபெருக்கிகளால் அவதியுறும் மாணவர்கள் என்ற அண்மைய உதயன் செய்தி சுன்னாகம் கந்தரோடையிலிலுள்ள ஓர் ஆலயத்துக்கும் மிகவும் பொருத்தமாக அமைந்திருப்பதையிட்டு இங்குள்ள மாணவர்களும் கல்விச் சமூகமும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். அவர்களில் சிலர் அந்தச் செய்திப் பகுதியைப் பிரதிகள் எடுத்து சம்பந்தப்பட்டவர்களுக்கு விநியோகித்து வரவும் தொடங்கி யுள்ளனர்.

குறிப்பிட்ட ஆலயத்தில் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் இந்த ஒலி பெருக்கிச் சீர்கேடு அதிகாலையிலேயே ஆரம்பமாகி விடுகிறது. யார் முறையிட்டும் சம்பந்தப்பட்டவர்கள் கேட்பதாயில்லை. இப்பொழுது உதயன் செய்தியாலும் மாணவர்களின் நலன் விரும்பிகளின் முயற்சியாலும் சம்பந்தப்பட்டவர்கள் சற்று 'அடக்கி வாசிக்க' முன்வந்துள்ளதாகத் தெரிகிறது. இந்த அமைதி நீடிக்க வேண்டும். பழைய குருடி கதையாகி விடக்கூடாது என்பதே இங்குள்ளவர்களின் எதிர்பார்ப்பாகும்.


**பொ.சண்முகநாதன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையூட்டல்கள்

## யதார்த்தமாக இருக்கவேண்டும்

**கடந்த சனிக்கிழமை வெளியான விடியாத இரவுகள் இருந்ததில்லை என்ற அண்ணன் வளவனின் கடிதத்துக்கான தம்பி பல்லவனின் பதில்**



அன்பின் அண்ணா வளவனுக்கு வணக்கம். தங்கள் கடிதம் கண்டு மனம் தேறுதல் அடைந்தேன். தடுமாறும் மனதுக்கும் சமூகத்துக்கும் தங்கள் வார்த்தைகள் சற்று நம்பிக்கை தருவனவாக உள்ளன. இருந்தபோதும் எல்லாவற்றையும் தத்துவார்த்தங்களுடன் தொடர்புபடுத்தி போர் தின்ற பூமி ஒன்றில் இவை நிச்சயம் மீதமாகும் என்ற பொது முடிவின் அடிப்படையில் சிந்திக்க விளைவது எதிர்காலம் குறித்த தங்கள் நம்பிக்கைகளுக்கு கூட ஆபத்தாகி விடுமோ என்ற அச்சம்தான் என்னைப் போன்றவர்களின் மனதில் அகலப்பரந்துள்ளது.

எங்களுள் பலர் போர் நேரடியாகத் தின்று முடித்து ஏப்பம் விட்ட உயிர்களைப் பற்றியே உலகச் சபைகளின் கவனத்துக்காக உரத்துக் குரல் கொடுத்த வண்ணமுள்ளோம். ஆனால் போர் குடித்த இளம் குடும்பத் தலைவர்களின் உயிர்களில் இருந்து உருவாக வேண்டிய எங்கள் தமிழ்க் கருக்கள் பிறக்காமலேயே இன அழிப்புச் செய்யப்பட்ட விடயத்தை நாம் நினைப்பதேயில்லை. வீழ்ந்த தலையொன்றுக்கு தலா இரண்டு புதிய உயிர்களை படைக்கும் வல்லமை இருக்கும் என்ற முடிவில் எண்ணிப் பார்த்தால் தமிழனின் இன எண்ணிக்கை இன்றைய நிலவரப்படி இரண்டு லட்சம் இழக்கப்பட்டுள்ளது. இது போன்று தான் நிலம் விழுங்கிய அத்தனை உயிர்களின் வழியான இனப்பிரசவங்களையும் கணக்குப் பார்த்தால் இறுதிப் போர் இன்றுவரை தின்று முடித்த தமிழன் உயிர்கள் ஐந்து லட்சங்களைத் தொடும்.

சரி இந்தக் கணக்கை மறந்து தற்போதைய சமூகக் கணக்கைப் பார்த்தால் அண்ணா தாங்கள் சொல்வதைப் போல் பல விதமான புதிய புதிய கணக்குகள் புதுப்புதுப் சூத்திரங்களின் வாயிலாக எங்கள் மண்ணில் நாளாந்தம் நிறுவப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தாங்கள் கூறுவதைப்போல் எண்ணுவதைப்போல் சமூக நம்பிக்கையை இழப்பது ஆபத்தானது என்ற கருத்தில் நானும் உடன்படுகின்றேன். ஆனாலும் நம்பிக்கையை தர வேண்டியவர்கள் நம்பிக்கையை விதைக்க வேண்டியவர்கள் பலரே இன்று நம்பிக்கையீனங்கள் ஏற்படக் காரணமாக இருப்பதையும் நம்பிக்கைத் துரோகங்களை அரங்கேற்றுவதையும் காணும் போது தாங்கள் சொல்வது போல் எப்படி நம்பிக்கை கொள்ள முடியும்.

இணையத் தளங்களின் தேடுதலில் பாலியல் தொடர்பான தேடலில் இலங்கை முதலிடம் என்ற புள்ளி விவரம் வெளிவந்தபோது, இங்கிலாந்தில் என்னோடு பணிபுரியும் வெள்ளையர்கள் நீயும் இலங்கையன் தானே என வினவிய போது-அவர்கள் வினவுதலில் ஏதோ உட்கருத்து இருப்பதாக உணர்ந்தேன்.

நாம் என்னதான் தமிழீழம் என கத்தினாலும் புலத்தில் எம்மை மற்றையவர்கள் இலங்கையராகத்தான் பார்க்கின்றார்கள். அவர்கள் வினவுதலின் அர்த்தத்தை புரிந்து கொண்டு மின்சாரம் இல்லாத எங்கள் இருண்ட வீடுகளின் கதைகளைச் சொல்லி தமிழர்களாகிய நாம் இணையத் தேடல் முன்னிலைக்கு காரணமாக மாட்டோம் என வாதிட்டேன். ஆனால் நீ உனது கடிதத்தில் குறிப்பிட்ட, குப்பைகளைக் கடன் வாங்கி முதற் பக்கங்களை நிரப்பும் தமிழ் இணையத்தளங்களின் கேவலத்தனம் அப்போது என் அடிமனதை நெருடித் தின்றது ஏனோ உண்மைதான்.

இப்படியான இணையத்தளங்கள் தான் நமது நம்பிக்கையை சிதையவைக்கும் மூலக்காரணிகள் என்ற உனது கருத்தை மறுத்துரைக்க என் மனது துணியவில்லை. அதேவேளை அண்ணா உனக்கு தமிழ் இணையத் தளங்கள் குறித்த இன்னொரு முக்கிய விடயத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். நீ சொல்வதைப் போல் அல்லது உன்னைப் போல் நம்பிக்கையை வளர்க்க நினைக்கும் அவர்கள் யதார்த்தத்துக்கு முரணாண நம்பிக்கைகளையும் எம் மக்கள் மத்தியில் விதைத்து வருகின்றார்கள். ஈழத் தமிழர்களாகிய எம்மை, அழித்த பின்னும் ஆழ வேரூன்றி அகலப் பரந்து கிளைவிட்ட யூத இனத்தவர்களுடன் ஒப்பிட்டு கதைகளையும் கருத்துக்களையும் கட்டுரைகளையும் எழுதி வருகின்றார்கள். இவ்வாறான நம்பிக்கையூட்டல்களும் மோசமான விளைவுகளையே தரவல்லன. நாங்களும் யூதர்களும் ஒன்றல்ல. இன்று உலகம் யூதர்களின் அறிவுக்கு முன்னால் மண்டி யிட்டுக் கிடக்கின்றது. இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற விஞ்ஞானியான ஐன்ஸ்டினும் கணினி உலகைக் கட்டி ஆளும் பில் கேட்சும் யூதர்கள் தான். உலகத்தின் அதிகளவான விஞ்ஞானிகளும் குறிப்பாக நோபல் பரிசுகளை வென்ற அனேக விஞ்ஞானிகளும் யூதர்கள் தான். அவர்களும் நாங்களும் ஒன்றல்ல. அறிவுச் சுரங்களாக நிமிரும் யூத அறிஞர்களும் தமது அறிவை தமது இனத்தின் விடிவுக்காக அர்ப்பணிக்கின்றார்கள்.

நாங்கள் அவர்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவர்கள். எங்கள் அறிவாளிகள் என அடையாளப்படுத்தப்படும் பலர் செய்யும் வேலைகளை அண்ணா உங்கள் கடித்திலும் கடுமையாக சாடியிருந்தீர்கள்.

இந்த நிலையில் நாங்களும் யூதர்களும் ஒன்று என்ற பாணியில் தாங்கள் விரும்பும் வகையில் ஊட்டப்படும் நம்பிக்கைகளும் பயனற்றவை என்பதோடு ஆபத்தானவையும் கூட என்பதை தாங்கள் உணர்வீர்கள் என நம்புகின்றேன்.

கடுமையான போர் நடந்த தேசங்களை எமக்கான உதாரணங்கள் ஆக்க வேண்டும் என தாங்கள் கூறும் கருத்துக்கு நான் மேலே சொன்ன விடயம் முரணானதாகத் தோன்றலாம். போர் விழுங்கிய ஒவ்வொரு தேசத்தினதும் பின்னணிகளும் வேறானவை. அவர்களின் அனுபவங்கள் எமக்கான அனுபவங்கள் ஆகிவிட முடியாது. ஒவ்வொரு களத்துக்கும் வெவ்வேறு தளங்கள் இருக்கும். அது போன்று போருக்குப் பின்னான விளைவுகளுக்கும் பல வேறுபட்ட உந்தல்கள் இருக்கும். அதுமட்டுமன்றி பூகோளவியல் மற்றும் கால வர்த்தமான அடிப்படைகளிலும் ஒவ்வொரு போருக்குப் பின்னான விளைவுகளும் நிச்சயம் வேறுபட்டிருக்கும். அது போன்றே பிறழ்வுகளை கட்டுப்படுத்துவதற்கான பொறிமுறைகளும் வேறான தாகவே இருக்கும். இது பற்றி நாம் நிச்சயம் சிந்தித்தாக வேண்டும். நாம் எமது சமூகப் பிறழ்வு மாற்றத்தைக் கட்டுப்படுத்த என்ன செய்தோம் என்ற கேள்வியை எமக்குள்ளே எழுப்ப வேண்டிய தருணம் இது.

என்னோடு பொழுது போக்குக்காக அரசியல் பேசும் புலம்பெயர் நண்பர்களிடம் நான் அவர்களின் போராட்டப் பங்களிப்புக் குறித்து கேள்வி எழுப்பும் போது தாங்கள் இறுதிப் போர் வரை டொலர்களையும் யூரோக்களையும் பிராங்குகளையும் அள்ளிக் கொடுத்ததாக அடுக்குகின்றார்கள். இறுதிப் போரை நேராக அனுபவித்த எனக்கு அவர்கள் சொல்வதை ஆதாரங்களுடன் உணர்ந்து கொள்ள முடியவில்லை. இருந்தும் அவர்கள் சொல்வதை நம்பி சரி போரை நடத்த பணம் கொடுத்த நீங்கள் போர் தின்ற பூமியை புனரமைக்கவும் விடுதலை வேண்டித் தர போரிட்டவர்களின் அடுத்த வேளை உணவுக்காகவும் ஏன் இப்போது பணம் அனுப்பக்கூடாது என வாதிடுவேன். அவர்கள் எல்லோருமே என்னிடம் எப்போதும் ஒரு கேள்வியைத் தான் கேட்கிறார்கள் ''யாரை நம்பிக் கொடுப்பது? யாரிடம் கொடுப்பது?'' இது எனக்கும் புரியவில்லை. தெரியவில்லை.

அண்ணா எமக்கு முன் இப்போது உள்ள மிகப்பெரும் கடமை பிறழ்வுறும் எமது சமூகத்தைக் காப்பாற்ற அதற்கான காரணங்களை கண்டறிந்து நீ சொல்வதைப்போல் நிவாரணங்களைத் தேட வேண்டியதே. உன்னைப் போல் நிலத்திலுள்ள சமூக அக்கறை கொண்டவர்கள் இதற்காக ஏன் இணைந்து செயற்படக்கூடாது. எல்லோரும் இன்று சுயநலமிக்கவர்களாக மாறி குறுகிய வட்டத்துக்குள் சிந்திப்பது எமக்கு பெரிய பின்னடைவுகளை ஏற்படுத்தும். பொது நலமாகச் சிந்திக்கும் தலைமுறையாக உனது பிள்ளைகளையும் அவர்கள் வயதொத்த சிறார்களையும் வளர்த்தெடுக்க வேண்டும். நீ சொல்லும் தேடிப் பொறுக்கும் நம்பிக்கை விதைகளை அவர்களைக் கொண்டு விதைக்க வேண்டும். எம்மைத் தக்க வைக்க இது தான் வழி. தக்கவைக்க என்ற சொல் உனது பார்வையில் வேறானதாக இருக்கலாம். போர்ப் புயல் எமக்கு மேலே போர்த்திப் போயுள்ள சகதியை மறைக்க நினைக்காது ஈரம் காய்ந்து உடலோடு அது ஒட்டி இறுக முதல் கழுவவேண்டும். ஐம்பதுகளில் இருந்த எமது சமூக அசைவின் வேகத்தை இப்போதுள்ளதுடன் ஒப்பிட முடியாது. காலம் வெகுவேகமாக எம்மை கபளீகரம் செய்து வருகின்றது. இதை உணர்ந்து கொள்வாய் என நம்புகின்றேன்.

சமூகத்தைப் பற்றிப் பேசிப்பேசியே எமக்கொரு குடும்பம் இருப்பதை நம்மில் பலர் மறந்து விடுகின்றோம் அல்லவா? பிள்ளைகள் மற்றும் அண்ணி நலமாக இருப்பார்கள் என நம்புகின்றேன். எனது அன்பை மட்டுமல்ல கருத்துக்களையும் அவர்களிடம் பரிமாறு. மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம்.

**அன்புத் தம்பி பல்லவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org